**கோ**யிலின் வெக்கை தாளாமல்
குளிரூட்டப்பட்ட பிரசவ அறைகளில்
குடிபுகுந்தன பெரியாச்சிகள்

வீச்சரிவாளை வீசிவிட்டு
கைக்கு அடக்கமான
கத்தரிக்கோலுக்கு மாறினாலும்
வயிற்றைக் கிழித்து
குழந்தை பிடுங்கும்
தொழிலை விடவில்லை பெரியாச்சி

மகப்பேறு சிறப்பு மருத்துவம்
படித்ததிலிருந்து
பெரியாச்சிகள்
தலைவிரித்து ஆடுவதுமில்லை
நாக்கை நீட்டி
கோரமுகம் காட்டுவதுமில்லை
கடைசி நேரத்தில்
சிரித்துக்கொண்டேதான்
சொல்கின்றன
சுகப்பிரசவம் சாத்தியமில்லை

■ முழுநிலவன்



# பிரசவ விருதியில் பெரியாச்சி

புதிய தமிழர் கண்ணோட்டம்

அக்டோபர் 2008 6-10

கட்டண விவரம்

| | |
|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 120/- |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. 300/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 1200/- |

**பெரும்பான்மை தேசிய இனம்** *16*
*காசி ஆனந்தன்*

**கிறித்தவர்களுக்கெதிரான சங்பரிவாரங்களின் மதவெறித்தாண்டவம்** *18*
*க.அருணபாரதி*

**சிறையாளிகளுக்குப் பொதுமன்னிப்பு** *21*
*தமிழ்த் தேசியன்*


**மருத்துவர்களும், மதக்குருக்களும் - 3** *27*
*ம.செந்தமிழன்*

**அமெரிக்க வங்கிகள் மூடல் சந்தை நாயகத்தின் தோல்வி** *30*
*கி.வெங்கட்ராமன்*

**பாவெளி** *34*

**இசுரேல் இந்திய இராணுவக்கூட்டு** *35*
*செவ்வேள்*

**நிறைகுறை** *40*



**தமிழக மலைஎல்லைகளை ஆக்கிரமிக்கும் கேரளம்** *24*
*கே.எம்.அப்பாஸ்*



**அணு ஒப்பந்தம் அமெரிக்க இந்திய முதலாளிகள் கொள்ளைக்கே** *- 6*
*கி.வெங்கட்ராமன்*



**இராசபட்சயின் கோமாளித்தனமும், பிரபாகரனின் இராசதந்திரமும்** *- 11*
*பெ.மணியரசன்*

ஆசிரியர் - வெளியீட்டாளர் :
**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர் :
**கி.வெங்கட்ராமன்**

குழு உறுப்பினர்கள் :
**கவிபாஸ்கர்**
**க.அருணபாரதி**

வடிவமைப்பு
**ஓவியர் புகழேந்தி**
**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு
**காவிரி கணிப்பொறி,**
**தஞ்சை.**

தொடர்புக்கு
**புதிய தமிழர் கண்ணோட்டம்,**
2ஆம் தளம், 20/7, முத்துரங்கம் சாலை,
தியாகராயர் நகர், சென்னை - 17.
போன் : 24348911
மின்னஞ்சல் : **tamizhdesiyam@gmail.com**
தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி
இணைய தளம்
**www.tamizharkannotam.blogspot.com**

# மோதலை முறியடிக்கும் மோதல்

மதச்சண்டை என்பது சமூகக் குழுக்களிடையே நடைபெறும் தன்னலப் போட்டிக்கான சண்டையே. மனித குல மேன்மைக்கான தங்களின் தத்துவத்தைப் பரப்ப நடக்கும் போட்டி போல் இது வெளிக்காட்டிக் கொள்கிறது.

ஒட்டுமொத்த மனித குல உயர்வுக்கும், அமைதிக்கும் தங்களின் மதக்கொள்கையே சிறந்தது என்று ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களும் உரத்துப் பேசுகின்றனர். அவர்கள் தம் தம் மதக் குழுவினரிடையே, ஒருவரை ஒருவர் ஏமாற்றாதிருத்தல், ஒருவரையொருவர் இழிவுப்படுத்தாதிருத்தல், ஒருவரை ஒருவர் சுரண்டாதிருத்தல், தங்களுக்குள் உயர் தாழ்வு பாராட்டாமல் இருத்தல், தங்களுக்குள் களவு செய்யாதிருத்தல், கொலை செய்யாதிருத்தல் போன்ற உயர் பண்புகளை இதுவரை கடைபிடித்திருக்கிறார்களா?

எந்த மதத்தவரும் இந்த வினாவுக்கு ஆம் என்று விடை சொல்ல முடியாது. தங்களுக்குள்ளேயே சமத்துவத்தையும், அறத்தையும் நிலைநாட்டமுடியாத மதவாதிகள், பிறமதத்தவரை ஈர்த்து, அவர்களிடம் உயர் பண்பை விதைக்கப் போவதாகச் சொல்வது ஏமாற்று வேலை.

எல்லா மதங்களிலும் பெரும் பணக்காரர்கள் இருக்கிறார்கள்; அன்றாடங் காய்ச்சிகள் இருக்கிறார்கள். எல்லா மதங்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள்; கயவர்கள் இருக்கிறார்கள். எல்லா மதங்களிலும் அறவாழ்வு நடத்துவோர் இருக்கிறார்கள் ; பிறரை வஞ்சித்து வாழ்வோர் இருக்கிறார்கள். திருடர்கள், கொலைகாரர்கள், பொய் பேசிப் பிழைப்போர் எல்லா மதங்களிலும் இருக்கிறார்கள்.

எனவே , குறிப்பிட்ட ஒருமதம் பரவினால், மனித குலம் அறவாழ்வுக்குத் திரும்பி விடும்; மனித மாண்பு உச்சத்திற்குப் போகும் என்று கூறுவதற்கு எந்தச் சான்றும் கிடையாது. அப்படியாராவது கூறினால் அது பொய்.

உளவியல் பற்றுக்கோடாக மனிதர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறது. கடவுள் இருக்கிறார் என்று கையும் மெய்யுமாகக் காட்டு என்று அவர்கள் கேட்பதில்லை. எப்பொழுதுமே கற்பனையில்தான் மனிதன் முழுமையைக் காண்கிறான். நடைமுறையில் எதுவும் முழுமையாக இருப்பதில்லை.

கற்பனைக் கடவுள் முழுமையாக்கப்பட்டிருக்கிறார். இந்தக் கடவுள் நம்பிக்கையை ஒவ்வொரு சமூகக் குழுவும் தனது நலனுக்குப் பயன்படுத்திக்கொள்கிறது. அந்தந்த மதச் சமூகத்திலும் உள்ள தன்னலவாதிகள், தங்களின் வாழ்க்கைப் போட்டியில் மதத்தை ஓர் ஆய்தமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இந்துமதம் , இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம் உள்ளிட்ட அனைத்து மதங்களும் மேற்கண்ட வரையறுப்புகளுக்கு உட்பட்டவையாகும்.

மனிதர்கள் கடவுளை நம்புவதற்கோ, ஒரு மதத்தைப் பின்பற்றுவதற்கோ தடை போட முடியாது ; தடைபோடக்கூடாது.

இந்த அடிப்படையில் மதம் மாற உரிமை இருக்க வேண்டும். ஆனால், மதம் மாற்ற உரிமை இருக்கக் கூடாது. இன்னொரு மதத்தில் இருப்பவரைத் தன் மதத்துக்கு மாற்றுவதை ஓர் இயக்கமாகச் செய்ய யாருக்கும், எந்த அமைப்பிற்கும் உரிமை இருக்கக் கூடாது.

மதம் தன்னளவில் ஒரு சனநாயக நிறுவனம் அல்ல. சாரத்தில் அது ஒரு சர்வாதிகார அமைப்பு. ஓர் அரசியல் கட்சிக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளையும் ஒரு மதத்திற்கு அளிக்க வேண்டியதில்லை.

ஓர் அரசியல் கட்சி சமூகம், அரசு, பொருளியல், பண்பியல் உள்ளிட்ட அனைத்துக் கூறுகளுக்கும் நிர்வாகப் பொறுப்பேற்க முன் வருகிறது. மதம் அப்படி எந்தப் பொறுப்பும் ஏற்பதில்லை. மனிதர்களின் மனதோடு மட்டுமே அது பேசுகிறது. எனவே அந்த வரம்பிற்குட்பட்டு அதற்கு சனநாயகம் வழங்கினால் போதும்.

ஆனால் தேர்தல் சனநாயகம் மனித பலவீனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி ஆதாயம் தேட அரசியல் கட்சிகளுக்கு வாசல் திறந்து வைத்துள்ளது. மதச்சார்பின்மை என்ற சிறந்த கொள்கைக்கு மறுவரையறை கொடுத்தன தேர்தல் கட்சிகள்.

அரசு, அரசியல், கல்வி ஆகியவற்றில் மதம் தலையிடக்கூடாதுஎன்பது தான் மதச்சார்பின்மை. ஆனால் அனைத்து மதங்களையும் வரை முறையின்றி செயல்பட அனுமதிப்பதுதான் மதச்சார்பின்மை என்றன. அரசு, அரசியல், கல்வி மூன்றிலும் அனைத்து மதங்களும் தலையிட அனுமதிப்பதுதான் மதச்சார்பின்மை என்று ஆக்கின.

அரசு, மதத்திற்கு மூக்கணாங்கயிறு போடுவதற்கு மாறாக, மதம் அரசுக்கு மூக்கணாங்கயிறு போட்டது. மதக்கட்சிகள் உருவாயின.

ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை போன்றவை தேர்தலில் நிற்காத அரசியல் அமைப்புகளாக உருவாயின. பின்னர் முஸ்லிம் லீக், பாரதிய ஜனதாக் கட்சி (சனசங்கம்) போன்றவை உருவாயின. மத அமைப்புகளுக்கிடையே தீவிரப் போட்டிகள் நடக்கின்றன.

மதமாற்றம் செய்வதில் கிறித்தவ அமைப்புகள் தீவிரம் காட்டுகின்றன. வெளிநாட்டுப் பணம் இதற்காக ஏராளமாகச் செலவிடப்படுகிறது. இதற்குப் போட்டியாக பழங்குடி மக்களை இந்து மதத்திற்கு மாற்ற ஒரிசா கந்தமால் பகுதியில் எழுந்தார் கருணானந்தா. இவர் முரட்டுத்தனமான இந்துத்துவாவாதி . அண்மையில் இவர் கொலை செய்யப்பட்டார். இவரைத் தாங்கள் கொன்றதாக மாவோயிஸ்ட்டுகள் அறிவித்தனர்.

இக்கொலையை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, பஜ்ரங்தளம், விசுவ இந்து பரிசத் போன்ற இந்துத்துவா - பார்ப்பனிய அமைப்பினர் அப்பாவிக் கிறித்தவர்களைத் தாக்குகின்றனர். தேவாலயங்களைச் சூறையாடுகின்றனர். ஒரிசாவில் இந்துத்துவ - வெறியர்கள் - கலவரத்தால் இது வரை 26 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒரிசாவில் கிளப்பப்பட்ட இந்துத்துவா வன்முறை கர்நாடகத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்போது தமிழ் நாட்டில் இந்துத்துவா வெறியர்கள் வன்முறைகளை அரங்கேற்றி வருகின்றனர்.

நாமக்கல் , கோவை, கன்னியாகுமரி , தர்மபுரி மாவட்டங்களில் திடீரென இந்துத்துவாக் குண்டர்கள் தேவாலயங்களில் புகுந்து மதச்சின்னங்களை, சிலைகளை உடைத்துச் சின்னா பின்னப்படுத்துகின்றனர். எந்த ஆத்திரமூட்டலோ, முன்பகையோ இல்லாத இடங்களில் தேவாலயங்களைத் தாக்குவது, அங்குள்ள ஊழியர்களைத்தாக்குவது என்பது இதுவரை தமிழ்நாட்டில் நினைத்துப்பார்க்க முடியாத அரம்பத்த ( ரவுடி)த் தனமாகும்.

பார்ப்பனியத்தையும் மூட நம்பிக்கைகளையும் திறனாய்வு செய்து பேசும் பொதுக்கூட்டங்களில் புகுந்து கலவரம் விளைப்பது என்ற அளவிற்கு இந்துத்துவா வெறியர்கள் அரம்பத் தனத்தில் இறங்கியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருவரங்கத்தில் தந்தை பெரியார் சிலையை உடைத்தனர்; அண்மையில் திருத்துறைப்பூண்டியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கூட்டத்தில் திரைப்பட இயக்குநர் சீமான் பேசிய போது தகராறு செய்தனர். சென்னையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய பெரியார் பிறந்தநாள் விழாக்கூட்டத்தில் தகராறு செய்துள்ளனர். கோவையில் பெரியார் தி.க. கூட்டத்தில் சீமானையும் பெ.தி.க. தோழர்களையும் தாக்கினர். இந்துத்துவா அமைப்பினர், முண்டா தட்டி வீதிக்கு வந்துவிட்டார்கள்.

இனிய சொற்கள் இனிப் பயன்படாது. இந்துத்துவாக் குண்டர்களை அந்தந்தக் களத்தில் சந்திப்பதொன்றே, சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும்.

இதற்குத் தோள்வலிமையும் வேண்டும்; அறிவு வலிமையும் வேண்டும்..

அறிவு வலிமைபெற அதற்கெனத் தத்துவம் வேண்டும். தமிழ்த் தேசியத்துடன் இணைந்த மதச்சார்பின்மையே மதவாத அமைப்புகளை எதிர்கொள்வதற்குரிய சிறந்த அறிவாய்தம்.

இந்துவாக இருந்தாலும், இஸ்லாமியராக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும் தமிழர்கள் அனைவரும் தமிழ்த்தேசத்தில் சம உரிமை படைத்தவர்கள். வழிபாட்டுரிமை என்ற அளவில் மட்டுமே மதங்கள் செயல்படவேண்டும். அரசு, அரசியல், பாடத்திட்டம் ஆகியவற்றில் மத நிறுவனங்கள் தலையிடக்கூடாது.

தேர்தல் கட்சிகளுக்கு ஒரே தத்துவம்தான் இருக்கிறது. பதவிக்கான வாக்குகள் வாங்க மது, சூது, களவு, கொலை உள்பட எல்லாத் தீமைகளையும் பயன்படுத்தலாம் என்பதே அத்தத்துவம் . எனவே, அவை மதத்தைப் பயன்படுத்தி வாக்குகள் வாங்கவே முற்படும்.

மதமும் சாதியும், தமிழ்ச் சமூகத்தைத் தனித்தனி முகாம்களாக மாற்றிவிட்டன. இம்முகாம்களுக்கிடையே ஒன்றின் மீது மற்றொன்றிக்கு அவநம்பிக்கையும், அச்சமும் நிலவுகின்றன.

இந்த மதமுகாம்களுக் கிடையேயும் சாதி முகாம்களுக்கிடையேயும் வாக்குகளைக் கைப்பற்றவே தேர்தல் கட்சிகள் முயலும்.

தமிழ்ச் சமூகத்தை ஒன்றிணைக்க தமிழ்த் தேசிய வீரர்கள் புறப்படவேண்டும்.

சமூக அக்கறையுள்ள இளைஞர்கள் தமிழ்த்தேசியத்தை நெஞ்சிலேந்தி மத உரிமையைக் காப்போம்; மதவாதத்தை முறியடிப்போம் என்று முழங்க வேண்டும்.

# அணு ஒப்பந்தம்
# அமெரிக்க – இந்திய முதலாளிகள் கொள்ளைக்கே

**கி.வெங்கட்ராமன்**

அமெரிக்க வல்லரசின் இளைய பங்காளியாக இந்தியாவைப் பிணைத்து விடுவதற்கு நெஞ்சாரப் பொய் கூறுபவர்தான் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் என்பது ஐயத்திற்கு இடமின்றி அம்பலமாகி இருக்கிறது. இந்திய - அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தம் பற்றி அமெரிக்க அரசு வெளியிடும் தகவல்கள், உலக வல்லாதிக்கப் போர் அணிவகுப்பில் அமெரிக்காவுடன் இந்தியாவும் உறுதியாக இணைந்து விட்டதைத் தெளிவாக்குகின்றன.

வட அமெரிக்கப் போர்ப் பொருளியலுடன் இந்தியப் பொருளியலை இணைத்து விடுவது, எல்லைப் பகுதிகளில் மட்டுமின்றி, நாட்டுக்குள்ளும் பதட்டநிலை, தேசிய இனங்கள் மற்றும் அடித்தட்டு மக்களியக்கங்கள் மீது ஒடுக்குமுறை போன்ற தொடர் விளைவுகள் உருவாக இருக்கின்றன.

இந்திய - அமெரிக்க அணு ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனைகளை எடுத்துக்காட்டி, இது இந்தியாவை வட அமெரிக்க வல்லரசின் காலடியில் கட்டிப்போடக்கூடியது என்று திறனாய்வாளர்கள் கூறியபோதெல்லாம் “அதெல்லாம் கிடையாது” என்று அடித்துக் கூறினார்கள் ஆட்சியாளர்கள். மாறாக “இந்த ஒப்பந்தத்தின் மூலம் நமது அணுவியல் தனிமை ( Nuclear Isolation) தகர்க்கப்பட்டுள்ளது. இந்தியா அணுவியல் உலக நீரோட்டத்தில் ஒன்றிணைந்து விட்டது” என்று மன்மோகன்சிங் மார்தட்டினார்.

இந்திய - அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தம் 2007, ஆகஸ்ட் 3-இல் கையெழுத்தானது. அது அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றால்தான் செயலுக்கு வரமுடியும். அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு இந்த 123 ஒப்பந்த ஆவணம் முன் வைக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் குறித்த தனது விளக்கக் குறிப்புடன் 10.09.2008 அன்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ்புஷ் அந்த ஆவணத்தை அதிகாரப்பூர்வமாக முன் வைத்தார்.

***“ஒப்பந்தத்தின் உறுப்பு 5(6) இந்தியாவுக்கு நீடித்த அணு எரிபொருள் வழங்கல் குறித்து சில அரசியல் வாக்குறுதிகளை அளிக்கிறது. இவை சட்டப்படி நம்மைக் கட்டுப்படுத்தும் நிபந்தனைகள் ஆகா” என்று புஷ் அதில் குறிப்பிட்டார்.***



இதற்கு முன்னதாக, அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளியுறவுத் துறை நிலைக்குழு 123 ஒப்பந்தத்தை ஆய்வு செய்தது. அந்த ஆய்வின்போது நிலைக்குழு அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்திடம் ஒப்பந்தம் குறித்த 45 கேள்விகளை முன் வைத்தது. அமைச்சகம் தனது பதிலை கடந்த சனவரி 16,2008-ல் அளித்தது. நிலைக்குழுவின் தற்போதைய தலைவர் ஹாவர்ட் பெர்மன் கடந்த 2008, செப்டம்பர் 2-ஆம் நாள் இப்பதில்களை வெளிப்படுத்தினார். அது '*வாசிங்டன் போஸ்ட்*' நாளேட்டில் (03.09.2008) வெளியாயிற்று. அமெரிக்க வெளியுறவுத் துறை இணையத் தளத்திலும் வெளியானது.

அணு ஒப்பந்தம் குறித்த நமது திறனாய்வு உள்ளிட்ட பல தரப்பினரின் திறனாய்வுகள் சரியானவை என்பதற்கு அமெரிக்க நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கை சான்று கூறுகிறது.

"*அணுக் கழிவை மறுசுழற்சி செய்து புளூடோனியத்தைப் பிரித்தெடுப்பது இந்திய அணுஆற்றல் திட்டங்களுக்கு மிக உயிரான தேவை ஆகும். இதைத் தடுத்து விட்டால் யுரேனியத்திற்கு நிரந்தரமாக அமெரிக்காவைச் சார்ந்திருக்கும்படி செய்துவிடலாம். இதைத்தான் மன்மோகன்சிங் அரசின் இந்திய - அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தம் சாதித்திருக்கிறது*" என்றும் "*ஈரான் அணுஆயுதம் தயாரிக்கிறது, பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது. என்று அமெரிக்க அரசு 'கவலை' கொள்ளுமானால், அந்தக் கவலையில் இந்திய அரசும் பங்கு கொள்ள வேண்டும். வடகொரியா குறித்தோ, வெனிசுவேலா பற்றியோ இவ்வாறு அமெரிக்காவிற்கு கவலை ஏற்பட்டால் இந்தியாவும் 'கவலைப்' படவேண்டும். இந்நாடுகள் மீது அமெரிக்கா படையெடுத்தால் இந்தியாவும் அதற்கு அடியாள் வேலை பார்க்க வேண்டும். அவ்வாறு செய்யாது போனால் அமெரிக்காவின் நலனுக்கு எதிரானது என்று கூறி ஒப்பந்தத்தை ரத்து செய்யும் உரிமை அமெரிக்காவிற்கு உண்டு. ஒப்பந்தத்தின் உறுப்பு 13 கூறுவது இதுதான்*" என்றும்

*இந்திய அணு உலைகள் அமெரிக்காவின் நிரந்தரக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் என்றும்,*

இந்த "ஒப்பந்தம் இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையடக்கமான கூட்டாளியாக மாற்றும்" என்றும் நாம் இவ்வொப்பந்தம் பற்றி திறனாய்வு செய்தோம். (விரிவிற்கு காண்க. *தமிழர் கண்ணோட்டம்*, செப்டம்பர் 2007) பல தரப்பிலிருந்தும் விரிவான திறனாய்வுகள் பல ஏடுகளில் வந்துள்ளன.

'துண்டைப்போட்டுத் தாண்டி' சத்தியம் செய்யாத குறையாக, இத்திறனாய்வுகளையெல்லாம் ஒரேயடியாக மறுத்து அடித்துப்பேசினார் பிரதமர் மன்மோகன்சிங்.

"*அமெரிக்காவிலிருந்தும், அணு எரிபொருள் வழங்கும் நாடுகளிலிருந்தும் பெறப்படும் அணு எரிபொருள்களைப் பயன்படுத்திய பிறகு மீண்டும் அவற்றை மறு சுழற்சி செய்தும், செறிவூட்டியும் பயன்படுத்திக்கொள்வதற்குத் தேவையான எல்லா தொழில்நுட்பங்களையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வழங்கும். ஒப்பந்தத்தில் அவை தெளிவாக இடம் பெற்றுள்ளன.*"

என்று மன்மோகன்சிங் இந்திய நாடாளுமன்றத்தில் 2007, ஆகஸ்ட் 13 அன்று கூறினார். அவர் கூறியது அப்பட்டமான பொய் என்பதை அமெரிக்க அரசின் அறிக்கை தெளிவாக்குகிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அந்நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ள பதில் இச்சிக்கலில் ஒப்பந்தம் என்ன கூறுகிறது என்பதை விளக்குகிறது. குறிப்பாக கேள்வி எண்.5-க்கு அமைச்சகம் அளித்துள்ள விளக்கம்.

"*அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீண்டநாள் கொள்கைக்கு இணங்கவே ஒப்பந்த நிபந்தனை உள்ளது. இந்த ஒப்பந்தத்தின் வழியாகவோ, இதற்கு வெளியிலோ அமெரிக்க அரசு இந்தியாவுக்கு அணு எரிபொருள் இருவழிப் பயன்பாட்டுக்கான கருவிகள் எதையும் வழங்காது. செறிவூட்டல், மறு சுழற்சி, கனநீர் தொழில் நுட்பம் தொடர்பான எந்தவகை கருவி மாதிரிகளையோ,கட்டமைப்புகளையோ, செயல் வழிமுறைகளையோ இந்தியாவுக்கு வழங்காது*" என்கிறது.

" மேலும் கேள்வி எண்.6-க்கான பதில், "*இது தொடர்பாக இந்தியாவுக்கு உதவும் வகையில் இந்திய அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தத்தில் திருத்தம் ஏதும் செய்யும் எண்ணமும் அமெரிக்க அரசாங்கத்திற்கு இல்லை*" எனக் கூறுகிறது.

அதாவது மீண்டும் மீண்டும் யுரேனியத்திற்கு அமெரிக்காவை எதிர்பார்க்கும் நிலையில் இந்தியாவை வைக்கிறது இந்த ஒப்பந்தம். கன்னியாகுமரி மணவாளக்குறிச்சி மணலிலிருந்து புளூடோனியத்தைப் பிரித்தெடுத்து அணு உலைகளுக்குப் பயன்படுத்தும் உரிமையும் இதன் மூலம் தடுக்கப்படுகிறது.

இந்திய - அமெரிக்க ஒப்பந்தம் இனி தடையற்ற அணு எரிபொருள் வழங்கலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக மன்மோகன் சிங் உறுதி கூறினார். 2007 ஆகஸ்ட் 13-ல் நாடாளுமன்றத்தில் இச்சிக்கல் குறித்துப்பேசிய அவர்.

" அனைத்து நாட்டு அணு ஆற்றல் முகமையுடன் இந்தியாவிற்கான தனிப்பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபின் இந்திய அணு உலைகளுக்குத் தடையற்ற அணு எரிபொருள் வழங்கல் உத்தரவாதம் செய்யப்படும். தனது எதிர்காலத் தேவைக்கு அணு எரிபொருளை சேமித்து வைத்துக்கொள்ளும் உரிமையும் இந்தியாவுக்குக் கிடைக்கும். ஒருவேளை இதில் ஏதும் தடங்கல் ஏற்பட்டால் அவற்றைச் சரிசெய்து கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கவும் இந்தியாவுக்கு உரிமை

> “ இசுலாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டணி என்ற பெயரால் அமெரிக்க வல்லரசின் ஆதிக்க அணிவகுப்பில் இந்தியா இணைக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை.
>
> இந்தியப் பொருளாதாரம் படைஉற்பத்திப் பொருளியலாக மாறிப்போகும். மக்கள் நலப்பணிகள் புறக்கணிக்கப்பட்டு அரசின் பொருளியல் முனைப்பு போர் வகையாகத் திருப்பி விடப்படும்.
>
> அங்கங்கே குண்டு வெடிப்பும், பதட்டங்களும் தீவிரப்படும். ஏற்கெனவே இது தொடங்கி விட்டது. ”

வழங்கப்படும் ” என்றார்.

“ சரிசெய்துகொள்ளும் நடவடிக்கை (Corrective Measures) ” என்பதற்கு அமெரிக்கா அணுஎரிபொருள் வழங்க மறுத்தால், வேறு நாட்டிடம் வாங்கி தடையற்ற வழங்கலை உறுதிசெய்துகொள்வது என்று பொருளாகும்.

இந்திய - அமெரிக்க அணு ஒப்பந்தத்திற்கு அடிப்படையாக அமைந்த புஷ் - மன்மோகன் கூட்டறிக்கையைத் திறனாய்வு செய்தபோதே இதுபற்றி எச்சரித்தோம். அமெரிக்கா தடையற்ற வழங்கலை ஏற்கவில்லை; ரஷ்யா, பிரான்சு போன்ற வேறுநாடுகளிடம் அணு எரிபொருள் வாங்கும் உரிமையையும் தடுக்கும் என்றோம்.

இச்சிக்கல் குறித்து 2006 ஏப்ரல் *தமிழர் கண்ணோட்டம்* இதழில் சுட்டிக்காட்டப்பட்ட நமது எச்சரிக்கை நினைவு கூரத்தக்கது. *“ இந்தியாவின் குடிமைத் துறை அணு சக்தித் திட்டங்கள் குறித்த பட்டியலில் இந்திய அரசு தன் விருப்பத்திற்கு ஏற்ப எந்த மாறுதலையும் இனி செய்யமுடியாது. அமெரிக்க அரசும் ஒத்துக்கொண்டால்தான் செய்ய முடியும். குடிமைத்துறை அணு உலைகளுக்குத் தேவையான யுரேனியத்தைத் தட்டுப்பாடின்றி வழங்கும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளதைப் பெரிய முன்னேற்றமாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் இந்தியாவின் அணு சக்தித் திட்டங்கள் நிரந்தரமாக அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செலுத்தப்படுகின்றன என்பதே உண்மை. ஏனெனில், அமெரிக்க அரசின் இசைவின்றி, வேறு எங்கும் போய் தன் விருப்பத்திற்கு இந்தியா அணு சக்தி எரிபொருள்களை வாங்க முடியாது”* என்று எடுத்துக் கூறினோம்.

நமது திறனாய்வு சரி என்பதையும், மன்மோகன் நாட்டு மக்களிடம் பொய் சொல்லியிருக்கிறார் என்பதையும் அமெரிக்க அரசின் ஒப்புதல் வாக்குமூலம் உறுதி செய்கிறது.

நிலைக்குழுவின் கேள்வி எண்.15-க்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அளித்துள்ள பதில் வருமாறு.

*“ ஒப்பந்தத்தின் உறுப்பு 5(6)-ல் கூறப்பட்ட தடையற்ற அணுஎரிபொருள் வழங்கல் குறித்த நமது உறுதிமொழியின் பொருள் என்ன என்பதை இந்திய அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது என்றே நம்புகிறோம். சந்தை வாய்ப்புகளில் ஏற்படும் இடையூறுகளைத் தாண்டி, தடையின்றி எரிபொருள் வழங்குவோம் என்பதுதான் இதற்குப் பொருள். ”*

*“இந்தியா அணுவெடிப்புச் சோதனை நடத்தினாலோ, நமது தேசப் பாதுகாப்புக்கு கவலை தரும் நடவடிக்கையில் இறங்கினாலோ நாம் தொடர்ந்து அணுஎரிபொருள் வழங்கிக்கொண்டிருக்க மாட்டோம். மேலும் ஏற்கெனவே வழங்கிய எரிபொருள்களைத் திரும்பத் தருமாறு வலியுறுத்துவோம்.”*

சரி, இவ்வாறு அமெரிக்கா கைவிரித்தால் வேறு நாடுகளிடம் எரிபொருள் வாங்கிக்கொள்ள சுதந்திரம் இந்தியாவுக்கு உண்டா? இல்லவே இல்லை.

அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் அமைப்பு (Nuclear Supplier Group) இந்தியாவுக்கு விதித்துள்ள நிபந்தனை இதனைக் கூறுகிறது. இவ்வமைப்பு விதித்துள்ள நிபந்தனை 3(c) மற்றும் 3(d) ஆகியவை *‘அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடு ஒன்று இந்தியா வாங்கும் அணுஎரிபொருள் குறித்தோ, கருவிகள் குறித்தோ ஐயம் எழுப்புமானால் உடனே இவ்வமைப்பு கலந்தாலோசனையில் ஈடுபட வேண்டும். இந்த கலந்தாய்வு முடியும்வரை வழங்கும் நாடு இந்தியாவுக்கான வழங்கலை நிறுத்தி வைக்க வேண்டும்’* எனக் கூறுகின்றன.

அந்த நிபந்தனையை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, அமெரிக்கா தான் நேரடியாகவோ நியூசிலாந்து, டென்மார்க் போன்ற குட்டி நாடுகள் வழியாகவோ வழங்கல் நாடுகள் அமைப்பில் ஆட்சேபனை எழுப்பினால் இந்தியா பிரான்சிடமிருந்தோ, ரஷ்யாவிடமிருந்தோ, வேறு நாடுகளிடமிருந்தோ அணு எரிபொருள் வாங்க முடியாது.

அமெரிக்க நாடாளுமன்ற ஒப்புதலுக்காக முன் வைக்கப்பட்டுள்ள இந்திய - அமெரிக்க அணுஆற்றல் ஒப்பந்த சட்டவரைவு விதி 102(b) இதனை வலியுறுத்துவது கவனிக்கத் தக்கது.

அமெரிக்காவின் ஆக்கிர மிப்புப் போர் அணிவகுப்பில் இடம் பெற்று அடியாள் வேலை பார்க்கும் என்று இந்திய அரசு ஓலை எழுதிக்கொடுத்த பிறகுதான் அணு எரிபொருள் வழங்கலுக்கே வழங்கல் நாடுகள் அமைப்பு ஒப்புதல் வழங்கியது.

இவ்வாறான வெளிப் படையான 'ஒத்துழைப்புக் கடிதம்' எழுதிக்கொடுக்க இந்திய அரசு தயங்கியபோது அயர்லாந்து, நியூசிலாந்து போன்ற எரிபொருள் வழங்கல் சக்தியற்ற குட்டி நாடுகளைப் பயன்படுத்தி வியன்னா பேச்சு வார்த்தையை அமெரிக்கா இழுத்தடித்தது.

இறுதியில் 2008, செப்டம் 5-ஆம் நாள் இந்திய அரசின் சார்பில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் குமார் முகர்ஜி அறிக்கை கொடுத்தார். அதற்கு முன்பாக 2008 ஆகஸ்ட் 18-ல் இந்திய அணு ஆற்றல் கழகத் தலைவர் அணில் ககோட்கர் அணு எரிபொருள் வழங்கல் நாடுகள் அமைப்புக்கு அளித்த உறுதிமொழிக் கடிதத்தையொட்டியே இந்த அறிக்கை அமைந்தது. இது நிபந்தனைகளில் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

*"இந்தியா அணு வெடிப்பு சோதனை எதுவும் இனி செய்யாது என உறுதியளிக்கிறது. செறிவூட்டல் மற்றும் மறு சுழற்சி தொழில்நுட்பமோ, கருவிகளோ அவை இல்லாத நாடுகளுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கு உலக நாடுகள் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு இந்தியா துணைசெய்யும் என உறுதி அளிக்கிறது".*

என்று இக்கடிதம் கூறுகிறது.

இரண்டாவது கூறப்பட்ட உறுதிமொழி ஈரானைக் குறிவைப் பதாகும். ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது என்பதை மேற்கண்ட வாசகங்களில் சொல்வது அமெரிக்க அரசின் வழமையான உத்தி ஆகும். இதே வாசகங்களை வட கொரியாவுக்கு எதிராகவும் பயன்படுத்துகிறது. இதற்கு முன்னர் ஈராக்கிற்கு எதிராக இதே வாசகங்களில் குற்றம் சுமத்தியது. ஐ.நா.வைத் தீர்மானம் போட வைத்தது. பிறகு போர் தொடுத்தது.

இப்போது ஈரான் மீது போர் தொடுக்க தீவிரமான தயாரிப்பில் அமெரிக்க வல்லரசு இறங்கி உள்ளது. இந்தியா அதில் இணைந்துள்ளது.

இது குறித்து ஜார்ஜ் புஷ் அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ள விளக்கக் குறிப்பு எடுத் துரைக்கிறது.

"ஈரானுக்கு எதிராக அமெரிக்க அரசும், உலக நாடுகளும் மேற் கொள்ளும் முயற்சிகளில் இந்தியா முழுமையாகவும், துடிப்புடனும் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறதா?"

என்ற கேள்விக்கு புஷ் பதிலளிக்கிறார்.

*"அணு ஆயுதத் திட்டம் குறித்து ஈரானை வழிக்குக் கொண்டு வர அமெரிக்கா மேற்கொள்ளும் பணிகளில் அனைத்து முனைகளிலும் இந்தியா ஒத்துழைத்து வருகிறது"* என்கிறார்.

இது குறித்து பிரணாப் முகர்ஜி 2008 செப்டம்பர் 8 மற்றும் 9 ஆகிய நாட்களில் விரிவான கடிதம் கொடுத்துள்ளதாக புஷ் குறிப்பிடுகிறார்.

ஏற்கெனவே 2008, ஜூனில் இந்திய அரசுக்கும், அமெரிக்க அரசுக்கும் இடையில் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. 2005 ஜூலை 18 மற்றும் 2006 மார்ச் 2 கூட்டறிக்கைகளில் இது இன்னும் விரிவாக்கப்பட்டுள்ளது. இப்போது அமெரிக்கா சென்றுள்ள மன்மோகன் சிங் மேற்கண்ட கூட்டறிக்கைகளில் சொல்லப்பட்ட சில இராணுவ ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளார். அமெரிக்காவில் அதற்கான முன் தயாரிப்புப் பணிகளை முடித்துவிட்டு இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி இந்தியா திரும்பி யிருக்கிறார்.

அமெரிக்காவில் நவம்பரில் குடியரசுத் தலைவர் தேர்தல் நடக்கிறது. இதில் ஜார்ஜ் புஷ்ஷின் குடியரசுக்கட்சி வேட்பாளர் மெக்கைன் வென்றாலும், சனநாயகக் கட்சியின் ஒபாமா வென்றாலும் இந்த இராணுவக் கூட்டணி தொடரும்.

அதேபோல் காங்கிரசுக் கட்சிக்கு இம்மியும் குறையாமல் பாரதியஜனதாவும் அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டணி காண்பதில் முனைப்புக் காட்டுகிறது. அத்வானியும், வாஜ்பாயும் அதனைப் பலமுறை உறுதிப்படுத்திவிட்டனர்.

இந்தியா குறித்த அமெரிக்க அரசின் அணுகுமுறை என்னவாக இருக்கும். இருக்க வேண்டும் என்பது பற்றி அமெரிக்க வெளியுறவுத்துறை முன்னாள் இணையமைச்சர் கார்ல் எஃப் . இந்தர்பர்த் Karl F.Inderfurth) கூறுவது கவனிக்கத்தக்கது. இவர் இப்போதைய சனநாயகக் கட்சி வேட்பாளர் பாரக் ஒபாமாவுக்கு வெளியுறவு ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கது.

*"ஆசியாவில் சக்திச் சமநிலையை நிலைநாட்ட இந்தியா முக்கியமான நாடு. ஏற்கெனவே அமெரிக்காவுக்கு இந்தியாவுடன் பத்தாண்டு இராணுவ ஒப்பந்தம் உள்ளது. இரு நாட்டு கடற் படைகளும், கூட்டுப் படைப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. படைக்கருவி உற்பத்தியில் இரு நாட்டு நிறுவனங்களும் கூட்டாகச் செயல்பட்டு வருகின்றன. இத் திசையில் நாம் மேலும் முன்செல்ல வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிராக இந்திய - அமெரிக்க உளவு நிறுவனங்களிடையேயும், பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையேயும் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.*

*"இந்தியப் பெருங்கடல் வழியாகத்தான் உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தேவையில் பாதியளவுக்கு மேல் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த எரிசக்தி வளத்தைப் பாதுகாக்க இந்தியாவுடன் படைவகைக் கூட்டணி அமைப்பது*

முக்கியமானது.

*“இந்தியத்துணைக் கண்டத்திற்குள் இந்தியாவும், அமெரிக்காவும் கூட்டணியாகச் செயல்படுவது அவசியம். அதுதான் தெற்காசிய நிலைத்தன்மையைப் பாதுகாக்கும். ஏற்கெனவே நேபாளத்தில் நிலைத்த அமைதியை நிலைநாட்டுவதில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. அதேபோல் உள்நாட்டுக் குழப்பத்தில் சிக்கியுள்ள ஸ்ரீலங்கா, வங்காளதேசம் ஆகியவற்றில் நிலைத்தன்மையைக் கொணருவதில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்பட வேண்டும். ஆப்கானிஸ்தானம் பாதுகாப்பான நாடாக மாறுவதிலும் இருநாட்டு கூட்டுறவு இன்றியமையாதது பாகிஸ் தானுக்கும், இந்தியாவுக்கும் நீண்ட காலமாக நீடித்துவரும் காசுமீர் சிக்கலில் அவ்விரு நாடுகளுக் கிடையே இணக்கம் காண அமெரிக்கா முயல வேண்டும்.”*

-(காண்க : தி இந்து 10.09.2008)

அமெரிக்க அணிவகுப்பில் இந்தியா இடம்பெற்றிருப்பது உறுதியா வதுடன் எதிர்காலப்போக்கும் இதன் மூலம் தெளிவாகிறது.

மேலும், இலங்கையில் இந்திய அரசின் நலன்களுக்கும், அமெரிக்க வல்லாதிக்க நலன்களுக்கும் எவ்வளவு இணக்கம் இருக்கிறது என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரியும். ஒபாமா வெற்றி பெற்றால் ஈழத்தமிழர் நலனுக்கு இசைவாக அமெரிக்க அரசு செயல்படாது என்பதைஇந்தர் பார்த்கூற்று எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கடந்த ஏழு ஆண்டுகளில் ‘மலபார் கூட்டுப் பயிற்சி’ என்றபெயரால் 50 முறைக்கு மேலாக இந்திய அமெரிக்க கூட்டுக் கடற் பயிற்சி நடந்து வருவதை இந்தியாவின் முன்னாள் தூதர் எம்.கே.பத்ரகுமார் எடுத்துக்காட்டி எச்சரிக்கிறார். (தி.இந்து 19.09.2008) இப்போது முன்னெப்போதும் இல்லாத அளவு தென் ஒசேசியா - ஜார்ஜியா சிக்கலில் ரஷ்யாவுடன் அமெரிக்கா மோதல் போக்கைத் தீவிரப் படுத்தியுள்ள நேரத்தில், ஈரானுடன் போர் தொடுக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், அமெரிக்க வல்லரசுடன் இந்தியா இவ்வளவு படைவகை நெருக்கம் கொண்டிருப்பது ஆபத்தானது என்பதை பத்ரகுமார் சுட்டிக் காட்டுகிறார்.

இவ்வாறான படைவகை ஒத்துழைப்பு இடதுசாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டே நடந்தேறியிருக்கிறது என்பதையும் மென்மையாக பத்ரகுமார் எடுத்துக்கூறுகிறார்.

இசுலாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டணி என்ற பெயரால் அமெரிக்க வல்லரசின் ஆதிக்க அணிவகுப்பில் இந்தியா இணைக்கப் படுவதால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை.

இந்தியப் பொருளாதாரம் படைஉற்பத்திப் பொருளியலாக மாறிப்போகும். மக்கள் நலப்பணிகள் புறக்கணிக்கப்பட்டு அரசின் பொருளியல் முனைப்பு போர் வகையாகத் திருப்பி விடப்படும்.

அங்கங்கே குண்டு வெடிப்பும், பதட்டங்களும் தீவிரப்படும். ஏற்கெனவே இது தொடங்கி விட்டது.

எல்லைப் புறமெங்கும் பதட்டச் சூழல் நிலைத்துவிடும்.

இதைச் சாக்கிட்டு உள்நாட்டில் மக்கள் நலப்போராட்டங்கள் நசுக்கப்படும். பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்ற பெயரால் தேசிய இன உரிமைக் குரல்களும், பழங்குடியினர் இயக்கங்களும் , இசுலாமியர் அடையாளங்களும் ஒடுக்கப்படும்.

ஏற்கெனவே பலமுறை சுட்டிக்காட்டியதைப் போல ஏகாதிபத்தியம் - பெரு முதலாளிகள் - பார்ப்பனிய சக்திகள் என்ற ஆதிக்க அச்சின் நலனுக்கே இது பயன்படும்.

இந்திய - அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தம் இறுதி வடிவில் கையெழுத்தாகிற நேரத்தில் இந்தியாவின் அணு உலைகள் தனியார் மயமாகப் போகின்றன. இந்திய அணு ஆற்றல் சட்டம் அதற்கேற்ப திருத்தப்படப்போகிறது.

இந்தியாவைச் சேர்ந்த 40 கம்பெனிகள் அணு உலை நிறுவுவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. அனில் அம்பானி அணு உலையில் 4000 கோடி ரூபாய் முதலீடு செய்ய இப்போதே அணியமாகி விட்டார், அதேபோல் டாடா, ஜிண்டால், வீடியோகான் நிறுவனங்கள் அரசு அனுமதிக்காகக் காத்திருக்கின்றன.

அணு உலைத் தொழிலில் இன்னும் சில ஆண்டுகளில் 2 இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு இறங்கவிருக்கிறது. பல்லாயிரம் கோடி ரூபாய் தரகுத்தொகை ஆட்சியாளர்களுக்கும் , அரசியல் கட்சிகளுக்கும் கிடைக்க விருக்கிறது.

அதற்குத் தோதாக, பலநூறு கோடி வாரியிறைத்து மன்மோகன்சிங் ஆட்சியைக் கவிழாமல் பாதுகாத்து வைத்துள்ளனர்.

மக்கள் நலனை , சனநாயக உரிமையைப் பலியிட்டு நிறைவேறும் அணு ஒப்பந்தத்தையும், அமெரிக்க இந்தியக் கூட்டணியையும் எதிர்க்க வேண்டியது அனைத்து சனநாயக இயக்கங்களுக்கும் முக்கியக் கடமையாகும். ■

## மணமக்கள் வாழ்க

த.தே.பொ.க. திருத் துறைப் பூண்டி நகரச் செயலாளர் தோழர் **து.இரமேசுக்கும்** (திருவாளர் கள் துரைராசு - ருக்மணி ஆகியோர் மகன்) குடந்தை திருவாளர்கள் குப்புசாமி - பொம்மி ஆகியோர் மகள் செல்வி **சுதாவுக்கும்** திருத் துறைப் பூண்டியில் 03.09.2008 அன்று இனிதே திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ. 1000/-அன்பளிப்பு வழங்கப் பட்டது.

மணமக்கள் நீடுழி வாழ்க!

# இராச பட்சயின் கோமாளித் தனமும், பிரபாகரனின் இராச தந்திரமும்

பெ.மணியரசன்




துப்பாக்கியின் மீது அரசியல் ஆணை செலுத்த வேண்டுமே தவிர, அரசியல் மீது துப்பாக்கி ஆணை செலுத்தக் கூடாது" என்றார் மாசேதுங். பிரபாகரனின் அண்மைக்கால அரசியல் நகர்வுகளும் எதிர்த்தாக்குதல் சமரும் மாவோவின் புரட்சி உத்தியை நினைவு படுத்துகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், அரசியல் களத்தில் தாக்குதல் தந்திரத்தையும் படைநகர்வில் எதிர்த் தாக்குதல் தந்திரத்தையும் அவர் கடைபிடிக்கிறார். அரசியல் களத்தில் எதிரியை முன்னேறித் தாக்குகிறார். போர்க் களத்தில் எதிரியின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கிறார்.

அண்மையில் நடந்த சார்க் மாநாட்டின் பாதுகாப்பு கருதி,தாமாக முன்வந்து பத்து நாள் போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் அறிவித்தனர். ஆனால், சிங்களக் குடியரசுத் தலைவர் மகிந்த ராஜ பட்ச இந்தப் போர் நிறுத்தத்தை ஏற்கவில்லை. சார்க் மாநாடு நடந்த போதே வன்னிப் பகுதிக்குள் விமானக் குண்டு வீச்சுகள் நடத்தினார்.

இந்தப் போர் நிறுத்தம் ஓர் அரசியல் தாக்குதலாகவே அமைந்தது. அதன்மூலம் சார்க் நாடுகளுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் பிரபாகரன் முகாமையான சில செய்திகளை விடுத்தார்.

1. விடுதலைப் புலிகள் ஆய்த வெறியர்கள் அல்லர். அரசியல் தீர்வையே அவாவி நிற்கின்றனர்.

2. சார்க் நாடுகளையும் பன்னாட்டு சமூகத்தையும் புலிகள் மதிக்கிறார்கள் ; அவர்களுடன் நட்பு பாராட்டவே விரும்புகிறார்கள்.

3.தமிழீழம் அமைந்தால் தெற்காசிய ஒற்றுமைக்கும் அமைதிக்கும் முன்னுரிமை கொடுத்து, சார்க் அமைப்பில் அது இணைந்து கொள்ளும்.

இராஜபட்சவுக்கு இரண்டு குணங்கள் இருக்கின்றன. ஒன்று பயங்கரவாத முரட்டுத்தனம், மற்றொன்று கோமாளித் தனம்.

அண்மையில் பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளை வன்னிப்பகுதியிலிருந்து வெளியேற ஆணையிட்டது அவரது முரட்டுத் தனத்திற்கு எடுத்துக்காட்டு. ஐ.நா.மனித உரிமை அமைப்பு, பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை ராஜபட்சயின் இந்த நடவடிக்கையை மனித உரிமைக்கெதிரானது என்று கண்டித்தன.

அவரது கோமாளித்தனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டுமென்றால், பிரபாகரனைச்சிறைப்பிடித்துத்தில்லிக்கு அனுப்பி வைப்பேன் என்று சில நாட்களுக்கு முன் அவர் கூறியதைச் சுட்டலாம். இந்திய அரசு அவ்வாறான ஒரு கோரிக்கையை ஏற்கெனவே எழுப்பிவைத்துள்ளது. ஆனால் அதை அண்மைக் காலங்களில் வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. சிங்களத்திற்கு ஆய்தங்கள் வழங்கினாலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும்படிதான் அரசியல் அரங்கில் இந்தியா வலியுறுத்தி வருகிறது.

இவ்வாறான காலச் சூழலில் பிரபாகரனைப் பிடித்து ஒப்படைப்பது பற்றிப் பேசுவது பிதற்றலாக அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

முரட்டுத்தனமும் கோமாளித் தனமும் இணைந்த கலவை மனிதராக ராஜபட்ச இருப்பதால், புலிகளுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையை ஒருதலைச் சார்பாக முறித்துக் கொண்டார்.

ஆனால், விடுதலைப் புலிகளோ பேச்சுவார்த்தை மேசையிலிருந்து தான் வெளிநடப்பு செய்தோம் ; உடன்படிக்கையை இன்று வரை நாங்கள்முறிக்கவில்லை. அந்த உடன்படிக்கைக்கு உயிர் கொடுக்கவே விரும்புகின்றோம் என்றனர்.

இந்த அரசியல் உத்தி, விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற சிங்கள அரசின்

பன்னாட்டுப் பரப்புரையை முனை மழுங்கச் செய்துள்ளது. வடஅமெரிக்கத் தலைவர்களில் ஒருவரான ஹிலாரி கிளிண்டன், புலிகள் பயங்கரவாத அமைப்பினர் அல்லர் என்று கூறியுள்ளதைக் கவனிக்கவேண்டும். அமெரிக்க வல்லரசு, புலிகள் அமைப்பைத் தடை செய்திருந்தாலும் புலிகளுடன் பேசும்படி ராஜபட்சயை வலியுறுத்துகிறது.

உடன்படிக்கையை ஒருதலைச் சார்பாக முறித்துக் கொண்டதுடன் ஊதாரித் தனமாக செலவிட்டு நாட்டைத் திவாலாக்கி விட்டார். சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளிடமிருந்து மேலும் மேலும் ஆய்தங்கள் வாங்கிப் போர்நடத்தி, சிங்கள மக்களுக்கு வறுமை மற்றும் வேலை இன்மையைப் பரிசாகத் தந்துள்ளார். ஈழத்தமிழர்களின் உயிர்களைப் பறிக்கிறார்.

மூன்று லட்சம் ஈழத்தமிழர்களைக் காட்டுமரங்களின் கீழும் புதர்களின் மறைவிலும் வசிக்கும்படி விரட்டியுள்ளார்.

நேசக்கரத்தை பிரபாகரன் இன்னும் மடக்கவில்லை. பொறுமையும், சகிப்புத் தன்மையும் மிக்க இந்த அணுகுமுறை சிறந்த அரசியல் உத்தியாகஉள்ளது. இந்தியாவிற்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது. விடுதலைப் புலிகள் மீது விரல் நீட்டிக் குற்றம் சுமத்த முடியாத நெருக்கடி இந்திய உளவுத்துறைக்கு உள்ளது.

இவ்வளவு கனபரிமானம் கொண்ட விடுதலைப் புலிகளின் இராச தந்திரத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் புலிகளுடன் பேச முடியாது என்றும் ராஜபட்ச கூறுகிறார். அத்துடன் அவர் நின்றாரா? இரு தரப்பையும் இணைக்கப்படுத்தி, உடன்படிக்கைக்கு வழி செய்த நார்வேயையும் குற்றம் சாட்டி, அந்நாட்டுத் தலைவர்கள் வெளியேறும்படிச் செய்தார்.

**“சிங்களப் படை வெற்றிமேல் வெற்றி குவிப்பது போலவும், புலிப்படை பின்வாங்கிச் செல்வது போலவும் ஒரு போலித் தோற்றம் ஏடுகளால், இதர ஊடகங்களால் இங்கு பரப்பப்பட்டு வருகிறது. சிங்களப் படை தரும் செய்தியை சிந்தாமல் சிதறாமல் அப்படியே தரும் செய்தி ஊடகங்கள், விடுதலைப்புலிகள் தரும் செய்திகளை விடுதல்கள் பல செய்தே வெளியிடுகின்றன. சில செய்திகளை வெளியிடவே**

இன்றைக்கு ஐரோப்பிய நாடுகளும் ஐ.நா.மன்றமும் பல நேரங்களில் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் சம தட்டில் வைத்துப் பேசுகின்றன. இருதரப்பும் அமைதிப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றன. ஓர் அரசையும் அதை எதிர்க்கும் விடுதலை அமைப்பையும் சம தட்டில் வைத்து, பேச்சுநடத்த உலகநாடுகள் வலியுறுத்தும் போக்கு அவ்வளவு எளிதாக வந்துவிட்டதா?

இந்த நிலை வர, பன்னாட்டு ஏற்பிசைவு வர விடுதலைப்புலிகள் தலைமை என்ன பாடுபட்டிருக்கும்? எவ்வளவு மூளை உழைப்பும் பொறுமையும் விட்டுக் கொடுப்பும் இழப்பும், தொலைநோக்கும் தேவைப் பட்டிருக்கும். இவ்வாறான அரசியல் உத்தி எதுவும் ராஜபட்சவுக்குக் கிடையாது. போர் நடவடிக்கைகளில் ராஜபட்ச வகுத்த அரசியல் உத்தி, இந்தியாவை விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் நேரடிப் போரில் இறக்கி விடுவதுதான். அதுபலிக்க வில்லை. ஆய்தங்களும் பயிற்சியும் கொடுப்பதுடன் இந்தியா நிற்கிறது.

இந்தியா, விடுதலைப் புலிகள் தோற்பதையே விரும்புகிறது. இருந்தும் நேரடிப் போரில் ஏன் இறங்கவில்லை?

ஒன்று தமிழ்நாட்டுத் தமிழர்களின் எதிர்ப்பு; தமிழ்நாட்டுக் கட்சிகள் சிலவற்றின் எதிர்ப்பு. இன்னொன்று, விடுதலைப்புலிகள் இந்தியா குறித்துக் கையாண்டு வரும்அரசியல் உத்தி. பன்னாட்டுச் சட்டங்களுக்கு முரணாக இந்தியா, பன்னாட்டுக் கடல்பரப்பில் விடுதலைப் புலிகளின் படகுகளையும் கப்பல் களையும் வழி மறித்தாலும், பல வகையான ஆத்திர மூட்டல்களை விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செய்தாலும், படைக்கருவிகளையும், படையாட்கள் சிலரையும் சிங்களப்படைக்கு ஆதரவாக அனுப்பி வைத்தாலும், இந்தியாவை ஆத்திர மூட்டும் எந்த நடவடிக்கையிலும் விடுதலைப் புலிகள் இறங்கவில்லை.

இந்தியாவை நோக்கி நீட்டிய ராஜபட்சதிணறுகிறார். அவருக்கேஉரிய கோமாளித் தனத்துடன் ஐ.நா.மன்றத்தில் செப்டம்பர் 25-இல் சிறிது நேரம் தமிழில் பேசி, தமிழர்களைச் சமமாக நடத்துவது போல் நாடகம் நடத்தியிருக்கிறார். இது ஒரு கோமாளித் தனம் தவிர, இராச தந்திரம் அல்ல.

விடுதலைப்புலிகள் ஆய்தங்களை ஒப்படைத்துச் சரணடைய வேண்டும் என்று வலியுறுத்தி ஐ.நா.வில் அவர் தமிழில் பேசினால் என்ன, சிங்களத்தில் பேசினால் என்ன? விடுதலைப் புலிகளுக்கு ஏற்பிசைவு வழங்குகிறேன், சமநிலையில் பிரபாகரனுடன் பேசத் தயார் என்று அவர் சிங்களத்தில் பேசியிருந்தால் தமிழர் நெஞ்சமெல்லாம் குளிர்ந்திருக்கும். உலக அரங்கிலும் அவர்க்கொரு மதிப்பு ஏற்பட்டிருக்கும். சின்னத்தனம் தவிர வேறு சிந்தியாத ராஜபட்சயால் அவ்வாறு அரசியல்காய் நகர்த்த முடியாது.

பிரபாகரன் ஏன் முழுப்போர் நடத்தாமல், எதிர்த்தாக்குதல் மட்டும் நடத்துகிறார்? அவரது இந்த அணுகு முறையில் பலவகையான, அரசியல் மற்றும் படைத்துறை உத்திகள் பொதிந்து கிடக்கின்றன.

முதலில் பன்னாட்டு அரசியல் குறித்த ஒரு தொலை நோக்கு இதில் அடங்கியுள்ளது. பன்னாட்டு அரசியலில் நிலையற்ற தன்மை அதிகரித்துப் பரவி வருகிறது. இது இன்னும் அதிகரிப்பது விடுதலை இயக்கங்களுக்கு வாய்ப்பானது.

அமெரிக்க வல்லரசின் ஒரு கால் ஈராக்கில் மாட்டியிருக்கும்போதே இன்னொரு காலை அது ஈரானில் விடப்பார்க்கிறது. ஆப்கானிஸ்தானில் ஆக்கிரமிப்புப் போரைத் தீவிரப் ஆப்கான், பாகிஸ்தான் வரை அமெரிக்க வல்லரசு 2009 இல் போர் நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட வாய்ப்புண்டு.குடியரசுக் கட்சி வேட்பாளர் மெக்கைன் வெற்றி பெற்றாலும், அல்லது சனநாயகக் கட்சி வேட்பாளர் ஒபாமா வெற்றி பெற்றாலும் நெருக்கடி இவ்வாறுதான் இருக்கும். ஆப்கான்போரைத் தீவிரப் படுத்துவதிலும் ஈரான் மீது போர் தொடுப்பதிலும் ஒபாமா ஆர்வமாக உள்ளார்.

எதிர்கொள்ளும் ஆற்றல் புலிகளுக்கு உண்டு.

ஆக்கிரமிப்புப் போர்களுக்கப்பால் உலகமயத்தால் அமெரிக்க வல்லரசின் பொருளியல் வேகமாக சரிந்து வருவதைக் கவனிக்க வேண்டும். உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளியல் சரிவைச் சரி செய்ய அமெரிக்கா படாதபாடு படவேண்டிவரும். தொற்று நோயாளித் தோளில் கைபோட்டு அந்நோய் தொற்ற வாய்ப்பளித்தவரைப் போல்,

**மறுக்கின்றன.**

**தமிழ் இன உணர்வாளர்கள் சரியான செய்திகள் தெரியாமல் கவலுறுகின்றனர். கவலைப்படத் தேவை இல்லை. களநிலைமைகள் வலுவாக இருக்கின்றன.**

**அதே வேளை தமிழ்நாட்டில் நாம் செய்ய வேண்டிய சனநாயகக் கடமைகளை, மனித உரிமைக் கடமைகளைச் செய்ய வேண்டும்.,**

படுத்தியுள்ளது. அடுத்துள்ள பாகிஸ்தான் இறையாண்மையைக் கேள்விக் குள்ளாக்கி, அந்நாட்டின் அனுமதியின்றி அதன் எல்லைக்குள் புகுந்து, அல்கொய்தாவினரையும் தலிபான்களையும் எதிர்த்துக் குண்டு வீசுகிறது; சுடுகிறது. தேடுதல் வேட்டை நடத்துகிறது.

இந்த அத்துமீறல்கள் அமெரிக்க பாகிஸ்தான் உறவில் விரிசல் உண்டாக்கியுள்ளது. இந்த விரிசலை இந்தியா பயன்படுத்த விரும்புகிறது.

பாகிஸ்தான் மற்றும் காசுமீர் சிக்கல்களில் இந்தியாவுக்கு உதவிட வேண்டுமெனில் , ஆப்கான் ஆக்கிரமிப்புப் போரிலும்,பின்னர் நடத்தக் கருதியுள்ள ஈரான் போரிலும் அமெரிக்காவுக்கு இந்தியா உதவிட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்படும்.

ஜார்ஜியாவில் அமெரிக்கப் படைத்தளம் இருப்பதை ரசியா எதிர்க்கிறது. அமெரிக்க வல்லரசுடன் காகசஸ் மலைப் பகுதியில் போர் மூண்டாலும் சந்திக்கத் தயார் என்று ரசியக் குடியரசுத் தலைவர் மெத்வதேவ் அறைகூவல் விட்டுள்ளார்.

ஆக, ஈராக், ஈரான், ஜார்ஜியா,

அமெரிக்க - இந்திய அணு ஆற்றல் ஒப்பந்தம், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர்களுக்கு இந்தியா துணைபுரிய வேண்டும் என்ற விதிகளைக் கொண்டுள்ளது.

எனவே ஈராக்கிலிருந்து - பாகிஸ்தான் வரை பரவி நடைபெறவுள்ள ஆக்கிரமிப்புப் போரில் அமெரிக்காவும், அதற்குத் துணையாக இந்தியாவும் ஈடுபட்டிருக்கும் போது இலங்கை அரசுக்குப் படைவகை ஆதரவு தருவது கடினம். மேலும் இக்காலத்தில் காசுமீர் விடுதலைப் போர் தீவிர மடையும். வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் விடுதலைப் போர்களும் தீவிரப்படும் சூழல்கள் உருவாகியுள்ளன.

எனவே ஈழ விடுதலைப் போருக்கு எதிரான இந்திய நடவடிக்கைகளில் ஒரு வகை பலவீனம் ஏற்படலாம்.

மேற்கண்ட வாய்ப்பு பற்றி ஊகிக்கும் போதே, ஒரு வேளை இதற்கு மாறாக நிகழ்வுகள் நடக்கவும் வாய்ப்புண்டு. தெற்காசிய மண்டலத்தில் இந்திய அரசு ஆதிக்கம் செய்துகொள்ள அமெரிக்க வல்லரசு துணைபுரியவும் கூடும் அவ்வாறான சூழலில் அதை

அமெரிக்கப் பொருளியலுடன் இணைக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளியலும் சரிவைச் சந்தித்து வருகிறது. வரும் நாடாளு மன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காது. மிகவும் தொளதொளப்பான ஏறுக்கு மாறான கூட்டணி தான் ஆட்சி நடத்தும்.

இவ்வாறு அரசியல் நிலையற்ற தன்மை பன்னாட்டரசியலில் ஏற்படும் போது, இலங்கைப் பொருளியலும் அரசியலும் எப்படி இருக்கும்! ஆடிக்காற்றில் அம்மியே பறக்கும் போது இலவம் பஞ்சு என்னவாகும் !

இலங்கைப் பொருளியல் ஏற்கெனவே திவாலாகி விட்டது. அது மேலும் சீரழியும். அரசுக் கெதிராக சிங்கள மக்கள் கடுமையாகப் போராடும் அளவிற்கு நெருக்கடிமுற்றும் வாய்ப்புண்டு.

இது ஒருபுறம் இருக்க, ராஜபட்சவின் குடும்ப ஆட்சி, ஆளும் இலங்கை சுதந்திரக்கட்சிக்குள்ளேயே புழுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மகிந்த ராஜபட்சவின் தம்பி கோத்த பாய ராஜபட்ச இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர்; அவரின் இன்னொரு தம்பி, பசில் ராஜபட்ச அமைச்சர் பொறுப்பில் !

இந்தப் புழுக்கத்தை எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்திக் கொள்ளும். சிங்கள அரசியல் மேலும் உறுதியற்ற நிலை தோன்றும்.

முழுப் போரில் இறங்காமல் தக்கநேரத்திற்காகப் பிரபாகரன் காத்திருப்பதற்கான முகாமையான காரணங்களில் இவையும் அடங்கும். அதே வேளை பதிலடி கொடுக்கும் எதிர்த்தாக்குதல் கடுமையாக நடக்கிறது.

2007 ஏப்ரல் 6 ஆம் பக்கல் (தேதி) சிங்கள அரசின் பலாலி கூட்டுப் படைத்தளத்தின் மீது புலிகள் நடத்திய விமானத் தாக்குதல் ஒரு பதிலடிச் சமர்தான். அடுத்து அக்டோபர் மாதம் அனுராதபுரம் வான் படைத்தளத்தின் மீது புலிகளின் விமானப் படையும் தரைப்படையின் சிறப்பு அணிகளும் பெருந்தாக்குதல் நடத்தின. அது மிகப்பெரிய இழப்புகளை சிங்களப் படைக்கு உண்டாக்கியது. கிட்டத்தட்ட 22 போர் விமானங்கள் தகர்ந்தன. பெருமளவு ஆய்தங்களைப் புலிகள் கைப்பற்றி மீண்டனர். புலிகளின் விமானங்கள் தாக்குதலை நடத்தி விட்டு பாதுகாப்பாகத் திரும்பின.

2008 செப்டம்பர் 1 மற்றும் 2ஆம் பக்கல்களில், நாச்சி குடா, வன்னேரிக் குளம் மற்றும் அக்கராயன் குளம் பகுதிகளில் சிங்களப் படையினரின் முன்னேற்றத்தை மறித்துப் புலிகள் தாக்கியதில் 75 சிங்களப் படையாட்கள் கொல்லப்பட்டனர். அப்படையின் முன் நகர்வு தடுக்கப்பட்டது. அச்சமரில் கொல்லப்பட்ட சிங்களப் படையாட்களின் 20 உடல்களை கிளிநொச்சியில் வைத்துப் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் ஒப்படைத்தனர்.

நாச்சிகுடா, வன்னேரிக் குளம் சமரில் சிங்கள அரசு சீனத்திடமிருந்து வாங்கிய இலேசுரக டாங்கு எதிர்ப்பு ஏவுகணையைக் களமிறக்கி இருந்தது. சிங்களப் படையினரால் முதல் தடவையாகப் பயன்படுத்தப்பட்ட இந்த சீன ஏவுகணை அவர்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. புலிகளின் எதிர்த்தாக்குதலில் அவர்கள் பின் வாங்கும்படி ஆனது. அந்த ஏவுகணை பயன்படுத்தப்பட்ட பகுதியில் மட்டும் 30 படையாட்கள் கொல்லப் பட்டனர். பத்து சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தத் தோல்வி சிங்களப் படையின் மனஉறுதியைத் தகர்த்திருக்கும். ஏனெனில் நவீன ஏவுகணையின் மீது மிகப்பெரிய நம்பிக்கை வைத்து அவர்கள் கள மிறங்கினர். அந்நம்பிக்கை தகர்ந்தது.

வன்னிமண்டலத்தில் மன்னார்-பூநகரி நெடுஞ்சாலை ஏ32 - ஐக் கைப்பற்றும் நோக்குடன் சிங்களப் படை போர்புரிகிறது. அத்திசையிலான முன்னகர்வைத் தடுத்து வருகிறார்கள் புலிகள். பெருமெடுப்பில், ஆள் இழப்புகளையும் ஆய்த இழப்புகளையும் சிங்களப்படை சந்திக்கிறது. ஏ32 நெடுஞ்சாலையை கைப்பற்றியபின், ஏ9 நெடுஞ்சாலையை முழு அளவில் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது தான் சிங்களப் படை நகர்வின் திட்டம்.

கடந்த செப்டம்பர் 9 - ஆம் பக்கல் அதிகாலை, சிங்கள அரசின் வவுனியா படைத்தலைமையகத்தின் மீது புலிகளின் வான்படை,தரைப்படையின் சிறப்பு அணிகள், கர்னல் கிட்டு பீரங்கிப் படை அணிகள், துணைத்தளபதி மதியழகி தலைமையிலான கரும் புலிப்படை ஆகிய இவை அனைத்தும் ஒருங்கிணைந்து தாக்கின. இது கூட பதிலடித் தாக்குதல் தான். அப்பகுதியை விடுவிக்கும் போர் அல்ல.

சிங்கள அரசின் வவுனியா ஜோசப் படைத்தளம், வன்னிப்படை நடவடிக்கையின் ஒருங்கிணைப்பு நடுவமாகவும், வான்புலிகளைக் கண்காணிக்கும் ராடார் மையமாகவும் செயல் படுகிறது. இந்திய அரசு கொடுத்த ராடார்கள் இந்திராஜ.ஐ.இங்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தியா வழங்கியுள்ள எல் 70 விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இங்கு நிறுவப் பட்டிருந்தன.

இவை எல்லாவற்றையும் தாக்கித் தகர்த்தனர் புலிகள். கரும்புலிகள் பத்துபேர் வீரச் சாவெய்தினர். புலிகளின் 11 சடலங்களைக் கைப்பற்றியதாக சிங்களப் படை கூறியது. புலிகளின் இரு போர்விமானங்கள் பாதுகாப்பாக நிலைக்குத் திரும்பின.

அன்று அதிகாலை 3.05 மணியளவில் புலிகளின் இருவிமானங்களும் 25 கிலோ எடையுள்ள நான்கு குண்டுகளை வீசின. ஒரு குண்டு இந்திரா ராடாரை முற்றிலும் சேதப்படுத்தியது புலிகளின் விமான மொன்றைச் சுட்டு வீழ்த்தியதாக சிங்களப்படை கூறிக்கொண்டது. ஆனால் அது உண்மைச் செய்தி அல்ல என்று பின்னர் தெரியவந்தது.

சிங்களப் படைக்குக் கமுக்கமாக படைக்கருவிகள் வழங்கி வரும் இந்திய அரசு 40 மி.மீ .எல் 70 தன்னியக்க எதிர்ப்புத் துப்பாக்கிகள், நிசாந் வகை ஆளில்லாத உளவு விமானங்கள், ஒளிக்கதிர் (லேசர்) மூலம் வழி நடத்தப்படும் குறிதவறாத குண்டு வழி நடத்திகள் (Laser Designators for PGMs) போன்ற ஆய்தங்களை வழங்கியுள்ளது. அவை மட்டுமின்றி படைத்துறை ஆட்களையும் இந்தியா அனுப்பியுள்ள கமுக்கம், புலிகளின் வவுனியாத் தளத்தாக்குதலில் அம்பலமானது. அங்கு பணியிலிருந்த இந்தியப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ராடார் பொறியாளர்களான, ஏ.கே.தாக்குர், சிந்தாமணி ரவுத் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

புலிகளின் இவ்வகை எதிர்த் தாக்குதல்கள் எதைக் காட்டுகின்றன? அவர்களின் போர்த்திறன் கூடியுள்ளதே தவிர குறையவில்லை என்பதையே காட்டுகின்றன.

சந்திரிகா குமாரதுங்கா 'வெற்றி உறுதி' (ஜெயசிக்குறு) என்ற பெயரில் வன்னிக்குள் புகுந்து போர் நடத்திய போதுதான் அவரது தோல்வி உறுதியானது. வன்னிப் பகுதி விடுதலைப் புலிகளின் இதயம் போன்றது. போர் நடத்த புலிகளுக்கு வாய்ப்பானபகுதி. அதிலும் வன்னியின் மேற்குப் பகுதியை விடக் கிழக்குப் பகுதி அடர்ந்த காடுகளைக் கொண்டது. மணலாற்றுக் காடு, நெடுங்கேணிக்காடு, இரணை மடுக்காடு என கதிரொளி நுழைய முடியாக் காடுகள் இருக்கின்றன. இங்குதான் கிளிநொச்சி உள்ளது.

இப்பொழுது பிரபாகரன் இருவகையான சமர் உத்திகளைக் கடைபிடிக்கிறார் என நாம் ஊகிக்கலாம் ஒன்று போரை நீடித்து, சிங்களப்படையினரைக் களைப்படையச் செய்வது, இரண்டு, வன்னிக்காட்டுக்குள் எதிரியை இழுத்து, சுற்றி வளைத்துத் தாக்குவது.

எனவே, இப்பொழுது முழுப் படைவலிவையும், போர்க் கருவிகளையும் சமரில் இறக்கிவிட அவர் விரும்பவில்லை.

கடற்புலிகள் இன்னும் சமரில் இறக்கப்படவில்லை என்பதைக்

அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு 10.08.2008 அன்று விடுத்துள்ள அறிக்கை இணைய தளத்தில் வந்துள்ளது.

**2008 செப்டம்பர் 9 வவுனியா சிங்களப் படை முகாம் மீது தாக்குதல் நடத்தி வீரச் சாவெய்திய கரும் புலிகள்.**

**1. லெப் கேணல் மதியழகி, 2.லெப். கேணல் விநோதன், 3.மேஜர் ஆனந்தி, 4. மேஜர் நிலாகரன், 5. கேப்டன் அறிவுத் தமிழ் , 8. கேப்டன் எழிலகன், 9.கேப்டன் அகிலன், 10. கேப்டன் விமல்.**

கவனிக்க வேண்டும். பன்னாட்டு அரசியலில் விரைவாகப் பரவிவரும் நிலையற்றதன்மை, 1929இல் ஏற்பட்டது. போன்ற முதலாளிய பொருளியல் மந்த நிலை, அமெரிக்க வல்லரசின் ஈராக்- ஈரான் - காகஸ்- ஆப்கன்- பாகிஸ்தான் வரையிலான போர் நடவடிக்கைகள்- இதில் இந்தியாவும் துணைச் சக்தி ஆதல் - இந்தியாவில் காஷ்மீர் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் தீவிர மடையும் விடுதலைப் போர்கள், இலங்கையின் பொருளியல் சீரழிவு , இராசபட்சயின் குடும்ப அரசியல் - பதவி ஆசை இவை எல்லாம். வருங்காலத்தில் புலிகளுக்கு அரசியல் கதவை அகலமாகத் திறந்து விடும்.

நீண்டு கொண்டே போகும் போர் சிங்களப் படைகளைக் களைப்படையச் செய்யும். அவர் களுடைய படைத் தொகையில் 40 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்தில் குவிக்கப் பட்டுள்ளனர். இவ்வளவு எண்ணிக் கையுள்ள ஒரு பெரும் படை ஆற்றல், செயல்படாமல் அங்கு முடக்கி வைக்கப் பட்டுள்ளது. பிரபாகரன் இப்பொழுது யாழ்ப்பாணத்தை நோக்கப் போவதில்லை. அதற்குரிய காலம் வரும்.

கிழக்கு மாநிலத்தைக் கைப்பற்றி விட்ட தாக இராச பட்ச தம்பட்டம் அடிக்கிறார். ஆனால் அம்மாநிலம் முழுமையாக அவர் கையில் இல்லை. அதன்பல்வேறு பகுதிகள் புலிகள் வசம் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு 10.08.2008 அன்று விடுத்துள்ள அறிக்கை இணைய தளத்தில் வந்துள்ளது.

“அரச பயங்கரவாதத்தின் உச்சமாகத் திகழும் மகிந்த ராஜட்ச அரசாங்கம் கிழக்கு மாகாணத்தை மீட்டு விட்டதாக வெற்றிவிழா நடத்திய நாள் தொட்டு இன்றுவரை சிறிலங்கா படையினருக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் அதிகாரிகள் உட்பட 92 படையாட்கள் கொல்லப்பட்டார்கள். 208 பேர் படுகாயமடைந்தார்கள். யால படை முகாம் தீயிட்டு எரிக்கப்பட்டது. உலங்கு வானூர்தி உட்பட மூன்று பவல் கவச வாகனங்கள், இரண்டுஜீப்புகள், எட்டுக்கும் மேற்பட்ட இதர வாகனங்கள் அழிக்கப்பட்டன.”

அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்கும் தெற்கே சிங்களப் பகுதியை ஒட்டி உள்ளது. அங்கேயே சிங்களப்படைக்கு இவ்வளவு சேதங்களைப் புலிகள் ஏற்படுத்துகிறார்கள் எனில் மற்ற பகுதிகளில் அவர்களின் தாக்கு திறனை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

சிங்களப் படை வெற்றிமேல் வெற்றி குவிப்பது போலவும், புலிப்படை பின்வாங்கிச் செல்வது போலவும் ஒரு போலித் தோற்றம் ஏடுகளால், இதர ஊடகங்களால் இங்கு பரப்பப்பட்டு வருகிறது. சிங்களப் படை தரும் செய்தியை சிந்தாமல் சிதறாமல் அப்படியே தரும் செய்தி ஊடகங்கள், விடுதலைப்புலிகள் தரும் செய்திகளை விடுதல்கள் பல செய்தே வெளி யிடுகின்றன. சில செய்திகளை வெளியிடவே மறுக்கின்றன.

தமிழ் இன உணர்வாளர்கள் சரியான செய்திகள் தெரியாமல் கவலுறுகின்றனர். கவலைப்படத் தேவை இல்லை. களநிலைமைகள் வலுவாக இருக்கின்றன.

அதே வேளை தமிழ்நாட்டில் நாம் செய்ய வேண்டிய சனநாயகக் கடமைகளை , மனித உரிமைக் கடமைகளைச் செய்ய வேண்டும்.

இந்திய அரசு, ஈழத்தமிழர்களைக் கொல்ல, சிங்கள அரசுக்குப் படைக்கருவிகளை வழங்குவதுடன் பயிற்சியும் தருகிறது. படையாட்களையும் அனுப்பி வைக்கிறது. ஈழத்தமிழர்களைக் கொல்ல மட்டுமல்ல, தமிழக மீனவர்களைக் கொல்லவும் துணை புரிகிறது.

தமிழ் உணர்வாளர்கள், சனநாயகர்கள், மனச்சான்று பிளவுபடாத மனித உரிமையாளர்கள் உள்ளிட்ட முற்போக்காளர்களைத் திரட்டி இந்திய அரசின் தமிழ் இன எதிர்ப்பு நடவடிக் கைகளை எதிர்ப்போம்.

இந்திய அரசே,

இலங்கை அரசுக்குப் படைக்கருவிகள் தராதே

சிங்களப் படையினர்க்குப் பயற்சி தராதே

இந்தியப் படையாட்களை இலங்கைக்கு அனுப்பாதே

தமிழக மீனவர்களைச் சுடும் சிங்களப் படையினரைச் சுட்டு வீழ்த்து என முழங்குவோம் !

**குறிப்பு : தரவுகள் - புதினம், பதிவு இணையத்தளங்கள்** ■

## மணமக்கள் வாழ்க


**தமிழ்த்தேசப்பொதுவுடைமைக் கட்சியின் முன்னோடித் தோழர் திருத்துறைப்பூண்டி, கூத்தங்குடி வே. இராமதாசன் - திருமதி செயலட்சுமி ஆகியோர் மகள் செல்வி கௌரி என்கிற கண்ணாட்டிக்கும் , செல்வன் சிவராமனுக்கும் 04.09.2008 காலை திருவாரூரில் இனிதே திருமணம் நடைபெற்றது.**

**மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ. 1000/- அன்பளிப்பு வழங்கப்பட்டது.**

**மணமக்கள் நீடுழி வாழ்க!**

## தன்நிலம் - தன்குலம் - தன்னலம்

# பெரும்பான்மைத் தேசிய இனம்



கவிஞர் **காசி ஆனந்தன்**

தேசிய இனங்களின் கூட்டாட்சி என்பது பெரும்பான்மைத் தேசிய இனத்தின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்துகிறது. சம நிலையில் அனைத்துத் தேசிய இனங்களும் நடத்தப் படுவதாகக் கூட்டாட்சி அரசுகள் சங்கூதினாலும் சாறு பெரும்பான்மைத் தேசிய இனத்துக்கும் - சக்கை சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் எனும் நிலையே “கூட்டாட்சி”யில் காணப்படுகிறது. தன் வாழ்வு- தன் காப்பு - தன் உயர்வு என்று பெரும்பான்மைத் தேசி இனம், கூட்டாட்சி முறையில் சிறுபான்மைத் தேசிய இனங்களைப் புறம்தள்ளித் தன்னை மட்டுமே கவனிக்கிறது.

கூட்டாட்சி நாடுகளில் தலைநகர் எங்கே அமைகிறது என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். பிரிட்டனில் வேல்ஸ் - ஸ்காட்லாந்து - வட அயர்லாந்து மக்கள் தங்களுக் கெனத் தனி மொழி கொண்ட சிறுபான்மைத் தேசிய இனங்களாக வாழ்கிறார்கள். ஆனால் - பிரிட்டனின் தலைநகர் லண்டன், அக்கூட்டாட்சி நாட்டில் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் தாயகமான இங்கிலாந் திலேயே அமைக்கப் பட்டிருக்கிறது. சிறுபான்மைத் தேசிய இனங்களான வேல்சு - ஸ்காட்லாந்து - வட அயர்லாந்து அரசோ தொடர்புடைய மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய பல கற்கள் கடந்து பெரும்பான்மைத் தேசிய இனத்தின் தாயகமான இங்கிலாந்துக்கே ( லண்டன்) செல்ல வேண்டும்.

சோவியத் குடியரசில் உக்ரேன் - உஸ்பெக் - ஜோர்ஜியா - கசாக்ஸ்தான் - தஜிகிஸ்தான் , சைபீரியா - இவ்வாறு பல சிறுபான்மைத் தேசிய இனங்கள் வாழ்ந்தும் - பெரும்பான்மைத் தேசிய

இனமான உருசியர்களின் தாயகத்தில் ரஷ்யாவில் - மாஸ்கோவில்தான் தலைநகரம் அமைக்கப்பட்டது. சைபீரியாவின் சிறுபான்மைத் தேசிய இனத்தவன் பல்லாயிரம் கற்கள் தொலைவைக் கடந்து ரஷ்யா சென்றுதான் மாஸ்கோவில் - தன் உயர்மட்ட அரசியல் பணிகளைக் கவனிக்க வேண்டி இருந்தது.

இந்தியாவிலும் இதே நிலைதான். சிறுபான்மைத் தேசிய இனத்தவர் தாயகங்களான ஒரிசாவிலோ - மராட்டியத்திலோ - வங்காளத்திலோ - பஞ்சாப்பிலோ - ஆந்திராவிலோ அல்லது பிற மாநிலங்களிலோ - இந்தியாவின் தலைநகர் இல்லை. பெரும்பான்மைத் தேசிய இனத்தவன் ஆன இந்திக்காரனின் தாயகத்தில் - உத்தரப்பிரதேசத்தில் டில்லியிலேயே இந்தியாவின் தலைநகர் அமைக்கப் பட்டிருப்பதால் தமிழ்நாட்டுத் தமிழன் இரண்டாயிரம் கற்கள் கடந்து டில்லி சென்று தனக்கு ஏற்படும் முதன்மையான அரசுப் பணிகளை மேற்கொள்ளும் நிலையே இங்கும் உள்ளது.

அனைத்துத் தேசிய இனங் களுக்கும் 'கூட்டாட்சி'யில் சம உரிமை என்பது பிரிட்டனில் பல நிலைகளில் அடித்து நொறுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரச குடும்பங்கள் அங்கே ஓரங் கட்டப்பட்டுள்ளன. வேல்ஸ் அரச குடும்பத்துக்கோ, ஸ்காட்லாந்து அரச குடும்பத்துக்கோ பிரிட்டனில் என்றும் முன்னுரிமை வழங்கப்பட்டதில்லை. பெரும்பான்மைத் தேசிய இனத்தைச் சேர்ந்த இங்கிலாந்தின் எலிசபெத் பேரரசியார்தான் தான்.

பிரிட்டன் மக்கள் அனை வருக்கும் அரசுத் தலைவி ஆக்கப் பட்டிருக்கிறார்.

இரு தேசிய இனங்கள் வாழும் இலங்கைத் தீவில், சிங்கள சீறிலங்காவும் தமிழீழமும் இணைந்து கூட்டாட்சி காண்பதாகவே முடிவு செய்தாலும் - அவ்வாறு உருவாக்கப்படும் கூட்டாட்சி அமைப்பில் சிறுபான்மைத் தேசிய இனமான தமிழீழ மக்கள் பெறும் அரசுரிமை சுழியமாகவே இருக்கும். ஆட்சித் தலைவர் பதவியோ - தலைமை அமைச்சர் பதவியோ - படைத் துறைத் தலைமையோ - நிருவாக உயர்பொறுப்பு களோ தமிழீழ மக்கள் பெறமுடியாத கனவுகளாகவே அமையும். நினைத்த நேரத்தில் ஆட்சியைக் கலைக்கும் அதிகாரம் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் கைகளிலேயே தங்கி இருக்கும்.

உடைந்து பிரிந்து - தனித்தனி அரசுகளாகிப் போன பழைய சோவியத் குடியரசு வரலாறு காட்டும் உண்மை ஒன்றினைப் பதிவு செய்கிறேன். அனைத்துத் தேசிய இனங்களையும் மதித்தவர் லெனின். தேசிய இனங்களுக்கு தன் முடிபுரிமையும், பிரிந்து செல்லும் உரிமையும் வேண்டும் எனும் கொள்கையை புரட்சிக்கு முன்பே வலியுறுத்தியவர் லெனின். அவர் சோவியத் குடியரசில் பெரும்பான்மைத் தேசிய இனமான உருசிய இனத்தவர் என்பதையும் அறிவோம்.

இருப்பினும் - சோவியத் குடியரசு வரலாற்றில் - இறுதியில் நிகழ்ந்தது என்ன?

சோவியத் தேசிய இனங்களின் கூட்டாட்சிக் குடியரசில் - அனைத்துத் தேசிய இனங்களின் பாதுகாப்புக் குமாகவே அணுகுண்டு உருவாக்கப் பட்டது. ஆனால் - சோவியத் குடியரசு உடைந்தபோது - சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசுகளாய் அமைந்த ஜோர்ஜியா - உக்ரேன் - உஸ்பெக் - கசாக்ஸ்தான் போன்ற பிரிந்த சிறுபான்மைத் தேசிய இன அரசுகளின் கையில் அணுகுண்டு போய்ச் சேரவில்லை. பெரும்பான்மைத் தேசிய இனமான ரஷ்ய அரசின் இருப்பிலேயே அணுகுண்டு இருந்தது. பெரும் பான்மைத் தேசிய இனம் தன் சொந்த நலனையே கவனிக்கும் - தனக்காக மட்டுமே எதையும் வைத்துக்கொள்ளும் எனும் உண்மை சோவியத் கூட்டாட்சி உடைந்தபோது அம்பலமானதைக் கண்டோம்.

ஒரு தேசிய இனம் தனி இறைமையும் - விடுதலையும் பெறப் போர்கொடி உயர்த்துவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

தனக்கென ஒரு தாய் மொழியும் - கலை பண்பாடும் - தாயகமும் - பொருளாதார வலிமையும், தொடர் வரலாறும் கொண்ட ஒரு மக்கள் கூட்டம் 'தேசிய இனம் 'என்னும் இயல்பான தகுதியைப் பெற முயல்வது முதன்மையானது.

இன்னொரு தேசிய இனத்தால் ஒடுக்கப்படும்போதோ - இனஒழிப்புக்கு உள்ளாக்கப்படும்போதோ இறைமையும் விடுதலையும் நிலைநாட்டுவது இன்றிய மையா உடன் கடன் எனும் தேவை எழுந்து களத்தில் குதிப்பது இரண்டாவது நிலை.

பெரும்பான்மைத் தேசிய இனம் தன்னையே கவனிக்கும் - கூட்டாட்சியின் கீழும் பெரும்பான்மைத் தேசிய இனத்துக்கு அடிமையாகவே சிறுபான்மைத் தேசிய இனம் இருக்கும். பெரிய அளவில் சிறுபான்மைத் தேசிய இனம் புறக்கணிக்கப்படும் என்பதால் விடுதலை தேடலும் -களம் இறங்குதலும் - இறைமை காத்தலும் தவிர்க்க முடியாத நிலைப்பாடே என்பது மூன்றாவது காரணமாகும். ■

## மணமக்கள் வாழ்க



ஒரத்தநாடு வட்டம், பின்னையூர் திருவாளர்கள் இரெங்கசாமி - மாரியம்மாள் ஆகியோர் மகளும் த.தே.பொ.க. தஞ்சை மாவட்டச் செயற்குழு உறுப்பினர் தோழர் சிவராசு தங்கையுமான செல்வி **வைகறைச் செல்விக்கும்** முதலிப்பட்டி திருவாளர்கள் சீ. பிச்சையன் - அலமேலு ஆகியோர் மகன் செல்வன் **எஸ்.பி. சீனிவாசனுக்கும்** ஒரத்தநாட்டில் தோழர் பெ. மணியரசன்தலைமையில்14.09.2008 அன்று இனிதே திருமணம் நடந்தது. திருவோணம் தொகுதி மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எம். இராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். தோழர்கள் நா. வைகறை, பழ. இராசேந்திரன் , பெ.ரெங்கசாமி, புலவர் கோ.நாகேந்திரன், ரெ.கோவிந்தராசு , வீ. அன்புச் செழியன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள்சார்பில் புதியதமிழர்கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ. 1000/-அன்பளிப்பு வழங்கப்பட்டது.

மணமக்கள் வாழ்க.

மணமக்கள் நீடுழி வாழ்க!

# கிறித்தவர்களுக்கெதிரான சங்பரிவாரங்களின் மதவெறித் தாண்டவம்

காசுமீரின்அமர்நாத் கோவிலுக்கு இடம் வழங்குவது தொடர்பான பிரச்சினையில் இந்திய தேசிய காங்கிரசின் மிதவாத இந்துத்துவா போக்காலும் பாரதிய ஜனதா மற்றும் சங்க பரிவாரங்களின் தீவிரவாத இந்துத்வா போக்காலும் தூண்டப்பட்ட மதவெறித் தீ அடங்குவதற்குள் ஒரிசா, கர்நாடகா உள்ளிட்ட பல மாநிலங் களில் மதவெறித் தாண்டவம் தொடர்ந்து கொண்டது.

ஒரிசா மாநிலத்தில் சங்பரிவாரங்கள் மதவெறியாட்டம் போடுவது ஒன்றும் புதிதல்ல. கடந்த 1999 ஆம் ஆண்டு, இதே சங்பரிவார இயக்கங்கள் தலைமையில்தான் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிருத்துவ பாதிரியார் ஸ்டெயின்ஸும் அவரது இரு மகன்களும் உயிரோடு ஜீப்பில் வைத்து கொளுத்தப்பட்டனர். மனித நேயம் உள்ளவர்களால் மறக்க முடியாத அது போன்ற கொடூரங்களை இப்போது மீண்டும் அதேபோன்று அரங்கேற்ற விஸ்வ இந்து பரிசத், பஜ்ரங்தள்போன்ற மதவெறி அமைப்பினர் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

ஒரிசா மாநிலத்தில் உள்ள கந்தமால் மாவட்டம், பழங்குடியினர் அதிகமாக வசிக்கின்ற மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் உள்ள 6.50 லட்சம் பேரில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கிறித்துவர்களாகும். இம்மாவட்டம் பழங்குடியினர் மாவட்டம் என்று கூட அழைக்கப்படுவது உண்டு. இங்கு பிரதானமாக வசிப்பது பனா மற்றும் கந்தா பழங்குடியினர் ஆவர். இருவரும் குயி மொழி தான் பேசுகின்றனர். மனிதர்களை பிறப்பின் அடிப்படையில் தாழ்த்தி அடிமைப்படுத்தும் மனித குலத்திற் கெதிரான மனுதர்மத்தைக் கொண்டுள்ள இந்து மதத்தில் நீடிக்க விருப்ப மில்லாமல் கிறித்தவர்களாக மதம் மாறிய தாழ்த்தப்பட்ட பனா பழங்குடியினர்தான் இங்கு பெரும் பான்மையாக உள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு இந்திய அரசு பொதுப்படையாக குயி மொழி பேசும் மக்கள் பழங்குடியினர் என்று வரையறுத்து அவர்களை அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடியினர் பிரிவில் சேர்த்தது.

**க.அருணபாரதி**



இதனை பொறுத்துக் கொள்ள முடியாத விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் போன்ற இந்துமதவெறி அமைப்புகள் கந்தா பழங்குடியினரிடம் மதவெறிக் கொள்கைகளைப் பரப்பி பனா பழங்குடியினருக்கு எதிராக பகையைத் தூண்டிவிட்டனர். இதன் காரணமாக நடைபெற்ற கலவரங்களில் பல பழங்குடியின மக்கள் கொல்லப்பட்டனர். பகையைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காயும் பார்ப்பனியத் தந்திரத்தையே பழக்கமாகக் கொண்ட இந்துமதவெறி அமைப்புகள் இப்பிரச்சினையைக் கொண்டே கந்தா பழங்குடியின மக்களைத் தம் ஆய்தமாக பயன்படுத்தி வந்தன.

கடந்த 2007 ஆம் வருடம் திசம்பர் மாதம் பாமுனிகான் என்கிற சிற்றூரில் கிறித்துமஸ் விழாவை வரவேற்கும் வகையில் கிருத்துவர்களாக மதம் மாறிய தாழ்த்தப்பட்ட பனா பழங்குடிகள் கட்டிவைத்திருந்த வரவேற்பு நுழைவு வாயிலை கண்டு பொறுக்க முடியாமல் விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் உள்ளிட்ட சங்பரிவார அமைப்புகள் வன்முறையில் ஈடுபட்டன. இதனை பிரச்சினையாக்கி சங்பரிவாரங்கள் கடையடைப்பு ஒன்றை நிகழ்த்தி அதில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். இந்தத் தாக்குதல்களின் போது இந்துமதவெறி அமைப்பினர் கந்தமால் மாவட்டத்தில் 19 தேவாலயங்களை தீவைத்து கொளுத்தினர். பல்வேறு பிரார்த்தனைக் கூடங்களையும், கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்காக வைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகளையும் , கிறித்துவர்கள் வீடுகளையும்திட்டமிட்டு தாக்கி, அழித்து, சேதப்படுத்தியும் தீவைத்தும் எரித்துள்ளனர். (ஆதாரம் http : // timesofindia.indiatimes. com/ articlehow / 2654765.cms)

மதமாற்றத்தை எதிர்ப்பதாக சொல்லித் திரியும் விசுவ இந்து பரிசத் அமைப்பு பிற மதத்தினரை இந்துக்களாக மதமாற்றம் செய்ய தர்மபிரச்சார் என்கிற தனியொரு பிரிவையே கொண்டிருக்கிறது. அப்பிரிவின் ஒரிசா மாநிலத் தலைவரான சுவாமி லட்சுமனானந்தா சரஸ்வதி என்பவரைக் கொண்டு வந்து இவ்வன்முறைகளுக்கு தலைமையேற்கவும் செய்தனர் இந்து மதவெறியர்கள். ஒரு தேவாலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த கிறித்துமஸ் விழாவை நிறுத்துமாறு தகராறில் ஈடுபட்ட சுவாமி லட்சுமனானந்தா அங்கு குழுமியிருந்த கிறித்துவ பழங்குடி மக்களின் எதிர்ப்பைப் பார்த்து மிரண்டு ஓடி தான் தாக்கப்பட்டு விட்டதாக மருத்துவமனையிலும் சேர்ந்தார்.அவர் தாக்கப்பட்ட செய்தியை பிரச்சாரமாக்கி வன்முறையை மேலும் தீவிரப்படுத்தினர் சங்பரிவாரங்கள். இக்கலவரங்கள் தொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்டதோடு அப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து தனது இந்து விசுவாசத்தை பா.ச.க.விற்கு காட்டியது ஒரிசா மாநில அரசு.

இவ்வாறு தொடர்ந்து பழங்குடியின மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிடுவதை வாடிக்கையாகக் கொண்டு சங் பரிவார இயக்கங்களின் தளபதியாகவே சுவாமி லட்சுமனானந்தா செயல்பட்டு வந்தார். இவரைக் கொல்வதற்கு மாவோயிஸ்டுகள் பலமுறை முயற்சி செய்திருந்தனர். இந்நிலையில் தான் கடந்த ஆகத்து மாதம் 23 ஆம் நாள் அடையாளம் தெரியாத 30க்கும் மேற்பட்ட நபர்களால் சுவாமி லட்சுமனானந்தாவும் அவருடன்இருந்த 4 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட்ட சிறிது நேரத்திலேயே ஒரிசா காவல்துறையினர் இதனை மாவோயிஸ்டுகள் தான் செய்திருக்கக்கூடும் என்று தெரிவித்திருந்தனர். ஆனால் அதற்கு நேர் மாறாக பா.ச.க.வும் அதன் சங்பரிவார அமைப்புகளும் கிறித்தவர்கள் தான் இதனை செய்திருக்கின்றனர் என்று மதவெறிப் பிரச்சாரத்தில் இறங்கிக் கலவரத்தைத் தூண்டிவிட்டனர்.

இந்து மதவெறியர்களால் கந்தமால் மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. சுமார் 2000க்கும் மேற்பட்ட பழங்குடியினரின் வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. ஒரு வழிபாட்டுத் தலத்தில் கன்னியாஸ்திரி ஒருவரையும் சேர்த்து கொளுத்தி வன்முறை வெறியாட்டம் நிகழ்த்தினர். இக்கலவரங்களில் 25க்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பலியாயின.

சுவாமியின் கொலைக்கு தாங்கள் பொறுப்பேற்பதாக மக்கள் விடுதலை கொரில்லா படை (People's Liberation Guerrilla Army) என்கிற மாவோயிஸ்ட் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான அசாத் என்பவர் ஒரிசா தினசரி பத்திரிக்கைக்கு தகவல் தெரிவித்தார். லட்சுமனானந்த சரஸ்வதி கந்தமால் மாவட்டத்தில் நடத்திய பாசிச செயல்களுக்காகத் தான் கொன்றோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார் (ஆதாரம் http ://times ofindia. indiatimes.com/india/Maosists _ claim_they_killed _facist VHP _ leader _ in_ Orissa / articleshow / 34239 08.cms)

இதனை பொருட்படுத்தாமல் கிறித்துவ அமைப்புகளையும் கிறித்தவ மக்களையும் குறிவைத்துத் தனது வெறியாட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தன சங்பரிவாரங்கள். கோத்ரா இரயில் எரிப்பு என்ற நாடகத்தின் போர்வையில் குஜராத்தில் சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுத்து அப்பாவி மக்களை கொன்று குவித்ததைப் போல ஒரிசாவிலும் அதுபோன்ற தாக்குதலை கிறித்துவ சிறுபான்மையின மக்கள் மீது நிகழ்த்த சங்பரிவார அமைப்புகள் திட்டமிட்டிருந்தது அப்பொழுது தான் அம்பலமானது.

ஒரிசா மாநிலத்தில் நடைபெறும் பிஜூ சனதா தளஆட்சிக்கு பா.ச.க. அளித்து வரும் ஆதரவால் அம்மாநில காவல்துறையினர் வன்முறையை வேடிக்கைப் பார்க்க மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதனால் இந்திய அரசு தனது ராணுவத்தைக் கொண்டு கலவரத்தை அடக்க முயற்சித்தது. இக்கலவரங்களில் ஈடுபட்ட சங்பரிவார அமைப்புகளைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட கிருத்துவர்களுக்கு பாதுகாப்பும் நிவாரணமும் வழங்கக் கோரியும் இந்தியாவில் உள்ள கிறிஸ்துவ கல்வி நிறுவனங்கள் ஆகத்து 29 ஆம் நாள் ஒரு நாள் மூடப்பட்டன. தமிழகம் உட்பட பல மாநிலங்களில் கிறித்தவர்கள் மனித சங்கிலிப் போராட்டமும் , ஆர்ப்பாட்டமும் நடத்தித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். கிறித்தவக் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டதால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுவிட்டதாகக் கூறி பா.ச.க.,இந்து முன்னணி உள்ளிட்ட

இந்துமதவெறி அமைப்புகள் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தின.

ஒரிசாவில் சிறுபான்மை கிறித்தவர்கள் மீது நடந்த கலவரத்தை மேலும் பல மாநிலங்களுக்கு விரிவுபடுத்தத்திட்டம்தீட்டியசங்பரிவார அமைப்புகள் மத்திய பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் அவ்வேலைகளில் இறங்கின. பா.ச.க. ஆட்சி நடத்தும் மத்தியப் பிரதேசத்தில் 150 ஆண்டு பழைமை வாய்ந்த தேவாலயம் ஒன்று ஜபல்பூரில் இந்துமத வெறியர்களால் எரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பா.ச.க. ஆளும் கர்நாடக மாநிலத்திலும் மங்களூர், பெங்களூர் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் உட்பட பல மாவட்டங்களைச் சேர்ந்த 15க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் அடித்து நொறுக்கப் பட்டன. கிருத்தவ பாதிரியார்களும், கன்னியாஸ்திரிகளும் தாக்கப்பட்டனர். கர்நாடகாவில் தேவாலயங்களை அடித்து நொறுக்கிட வெளிப்படையாகவே அறிக்கை வெளியிட்டது. குரங்குப் படையான பஜ்ரங் தள் அமைப்பு. மதமாற்றம் தான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்று கலவரங்களுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் பேசினார், கர்நாடக மாநில முதல்வர் எடியூரப்பா.

ஒரு குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்தால் அவ்விடத்தில் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது தென்பட்டால் கூட அவரை பயங்கரவாதியென சித்தரித்து கைது செய்யும் காவல்துறை, இந்துமதவெறி யர்களின் வெறியாட்டத்தை வேடிக்கை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தது. இது மட்டுமல்லாமல் மங்களூர், உள்ளால் உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட கிறித்தவ மக்கள் எதிர்ப்போராட்டம் நடத்தியபோது அவர்களை தடியடி நடத்தி தனது இந்துத்துவ வெறியைக் காட்டியது பா.ச.க அரசு. இதற்கிடையே தமிழகத்தில் நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரில் கிறித்தவ பிரார்த்தனைக் கூடத்தின் மீது இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் தாக்குதலில் ஈடுபட்டனர். இது தொடர்பாக இரு இந்து முன்னணி பிரமுகர்களை போலீஸார் கைது செய்தனர். அடுத்து மதுரையில் ஒரு தேவாலயத்தில் தாக்குதல் நடத்தினர். அதேபோல் கேரள மாநிலம் கொச்சியில் 2 தேவாலயங்கள் தாக்கப்பட்டன.

மதவெறியைக் கிளப்பிவிட்டு அதில் தனது பார்ப்பனிய அரசியல் பயணத்தை நடத்த விரும்புகின்ற பா.ச.க குறிப்பாக தனது ஆட்சியில் உள்ள மாநிலங்களிலும், ஆளும் கூட்டணியில் உள்ள மாநிலங்களிலும் மட்டுமல்லாமல் தமிழகம் மற்றும் கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களிலும் தனது மதவெறி யாட்டத்தின் மூலமாக அரசியல் செய்ய நினைத்திருந்தது. அதனை உணர்த்த காங்கிரஸ் அரசு, கர்நாடக அரசை மத்திய அரசின் 356 ஆம் பிரிவின் கீழ் கலைத்து விடுவோம் என்று மிரட்டியது. பா.ச.க.வின் மத்திய தலைமை "கலைத்துப் பார்க்கட்டும்" என்று வீரவசனம் பேசியது. ஆனால் கர்நாடக மாநிலத் தலைமையோ எங்கே கலைத்துவிடப் போகிறார்களோ என்ற பதற்றத்தில் சிலரைக் கைது செய்ய நடவடிக்கைகள் எடுத்தது.

பஜரங்தள் அமைப்பின் கர்நாடக மாநில அமைப்பாளர் மகேந்திர குமாரை கர்நாடக காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் தாக்குதலில் ஈடுபட்டதாக சுமார் 60 பேரை கைது செய்தனர். முதலில் நீதி விசாரணைக்கு உத்தரவிட மறுத்த எடியூரப்பா மத்திய அரசின் எச்சரிக் கையைக் கண்டு பயந்து நீதி விசார ணைக்கும் உத்தரவிட்டார். மகேந்திர குமாரின் கைதுக்கு அதிருப்தி தெரிவித்துள்ள பஜ்ரங்தளத்தினர் பெங்களூரில் தனது தாக்குதலை மேலும் தொடர்ந்தனர். ராஜராஜேஸ்வரி நகர், மரியன்னபாளையா மற்றும் பனஸ்வாடி ஆகிய இடங்களில் உள்ள 3 தேவாலயங்களுக்குள் புகுந்த பஜ்ரங் தளத்தினர் அங்கு தாக்குதல் நடத்தினர். பல இடங்களில் 144 தடை உத்தரவும் போடப்பட்டது.

இக்கலவரங்களுக்குக் காரணமான இந்து மதவெறி சங் பரிவார அமைப்புகளான விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் ஆகிய அமைப்புகளுக்கு தடை விதிக்க வேண்டுமென பல்வேறு தரப்பிலும் கோரிக்கைகள் எழுந்தன. மத்திய அரசின் கூட்டணிக் கட்சித் தலைவரான ராம்விலாஸ் பாஸ்வான் இதனை மத்திய அரசிற்கு கோரிக் கையாகவே விடுத்தார். பார்ப்பனியத் தொலைக்காட்சியான என்.டி.டி.வி. தொலைக்காட்சி கூட சிமி போன்ற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு தடைவிதிக்க முடியும்போது ஏன் பஜ்ரங் தளத்திற்கு தடை விதிக்க முடியாது." என்ற பெயரில் விவாதங்களை அரங்கேற்றியது. அதன் முடிவில் நடைபெற்ற கைபேசிக் கருத்துகணிப்பில் சுமார் 52 விழுக்காட்டினர் பஜ்ரங் தள அமைப்பிற்குத் தடைவிதிக்க வேண்டுமெனக் கூறினர். அனைத்துத் தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வந்திருந்த போதும் காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு சங்பரிவார அமைப்புகளின் மீது தடை விதிக்காமல் ஆழ்ந்த மவுனம் கடைப்பிடிக்கிறது. அது தூக்கிப்பிடிக்கும் இந்திய தேசிய அரசியலின் வெளிப்பாடு மட்டுமல்ல, அதன் மிதவாத இந்துத்வப் போக்கும் தான் இந்த மௌனத்திற்கு காரணம்.

தடை செய்யப்படவேண்டிய சங்பரிவாரம் போன்ற மதவெறி அமைப்புகளை மக்களே தடை செய்து ஒழிக்கும் காலம் ஒன்று வரும். அதற்கு மக்கள் மதத்தின் பெயரால் திரள வேண்டிய அவசியமில்லை. மனித நேயத்தின் பெயரால் திரண்டாலே போதும். ■

## தமிழில் பெயர்மாற்றியதற்கு வாழ்த்துகள்

**த.தே.பொ.க. பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ.நல். ஆறுமுகம் - மகளிர் ஆயம் அமைப்புக்குழு உறுப்பினர் தோழர் சுமதி ஆகியோர் தமது அன்பு மகள் ராதிகாவின் பெயரை ஆ.கனிமொழி என நல்ல தமிழில் மாற்றியுள்ளனர். இப்பெயர் மாற்றம் நிகழ்வை யொட்டி புதிய தமிழர் கண்ணோட்டம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை நல்கினர்.**

**செல்வி கனிமொழிக்கும் அவர்தம் பெற்றோருக்கும் நல்வாழ்த்துகள்.**

# சிறையாளிகளுக்குப் பொதுமன்னிப்பு

## ஒரு திறனாய்வு

- தமிழ்த் தேசியன்

அண்ணாபிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1405 சிறையாளிகளைத் தமிழக அரசு விடுதலை செய்துள்ளது. இதில் சார்புத் தன்மை காட்டி, ஒரு சாரரை விடுதலை செய்ய மறுத்தது சட்டப்படியும் சரியல்ல; ஞாயப்படியும் சரியல்ல.

பதினேழு ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் நளினி விடுதலை செய்யப்படவில்லை. பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் குணங்குடி அனிபா போன்ற இஸ்லாமியத் தோழர்கள் விடுதலை செய்யப்பட வில்லை. தமிழ்த்தேசிய மீட்புப் படை, தமிழ்நாடு விடுதலைப்படை போன்ற அமைப்புகளின் பெயரால் செயல் பட்டவர்களும் விடுதலை செய்யப் படவில்லை.

பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட ஒன்பது பேர்களின் மரண தண்டனையும் வாழ்நாள் தண்டனையாக மாற்றப்படவில்லை.

சுருங்கச் சொன்னால் சமூக நோக்கங்களுக்காக - அரசியல் நோக்கங்களுக்காக நிகழ்த்தப்பட்ட "குற்றச் செயல்களில்" தண்டிக்கப் பட்டோருக்கு இந்தப் பொதுமன்னிப்பில் பலன் இல்லை. தனிநபர் பகை, தனிநபர் ஆதாயங்கள் போன்றவற்றிற்காக குற்றச்செயல்களில் ஈடுபட்டுத் தண்டிக் கப்பட்டோர்க்குப் பலன் கிடைத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் சிறைத்துறை சீர்திருத்தங்களில் முனைப்புக்காட்டி வரும் தற்போதைய சிறைத்துறைத் தலைமை அதிகாரி திரு.ஆர். நடராஜ் அவர்களுக்கும் நாம் முன் வைக்கும் கோரிக்கைகளும் திறனாய்வுகளும் இவைதாம் :

1. பொது மன்னிப்பு வழங்கும் போது முன்னுரிமை பெறவேண்டிய வர்கள் அரசியல் சிறையாளிகள்.

2. பொது மன்னிப்பு வழங்குவது என்று வந்தபின், அவர்கள் செய்த குற்றத்தின் தன்மையைப் பார்க்காமல் சிறைக்குள் அவர்களின் நடத்தையை மட்டும்தான் பார்க்க வேண்டும். இந்த அணுகுமுறை அரசியல் குற்றங்களில் ஈடுபட்டோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

3. நடுவண் அரசு சட்டங்களின் கீழ் சிறைப்பட்டோர்க்கு மாநில அரசு தண்டனைக்குறைப்புச் செய்ய இயலாது என்று முதல் அமைச்சர் கூறும் கருத்தில் குழப்பங்கள் உள்ளன.

4. வாழ்நாள் தண்டனை பெற்றோரை 7 ஆண்டுகள் தண்டனை முடிந்தவுடன் விடுவித்தது சரியல்ல. குறைந்தது பத்தாண்டுகள் தண்டனை யாவது அனுபவித்திருக்க வேண்டும். தனிப்பட்ட பகையின்றி சமூக மற்றும் அரசியல் நோக்கங்களில் செய்யப்பட்ட குற்றச் செயல்களுக்காக வாழ்நாள் தண்டனை பெற்றோரை, பத்தாண்டு என்பதிலிருந்து விதிவிலக்களித்து முன்கூட்டியே விடுதலை செய்யலாம்.

5. வாழ்நாள் தண்டனை என்பது பொதுவாக 14 ஆண்டுகளுக்கு மேல் போகக்கூடாது. வாழ்நாள் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் சிறையில் இருப்பது என்று உச்சநீதி மன்றம் கூறியுள்ளதை மாற்ற வேண்டும்.

6. தமிழகச் சிறைகளில் உள்ள அனைத்து மரண தண்டனைச் சிறையாளிகளையும் வாழ்நாள் சிறையாளிகளாகத் தண்டனைக் குறைப்புச் செய்து, அவர்களில் பத்தாண்டு சிறையிலிருந்தோரை விடுதலை செய்யவேண்டும்.

**இவற்றிற்கான நமது விளக்கங்கள்** : பொது மன்னிப்பு வழங்குவதில் அரசியல் சிறை யாளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது ஏன்? அவர்கள் தன்னல நோக்கமின்றி சமூக அக்கறையில் அக்குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள். அரசியல் சிறையாளி களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது பல்வேறு நாடுகளில் உள்ள நடைமுறையாகும்.

1971-ல் சிங்கள அரசைத் தூக்கி எறிய ஆய்தப்புரட்சி செய்த ஜனதா விமுக்தி பெரமுனா அமைப்பைச் சேர்ந்த பல்லாயிரம் இளைஞர்களைப் பின்னர்



அந்த அரசு விடுதலை செய்தது. வெடிகுண்டு பயன்படுத்தியோர், துப்பாக்கிச் சூடு நடத்தியோர், கொலைக் குற்றம் சாட்டப்பட்டோர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அவர் களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப் பட்டது.

கியுபப்புரட்சிக்கு முன் அங்கிருந்த பட்டிஸ்டா சர்வாதிகாரியை எதிர்த்துப் போராடி சிறைப்பட்ட பிடல் காஸ்ட்ரோ உள்ளிட்ட புரட்சியாளர் பலரையும், மற்ற குற்றவாளிகளையும் பட்டிஸ்ட்டா பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

எனவே பொதுமன்னிப்பு என்று வரும்போது அரசியல் சிறையாளி களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

சிறப்புக் காரணங்கள் இருந்தால், 7 ஆண்டு என்ற வரம்பு கூடப் பார்க்காமல் அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

நடுவணரசுச் சட்டப்படி சிறைப்பட்டோருக்கு, மாநில அரசு தண்டனைக்குறைப்பு செய்ய முடியாது என்பது சட்டக் குழப்பமாக உள்ளது. அரசமைப்புச்சட்ட விதி 161 - பின்வருமாறு கூறுகிறது.

*"மாநில அரசின் நிர்வாக அதிகாரத்திற்குட்பட்ட சட்டங்களின் படி தண்டிக்கப்பட்டவர்களை மன்னித்து அவர்களின் தண்டனை யை நீக்க, குறைக்க, இடைநீக்கம் செய்ய மாநில ஆளுநர்க்கு அதிகாரம் உண்டு."*

இதில் "மாநில அரசின் நிர்வாகத் திற்குட்பட்ட சட்டங்கள்." என்பதற்கு விளக்கம் தேவைப்படுகிறது. குற்றவியல் நடைமுறைச்சட்டம் , இந்தியத் தண்டனைச் சட்டம் ஆகியவை பொதுப் பட்டியலில் வருகின்றன.

பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரங்கள் இந்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுவானவை. ஏதாவ தொரு அதிகாரம் பற்றி இந்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் முரண்பாடு வந்தால் இந்திய அரசுக்கான அதிகாரம் மே லோங்கி இருக்கும்.

தண்டனைக்குறைப்பு பற்றி குற்றவியல் நடைமுறைச்சட்ட விதிகள் 432,433,433 A, 434,435 ஆகியவை பேசுகின்றன.

விதி 435, நடுவண் அரசு சட்டங்களின் கீழ், நடுவண் அரசுக் காவல்துறை புலனாய்வு செய்த குற்றங்களில் தண்டிக்கப்பட்டோர்க்கு, மாநில அரசு பொதுமன்னிப்பு, தண்டனைக் குறைப்பு, தண்டனை இடைநீக்கம் போன்றவற்றிற்கு ஆணையிட உரிமை இல்லை என்கிறது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கை, நடுவண் புலனாய்வு அமைப்பு நடத்தியது. நடுவண் சட்டமான தடாச் சட்டத்தின் கீழ் அவ்வழக்கு நடத்தப் பட்டது. ஆனால் தீர்ப்பு வழங்கியது மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அமர்வு நீதிமன்றம் இந்த ஏற்பாடு அதிகார வரம்புக் குழப்பம் போல்தெரியும். ஆனால் குழப்பமடைய வேண்டியதில்லை. சட்டம் ஒழுங்கு மாநில அதிகாரத்தில் வருகிறது.

எனவேதான், இவ்வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நளினிக்குத் தமிழக அரசு தண்டனைக் குறைப்பு வழங்கி, மரண தண்டனையை வாழ்நாள் தண்டனை ஆக்கியது.

இப்பொழுது அவர் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டார். ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த வாழ்நாள் சிறையாளர்களையெல்லாம் அண்ணா நூற்றாண்டை ஒட்டி விடுதலை செய்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, நளினியை விடுதலை செய்ய மறுத்து விட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம், நடுவண் அரசின் சட்டங்களின் கீழ் வழக்கு நடத்தப்பட்டு தண்டிக்கப் பட்டோர்க்குத் தண்டனைக்குறைப்பு செய்ய மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்பதாகும்.

இவரது இந்த வாதம் தன் முரண்பாடு ஆகும். இதே கலைஞர் கருணாநிதி ஏற்கெனவே முதல்வராக (1996 -2001) இருந்தபோது, நளினியின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தார். அப்போது, நடுவண் அரசின் தடாச்சட்டத்தின் கீழ் நடுவண் காவல்துறையினர் நடத்திய வழக்கில் தண்டிக்கப்பட்டவர்தாம் நளினி.

ஏன் இந்தத் தன்முரண்பாடு? அப்போது நளினியின் மரணதண்டனை யை வாழ்நாள் தண்டனையாகக்

**"வாழ்நாள் தண்டனை என்பது அதிக அளவு 14 ஆண்டுகளாக மட்டுமே இருக்க வேண்டும். அதற்கு மேல் நீடிக்க கூடாது . பத்தாவது ஆண்டிலிருந்து ஆய்வுக்குழு சிறையாளியின் நன்னடத் தையைக் கவனித்து அதற்கேற்ப விடுதலை செய்யப் பரிந்துரைக்க வேண்டும். வாழ்நாள் சிறையாளிகள் கால வரம்பற்று 20 ஆண்டுகள், 22 ஆண்டுகள் என்று சிறையில் அடைக்கப்பட்டிருப்பது காட்டுமிராண்டித்தனமாகும். நாகரிகச் சமூகம் இதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாது. அதேவேளை, வாழ்நாள் சிறையாளிகளை ஏழு ஆண்டு நிறை வடைந்ததும் விடுதலை செய்வது அநீதியானது."**

குறைக்கக் கோரினார், சோனியா காந்தி. அதனால், "துணிந்து " தண்டனைக் குறைப்பு செய்தார். இப்போது அவ்வாறு இந்திய அதிகார பீடத்திலிருந்து சைகை எதுவும் காட்டப்படாததால் சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்து கொள்கிறார்; தமக்கு அதிகாரம் இல்லை என்கிறார்.

நளினி, இராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் தமிழக அரசு தண்டனைக் குறைப்பின்கீழ் தங்களை விடுதலை செய்யவேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். நீதிபதி நாகமுத்து அதற்கான முடிவைத் தமிழக அரசு எடுக்க உரிமை உண்டு என்று தீர்ப்பளித்தார்.

வாழ்நாள் தண்டனை என்பது அதிக அளவு 14 ஆண்டுகளாக மட்டுமே இருக்க வேண்டும். அதற்கு மேல் நீடிக்க கூடாது . பத்தாவது ஆண்டிலிருந்து ஆய்வுக்குழு சிறையாளியின் நன்னடத் தையைக் கவனித்து அதற்கேற்ப விடுதலை செய்யப் பரிந்துரைக்க வேண்டும்.

வாழ்நாள் சிறையாளிகள் கால வரம்பற்று 20 ஆண்டுகள், 22 ஆண்டுகள் என்று சிறையில் அடைக்கப்பட்டிருப்பது காட்டுமிராண்டித்தனமாகும். நாகரிகச் சமூகம் இதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாது.

அதேவேளை, வாழ்நாள் சிறையாளிகளை ஏழு ஆண்டு நிறை வடைந்ததும் விடுதலை செய்வது அநீதியானது. கொலைக்குற்றம் புரிந்து சிறையில் இருப்பவரின் நலனை அவருக்குரிய மனித உரிமையைக் கவனிக்க வேண்டும். குற்றவியல் நீதிமுறை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது கட்டாயம்.

ஆனால் கொலையுண்ட நபரின் குடும்பத்தார் , உறவினர் ஆகியோர் மன நிலையையும் கவனிக்க வேண்டும். கொலை செய்த ஒருவர் ஏழு ஆண்டுகளில் வெளியே வந்து உலாவுவது உறவினரைப் பறிகொடுத் தோர் மனதில் என்ன உணர்வை ஏற்படுத்தும்? அக்கொலையைக் கண்டனம் செய்த பொது மக்கள் மனதில் என்ன உணர்வை ஏற்படுத்தும்? ஏழு ஆண்டு என்பது மிகவும் குறுகிய காலம். கொலையுண்டவரின் உறவினர் மனநிலையையும், பொதுமக்கள் மனநிலையையும் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை என்று வாதம் செய்தால், அது மனித நேயமற்ற, மனிதரின் உயிர்வாழும் உரிமைபற்றி அக்கறையற்ற பார்வையாகும்.

அடுத்து, தண்டனை என்பது குற்றச்செயலில் ஈடுபடாமல் மற்றவர் களைத் தடுக்கும் தன்மை கொண்டதும் ஆகும். தண்டனைகளுக்கு, குற்றம் பெருகாமல் தடுக்கும் (Deter) ஆற்றல் இல்லை என்று மறுக்க முடியாது. தண்டனைகள் மட்டுமே குற்றங்களில் ஈடுபடாமல் மற்றவர்களைத் தடுத்து விடும் என்று முடிவு செய்யக்கூடாது. அவ்வளவே.

ஏற்கெனவே, 1957-இல் கேரளாவில், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு 7 ஆண்டு தண்டனை முடித்த வாழ்நாள் சிறையாளிகளைப் பொது மன்னிப் பொன்றில் விடுதலை செய்தார் என்று தோழர் தியாகு முன்னெடுத்துக்காட்டு கூறுகிறார். (நக்கீரன் 2008 செப் 24). அதுமட்டும் போதுமான தருக்கமல்ல. அதேபோல் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் எட்டாண்டுகளுக்கு மேல் வாழ்நாள் சிறையாளிகளைச் சிறையில் வைக்கக் கூடாது என்று கூறியதையும் அவர் எடுத்துக்காட்டுகிறார். செய்த குற்றத் திற்குத் தண்டனை அளிப்பது- தண்டிக் கப்பட்டவரின் மனித உரிமையைப் பாதுகாப்பது என்ற இரண்டையும் சமன்படுத்துவதாகத்தான் குற்றவியல் நீதிமுறை (Criminal Justice System) இருக்க வேண்டும். மேற்கண்ட வாதம் இந்தச் "சமன் பாட்டிற்கு"ப் போது மானதாக இல்லை.

சிறைச்சாலை, குற்றம் செய்தோரைச் சீர்திருத்தும் பள்ளியாக இருக்கவேண்டும் என்பது முற்றிலும் சரி. குற்றம் செய்தவர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்காது. தண்டனை அளவு, அதன் தன்மை ஆகியவற்றில் வெவ்வேறு கருத்துகள் இருக்கலாம்.

சிறைச்சாலை என்பது அடிப்படையில் தண்டனைக்கூடம். அங்கு சிறையாளிகளை மனிதர்களாக நடத்த வேண்டும். உரிய வசதிகள் செய்து தரவேண்டும். ஆனால் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை பெற்றோரை 7 ஆண்டுகளில் விடுதலை செய்யவேண்டும் என்பது சரியல்ல.

தமிழக சிறைத்துறை தலைவராக உள்ள திரு. ஆர். நடராஜ் ஒரு புள்ளி விவரம் தந்தார். அண்மையில் அது ஏடுகளில் வந்துள்ளது. குற்றம் செய்து சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானோர் மீண்டும் குற்றங்கள் செய்து சிறைக்கு வருவதில் அனைத் திந்தியச் சராசரி 5 விழுக்காடு . ஆனால் தமிழ்நாட்டில் இது 16 விழுக்காடு என்றார்.

தமிழ்நாட்டில் கூலிக்குக் கொலை செய்வோர் எண்ணிக்கை பெருகி வருகிறது. அவர்களுக்கு ஏழாண்டு சிறைத்தண்டனை என்பது சொடக் கடிக்கும் காலம்தான்.

அடுத்து, தமிழ்நாட்டில் மரண தண்டனைச் சிறையாளிகளாக பேறறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட 9 பேர் உள்ளனர். அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டியாவது முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த 9 பேரையும் வாழ்நாள் சிறையாளிகளாக மாற்ற வேண்டும்.

மேலும் சிறைச்சீர்த்திருத் தங்களை விரைவுப்படுத்த வேண்டும். விசாரணைச் சிறையாளிகளாகப் பல்லாண்டுகள் சிறைகளில் துன்புறும், பிணை எடுக்க ஆள் அற்ற ஏழை, எளியவர்களை கவனித்து விரைந்து தீர்ப்பு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்த்தேசிய மீட்புப்படை, தமிழ்நாடு விடுதலைப்படை, மா வோயிஸ்ட் கட்சி அல், உம்மா போன்ற அமைப்புகளின் வழிகாட்டலில் வன்முறை நிகழ்வுகளில் ஈடுபட்டவர்கள் என்று சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் சிறையாளிகள் அனைவரையும் தண்ட னை ஆண்டுகளைக் கணக்கில் கொள்ளாமல் அவர்களின் சிறை நன்னடத்தையைக் கணக்கில் கொண்டு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

■

# தமிழக மலைப்பரப்பை ஆக்கிரமிக்கிறது கேரளம்

■ *கே.எம்.அப்பாஸ்*

கேரள அரசின் வனத் துறையினர் தேனி மாவட்டத் தைச் சேர்ந்த கண்ணகி கோயிலை உள்ளடக்கிய வண்ணாத்திப்பாறை, மாவடி, வட்டத்தொட்டி உள்ளிட்ட தமிழ்ப்பகுதிகளைக் கேரளப்பகுதி என ஒரு தலைச் சார்பாக, அவர்களாகவே அளந்து எல்லைக் கல் நட்டுள்ளார்கள். இவ்வாறான ஆக்கிரமிப்பு இன்று நேற்றல்ல, 1956 மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்ட காலத்திலிருந்தே தொடர்கிறது.

தொண்ணூற்று மூன்று விழுக்காடு தமிழர்களைக் கொண்டிருந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்திலிருந்து பிரித்து 1956 மொழிவாரி மாநில அமைப்பின்போது கேரளத்துடன் சேர்த்தார்கள். அதேபோல் நெடுமங்காடு, நெய்யாற்றங் கரை, சித்தூர், மற்றும் நகர் நீங்கிய செங்கோட்டை வட்டம் ஆகிய தமிழ்ப் பகுதிகளையும் கேரளத்துடன் சேர்த்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை தமிழக எல்லைப் பகுதிகளைச் சிறுகச் சிறுக கேரளம் ஆக்கிரமித்து வருகிறது.

1958- 59-ல் கேரள முதலமைச்சராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளை, சிறையிலிருந்த குற்றவாளிகளைக் கூட்டமாக விடுதலைச் செய்து, தேவிகுளம் , பீர்மேடு பகுதியில் "பட்டம் காலனி" என்ற பெயரில் குடியேற்றப்பகுதியை உருவாக்கி, அதில் அவர்களைக் குடியமர்த்தினார். அவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்கள் தமிழர் களுக்குச் சொந்தமாயிருந்த ஏலத் தோட்டங்களைக் கேரளக் காவல் துறையின் துணையுடன் ஆக்கிரமித்தனர். அந்த ஆக்கிரமிப்பை எதிர்த்த தமிழர்கள் மீது கேரளக் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. தமிழர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதைக் "கொச்சரவு கலவரம்" என்பார்கள் அவர்கள்.

அதன்பின் 1984-இல் தமிழக வனப் பகுதிக்குள் மலையாளிகள் அத்துமீறி நுழைந்து பலநூறு ஏக்கர் நிலத்தில் குடிசைகள் போட்டுத் தங்கினர். அத்துடன் மிளகு, கப்பை, வாழை பயிரிட்டனர். அவர்களை வெளியேறுமாறு தமிழக வனத் துறையினர் எச்சரித்தனர்.

மலையாளிகள் வெளியேற மறுத்தனர்; தமிழக வனத் துறையினரைத் தாக்கினர். சிலரைப் பிடித்துக் கட்டி வைத்து அடித்தனர்; அவர்களை உயிரோடு எரிக்க முயன்றனர். செய்தியறிந்து தமிழகக் காவல் துறையினர் அவர்களை மீட்கச் சென்றனர். அப்போது தமிழகக் காவல் துறையினர்க்கும் கேரளக் காவல் துறையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது.

பின்னர் கேரளத்தைச் சேர்ந்த கோட்டயம் மாவட்ட ஆட்சியர், அம்மாவட்ட வனத்துறை அலுவலர்கள், மாவட்டக்காவல் துறையினர் ஆகியோர்க்கும் , தமிழக மதுரை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வனத்துறையினர் மற்றும் காவல்துறையினர் ஆகியோர்க்கும் இடையே அமைதிப்பேச்சு நடந்தது. அக்கூட்டத்தில், இனிமேல் எல்லைச்சிக்கல்களை இரு மாநில வனத்துறையினர்



மற்றும் வருவாய்த்துறையினர் பேசித் தீர்த்துக்கொள்வது என்றும், இதில் இரு மாநிலக் காவல் துறையினரும் தலையிடுவதில்லை என்றும் முடிவெடுத்தனர்.

தேனி மாவட்டம், கூடலூர் (வண்ணாத்திப்பாறைகண்ணகிகோயில்) பகுதியிலிருந்து நீலகிரி மாவட்டம், கூடலூர் அரங்காடு பகுதிவரை பல நூறு கிலோ மீட்டர் தொலைவு எல்லைகள், இதுகாறும் அளந்து வரையறுக்கப் படவில்லை. கண்ணகி கோயில் பகுதி முழுக்க முழுக்க தமிழக வனத்துறையின் எல்லைக்குட்பட்டது. இது கூடலூர் ஊராட்சிக்கு உட்பட்டது.

கேரள வனத் துறை யினர் தங்கள் எல்லைக்குள் தான் வன அலுவலகம் மூன்றைக் கட்டி உள்ளனர். 100 அடி உயரக் கண்காணிப்புக் கோபுரத்தின் மூன்று கால்கள் கேரள எல்லைக்குள் இருக்கின்றன. ஆனால் அதன் ஒரு கால் மட்டும் தமிழக எல்லைக்குள் இருக்கிறது.

கண்ணகி கோயில் பகுதியில், தமிழக எல்லைக்குள் உள்ள ஓர் ஏரியைக் கேரள வனத்துறையினர் மூடிவிட்டனர். சித்திரை முழு நிலவு நாளில் மட்டும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை தமிழகத்திலிருந்து செல்வோரைக் கண்ணகி கோயிலுக்குப் போக அனுமதிக்கின்றனர்.

கண்ணகி கோயில் செல்லும் பாதை குமுளியிலிருந்து கேரள வனத்துறை எல்லைக்குள் உள்ளது. தமிழக எல்லைக்குள் கூடலூரிலிருந்து பளியங்குடி வழியாகச் செல்லும் கண்ணகி கோயில் பாதை ஒற்றை அடித்தடமாகவே உள்ளது. அதில் தமிழக அரசு சாலை போட்டுத் தரவில்லை. அமைச்சராக இருந்தபோது தமிழ்க்குடி மகன் சித்திரை , முழுநிலவு நாள் அல்லாத வேறொரு நாளில் குமுளி வழியாகக் கண்ணகி கோயில் போக முயன்றார். கேரள வனத்துறையினர் அவரை அனுமதிக்கவில்லை.

1815 ,1915,1935 ஆண்டு களில் திருவிதாங்கூர் அரசுக்கும் சென்னை மாகாணத்திற்கும் இடையில் உள்ள எல்லை முழுமையாக அளக்கப் பட்டு அதன் வரைபடங்களும் போடப்பட்டன.

இவ்வரைபடங்கள் தமிழக அரசிடமும் இருக்கின்றன; கேரள அரசிடமும் இருக்கின்றன. ஆனால் கேரள அரசு மேற்படி நில அளவையை ஏற்க மறுக்கிறது. 1956 மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பின் நில அளவை செய்து எல்லை கோல வேண்டும் என்று தமிழக அரசு கோருகிறது. அதற்கும் கேரள அரசு மறுப்புக் கூறுகிறது. ஆனால் கண்ணகி கோயில் (மங்கலதேவி கோவில்) எல்லைச் சிக்கலைக் கேரளாதான் முதன் முதலாகக் கிளப்பி தமிழக உரிமையை மறுத்தது.

இப்பொழுது முல்லைப் பெரியாற்றை ஒட்டிய தமிழக வனப் பகுதிகளைக் கடந்த பல மாதங்களாகக் கேரளம் தொடர்ந்து ஆக்கிரமித்து வருகிறது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி 2008 - 2009-ம் ஆண்டிற்கான வனத்துறை ஆய்வு அறிக்கையில், இரண்டாம் பக்கம் ,பத்தி 6-ல் ஆக்கிரமிப்பிலிருந்து வன நிலங் களைப் பாதுகாக்க , நடப்பு நிதி ஆண்டில் ரூ. 1.20 கோடி செலவில் 10,000 எல்லைக் கற்கள் நடப்படும் என்று அறிவித்தார். அதற்குப் பிறகுதான் கேரள அரசின் தமிழக ஆக்கிரமிப்பு தீவிரமாகியது. தமிழகப் பகுதியில் கேரளம் எல்லைக் கற்களை நடுகிறது.

ஆலந்து நாட்டில் திஹேக் நகரில் உள்ள ஐ.நா. மன்றத்தின் உலக வனவிலங்கு பாதுகாப்புக் குழு , பல நாடுகளில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்களுக்குப் பலகோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இந்த அமைப்பின் புதிய திட்டப்படி 1500 ச.கி.மீ பரப்பளவில் உள்ள விலங்குச் சரணாலயங்களுக்குத் தான் இந்த நிதி உதவி கிடைக்கும்.

கேரளாவில் பெரியாறு புலிகள் சேமக்காடு 777 ச.கி.மீ பரப்பளவில் முல்லைப்பெரியாறு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் கேரளாவிற்குத் தான் வருகின்றனர். ஐ.நா. மன்றத்தின் வனவிலங்கு சரணாலயப்பட்டியலில் கேரளாவும் குறிக்கப்பட்டுள்ளது.

இப்போது வந்துள்ள ஐ.நா. மன்றத்தின் புதிய திட்டப்படி 777 ச.கி.மீ பரப்பளவுள்ள பெரியாறு புலிகள் சரணாலயம் (PTR) இனி அதன் சுற்றுலாப் பட்டியலில் இடம் பெற வாய்ப்பில்லை. இந்நிலையில் இந்திய அரசு முல்லைப்பெரியாறு அணையைச் சுற்றியுள்ள, தமிழ்நாட்டு வனநிலங் களையும் சேர்த்து, சற்றொப்ப 2000 ச.கி.மீ பரப்பளவில் ஒரு வனவிலங்குச் சரணாலயத்தை ஏற்படுத்தத் திட்டம் தீட்டியது. ஆனால் அத்திட்டத்தைக் கேரள அரசு ஏற்கவில்லை. இந்திய அரசுப்பொறுப்பில் வனவிலங்குச் சரணாலயம் உருவாவதை ஏற்காத கேரள அரசு தன்பொறுப்பில் 1500 ச.கி.மீ. பரப்பில் சரணாலயம் உருவாக்க முயல்கிறது. அதற்காகத் தமிழ்நாட்டு வனநிலங்களை வன்கவர்தல் செய்து வருகிறது .

கேரள அரசு தனது வனப் பகுதிக்குள் நன்கு சாலைவசதி செய்துள்ளது. ஆனால் தமிழ்நாட்டு வனப்பகுதிக்குள் சாலை வசதியே இல்லை.

மற்றொரு முகாமையான செய்தி கேரள அரசு, மலைவாழ் பழங்குடி மக்களான முதுவான், பளியர், மன்னார், தோடர் போன்றவர்களிலிருந்து அன்றாடக்கூலிக் காவலர்களை (என்.எம்.ஆர்) அமர்த்தியுள்ளது. அப்பழங்குடியினர்க்குக் காட்டின் இண்டு இடுக்கு அனைத்தும் அத்துப்படி. அவர்களின் துணைக்கொண்டுதான் இப்பொழுது கேரளம் ஒரு சார்பாக, தமிழகப் பகுதிக்குள் எல்லைக்கற்களை நட்டுவருகிறது. தமிழக வனத்துறை, தமிழகப் பகுதிக்குள் வசிக்கும் மலைவாழ் பழங்குடி மக்களைப் பகைவர்களாகவே கருதுகிறது.

கம்பத்தைச் சேர்ந்த சி.ஏ.ஏ. குடும்பத்தினருக்குரிய லட்சுமிபாறை பெருந்தோட்டம் (எஸ்டேட்), மிலாப்பாறைப் பெருந்தோட்டம், மங்கலதேவி பெருந்தோட்டம் போன்ற தமிழர்களுக்குரிய நூற்றுக்கணக்கான ஏக்கர் ஏலத் தோட்டங்களை கேரள அரசு ஆக்கிரமித்துக்கொண்டது. டாக்டர். சி.ஏ.ஏ. சலீம் தமது ஏலத்தோட்டத்தைக் கேரள அரசு எடுத்துக்கொண்டதை எதிர்த்துக் கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்துள்ளார். பேரையூர் ஜமீன், சாப்டூர் ஜமீன், சிங்கம்பட்டி ஜமீன், இராசபாளையம் அபுபக்கர் அத்தாவுல்லவின், ராம்கோ குரூப் ராஜா ஆகியோரின் வனநிலங்களையெல்லாம் கேரள அரசின் வனத்துறையினர்

வன்கவர்தல் செய்துவிட்டனர். ஆக்கிரமித்துள்ள பெரும்பாலான தமிழக நிலப்பகுதிகளில் ஸ்பைஸ்மால் கற்களையும் நட்டுள்ளனர்.

தேனி மாவட்டம், கம்பம், கூடலூர், குள்ளப்பக்கவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, உத்தம பாளையம், கோகிலாபுரம் போன்ற பல ஊர்களில் வாழும் தமிழர் களுக்குத் தமிழ்நாட்டு வனப்பகுதிகளான மாவடி, வட்டத்தொட்டி, மங்கலதேவி, உச்சிக்காடு, அமராவதி, மிலாப்பாறை, லெட்சுமிபாறை போன்றவற்றில் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருந்தன. இப்பகுதிகளில் தமிழர்கள் வீடுகட்டி, ஏலத்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான குடியிருப்புகளையும் கட்டி, குடும்பம் குடும்பமாக வசித்து வந்தனர். அதனால் இப்பகுதிகளில் மலையாளிகளும், கேரள வனத்துறையினரும் ஊடுருவ முடியவில்லை.

ஆனால் 1991- இல் தமிழ்நாடு அரசு , ஏலப்பயிர் செய்து வந்த உழவர்களைக் குத்தகை முடிந்து விட்டது என்று கூறி வெளியேற்றிவிட்டது. குத்தகையைப் புதுப்பிக்க மறுத்து விட்டது. ஏலப்பயிர் செய்த விவசாயிகளையும்; உழவுத் தொழிலாளிகளையும் காவல் துறையின் மூலம் வன்முறையை ஏவி வெளியேற்றியது. தமிழகத்திற்குச் சொந்தமான இந்த வனப் பகுதி குள்ளப்பக்கவுண்டன் பட்டியிலிருந்து 3கி.மீ.தொலைவில் தான் உள்ளது.ஏலப்பயிர் செய்த தமிழர்களை வெளியேற்றிய தமிழக அரசு, மலையாளிகளின் ஆக்கிரமிப்பைத் தடுத்ததா? இல்லை.

பச்சைக் கூமாட்சிப் பகுதியை ஒட்டிய இரவங்கல்லாறு பகுதியில் கேரள வனத்துறையினர் ஆக்கிரமிப்பு செய்து எல்லைக் கற்களை நட்டுள்ளனரே, அதையாவது தமிழக அரசு தடுத்ததா? இல்லை. ஒரு கண்டன அறிக்கை கூடத் தமிழக அரசு சார்பில் வெளியிடப்படவில்லை.

கட்டுரையாளர் (கே.எம்.அப்பாஸ்) உள்ளிட்ட விவசாயிகள் கேரள வனத்துறையின் வன்கவர்தல் குறித்துத் தமிழக வனத்துறைக்குப் பல தடவை புகார் கொடுத்தும், அரசு கண்டு கொள்ளவில்லை. என்றைக்குத் தமிழகக் குத்தகைதாரர்களை விரட்டிவிட்டு, தமிழக வனத்துறையே மாவடி வட்டத்தொட்டி, உச்சிக்காடு, அமராவதி போன்ற குத்தகை ஏலத் தோட்டங்களை ஏற்றுக்கொண்டதோ, அன்றிலிருந்தே மலையாளிகள் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தீட்டத் தொடங்கிவிட்டனர்.

கேரள வனத்துறையினர், குமுளியிலிருந்து தென்காசிவரை உள்ள காட்டுப்பகுதியில் செல்ல நல்ல சாலை வசதி செய்து கொண்டுள்ளனர். பளியன் குடியிலிருந்து கண்ணகி கோயிலுக்கு, தமிழக எல்லைக்குள் 7 கி.மீ சாலைகூடத் தமிழக அரசு 1956-லிருந்து 52 ஆண்டுகளாகப் போடவில்லை.

மலையாளிகள் தமிழ்நாட்டு வனநிலத்தை ஆக்கிரமிப்பது தேனி மாவட்டத்தில் மட்டுமல்ல, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர்ப்பகுதி, இராஜபாளையம் செண்பகத்தோட்டப்பகுதி ஆகியவற்றையும் அவர்கள் ஆக்கிரமிக்கின்றனர்.

எனவே, தமிழக வனநிலத்தைப் பாதுகாக்கப் பின்வரும் திட்டங்களை முன்வைக்கிறோம்.

*1. தமிழக அரசு, தமிழக - கேரள வன எல்லையை நில அளவை செய்து கான்கிரீட் எல்லைக்கற்கள் நட வேண்டும்.*

*2. மாவடி, வட்டத் தொட்டி போன்ற இடங்களில் பழைய குத்தகைதாரர்களுக்கு மீண்டும் ஏலப்பயிர் சாகுபடிக்குக் குத்தகை உரிமை தரவேண்டும்.*

*3. தமிழக வனப்பகுதிக்குள் ஜீப் போய் வருவதற்கேற்ப நல்ல சாலை வசதிசெய்ய வேண்டும்.*

*4. வன நிலங்களைப் பாதுகாக்க, வனக் காவலர்களுடன் பழங்குடிமக்களான மன்னார்கள், பளியர்கள், தோதுவர்கள், முதுவான்கள் போன்றவர்களையும் பணியில் அமர்த்த வேண்டும்.*

*5. தமிழக வன எல்லைக்குள் தொலை நோக்கியுடன் கூடிய 100 அடி உயரக் கண்காணிப்புக் கோபுரங்களை ஆங்காங்கு நிறுவ வேண்டும்.*

*6. பளியங்குடியிலிருந்து மங்கலதேவி கண்ணகி கோயிலுக்குச் சாலை அமைக்க வேண்டும்.*

■

## மணமக்கள் வாழ்க

பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டைத் தமிழ்த் தேசியச் சிந்தனையாளர் திரு.வெண்.வீர.முருகு. வீரசிங்கம் இளவல் திரு. வீர.முருகு. கணபதி - திருவாட்டி ஜெயமணி அம்மாள் ஆகியோர் மகன் செல்வன் **கண. முருகவேல்** எம்.எஸ்.சி.க்கும் ஆலத்தூர், திருவாளர்கள் க.திருநாவுக்கரசு திருவாட்டி சிவமலர் ஆகியோர் மகள் செல்வி **தி. ஈஸ்வரி** பி.எஸ்.சிக்கும் 11.09.2008-ல் நாட்டுச்சாலையில் மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஆ.ரெ.மாரிமுத்து அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



தோழர் பெ. மணியரசன் (த.தே.பொ.க. பொதுச்செயலாளர்) முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ந.ரா. ரெங்கராஜன், மதுக்கூர் ஒன்றியப் பெருந்தலைவர் திரு.ஆ.வீ. சுப்பிரமணியன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ஏனாதி திரு. ப. பாலசுப்பிரமணியன் , வழக்குரைஞர் ரெ. இராமசாமி , மருத்துவர் செல்லப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு.வெண. வீர.முருகு . வீர சிங்கம்வரவேற்புரை நல்க, திரு கோ. புருசோத்தமன் நன்றி கூறினார்.

மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ.2000/- அன்பளிப்பு வழங்கினார்கள்.

மணமக்கள் நீடுழி வாழ்க!

# மருத்துவர்களும் மத குருக்களும் – 3

ம.செந்தமிழன்

மனித குலப் பரிணாம வளர்ச்சியில் மருத்துவத்தின் தோற்றம், இயற்கை மீதான மிகை நம்பிக்கைகளுடன் தொடர்புடையதாக இருந்தது.

இம் மிகைநம்பிக்கைகளே மதங்களின் தோற்றுவாயாக விளங்கின. பகுத்தறிவு வாதம் மிகை நம்பிக்கைகளை 'மூடநம்பிக்கை' என்றழைக்கிறது. இவ்விரு சொற்களுக்கும் இடையே பெரிய உட்பொருள் இடைவெளி உண்டு.

இயற்கையில் நிலவுகின்ற புதிர்களைப் புரிந்து கொள்ளும் முயற்சியின் போது, மனிதனுக்கு ஏற்படும் புதிய நம்பிக்கைகள் அறிவு நம்பிக்கை, மிகை நம்பிக்கை என்ற கருத்து வடிவங்களை எடுக்கின்றன.

புதிர்களைத் தர்க்க ரீதியாகப் புரிந்து கொண்டால் அது அறிவாகிறது. முழு தர்க்கம் பொருந்தா நிலையில் அது நம்பிக்கையாகிறது. புதிர்கள் விடுபடா நிலையில் அவை மிகை நம்பிக்கைகளாகின்றன.

மிகை நம்பிக்கை உள்ளிட்ட இம்மூன்றுமே மனித அறிவுத்துறையின் செயல்பாடுகள்தாம் என்பது கவனத்திற்குரியது.

'மூடநம்பிக்கை' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையின் மீதான அறிவுத் தளச் செயல்பாட்டை வலுக் கட்டாயமாக முடித்து வைக்கிறது. அதாவது, ஒரு மிகை நம்பிக்கையின் மீது மானிட அறிவாற்றல் செயல்பட்டு அதனைப்புரிந்து கொள்ளும் முன்பே, அந்நம்பிக்கை 'மூடத்தனமானது' என்ற இறுதித் தீர்ப்பைத் திணிக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் இந்த அணுகுமுறையே, இன்றைய ஆங்கில மருத்துவ முறையின் சகலவித அபத்தங்களையும் சுரண்டல்களையும் தாங்கிப் பிடிக்கின்றது.

சமூகப் பரிணாமத்தில் அனைத்துச் சமூகங்களிலும் தோன்றி வளர்ந்த மரபு சார்ந்த மருத்துவ முறைகளை ஆங்கில மருத்துவம், 'பிற்போக்குத்தனம்', மூடநம்பிக்கைகள் 'அறிவியலுக்குப் புறம்பானவை' என்பன போன்ற பட்டங்களைச் சுமத்தி ஒழித்துக் கட்டிக்கொண்டுள்ளது.



இமோடெப்

உலகின் எந்த மரபுசார் மருத்துவமும்

1. அறிவு, 2. நம்பிக்கை, 3. மிகை நம்பிக்கை - ஆகிய மூன்று படிநிலைகளையும் கொண்டுள்ளது. மார்க்சிய இயங்கியல் தத்துவம் காட்டும் வெளிச்சத்தில் இம்மூன்று நிலைகளையும் உற்று நோக்கினால், ஒரு துறையின் அறிவானது, மிகை நம்பிக்கை, நம்பிக்கை ஆகிய தளங்களைக் கடந்துதான் உருவாக இயலும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மருத்துவம் எனும் துறையின் தோற்றுவாய் முதல், நிகழ்காலம் வரை மேற்கண்ட மூன்று நிலைகளும் தொடர்ந்து இயங்கிக் கொண்டுதான் உள்ளன. இதன் பொருள், மருத்துவத்துறை எக்காலத்திலும், **முழுமையான** பகுத்தறிவுக் களஞ்சியமாக மாறவியலாது என்பதே ஆகும். ஒருவேளை, அப்படி மாறுவதற்கான சாத்தியங்கள் குறித்து யாரேனும் வாதிட்டால், அது இயங்கியலுக்கு எதிரான வாதமேயன்றி வேறல்ல. ஏனெனில், எந்தவொரு அறிவுப் புலமும் முற்றுமுழுதாக முதிர்ச்சியடைந்து விடுவதில்லை. மாறாக, அதன் அறியாமைகளும் அதிகரித்துக்கொண்டு தானிருக்கும் என்பதே இயங்கியலின் சாரம்.

தமிழர் மரபான சித்த மருத்துவம் குறித்தும் அதன் மதப் பின் புலம் குறித்தும் கடந்த பகுதிகளில் கண்டோம். உலகின் தொன்மையான நாகரிகச் சமூகங்களில் ஒன்றான எகிப்திய மருத்துவம் மற்றும் அதனோடு தொடர்புடைய மதக் கருத்தியல்கள் குறித்துக் காண்போம்.

எகிப்திய மருத்துவமுறையும் தமிழர் மருத்துவமுறை போலவே, மிகத் தொன்மையானது. கிரேக்க இதிகாசமான ஒடிஸியை இயற்றிய ஹோமர் (கி.மு.800) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'எகிப்தில், மக்கள் அனைவரும் மருத்துவத்துறையில் பிற சமூகத்தினரைக் காட்டிலும் சிறந்த புலமை பெற்றுள்ளனர்'. மேலும் 'எகிப்தியர்கள் பிற கலைகளைக் காட்டிலும் மருத்துவக் கலையில் சிறந்து விளங்குகின்றனர்'.[1]

எகிப்திய மருத்துவ முறையின் தோற்றம், பிற மரபு மருத்துவங்களைப் போன்றே, இயற்கையின் இயக்கத்தைச் சார்ந்து இருந்தது.

'இரத்தச் சுழற்சியைப் பொறுத்தவரையில், இரத்தநாளங்கள், நரம்புகள், இரத்தக்குழாய்கள் ஆகியவற்றிக்கு இடையிலான வேறுபாடுகளை எகிப்தியர் அறிந்து

கொண்டிருக்கவில்லை. ஆயினும், அவர்கள் இரத்தச் சுழற்சியை நைல் நதியின் நீரோட்டத்தோடு இணைத்துப் புரிந்து கொண்டிருந்தனர். காற்று, நீர், இரத்தம் ஆகியவற்றை எடுத்துச்செல்லும் 'வாய்க்கால்கள்' போல உடலின் இரத்தநாளங்கள் செயல்படுகின்றன என்று எகிப்தியர் புரிந்து கொண்டனர். இந்த ஓட்டம் தடைப்பட்டால், ஆற்றின் ஓட்டம் தடைப்படுவதுபோல் - அந்த அடைப்பை எடுத்துவிட வேண்டும். இல்லையெனில், நதி நீரின்றிப் பயிர்கள் வாடுவதுபோல் , இரத்தச் சுழற்சியின்றி உடல் பாதிப்படையும்' [2]

எகிப்திய மருத்துவ முறையில் மதம் மிக முக்கியப் பங்காற்றியது. கடவுளும், துர்தேவதைகளுமே நோய்களைக் குணமடையச் செய்யும் காரணிகள் என்ற நம்பிக்கை வலுவாக இருந்தது. ஒரு நபர் நோய் வாய்ப் பட்டால், அவரைக் குணப்படுத்த முதலில் மந்திரவாதிகளும், துறவிகளுமே அழைக்கப்பட்டனர். அதன் பிறகோ அல்லது இவ்விருவருடன் மூன்றாம் நபராகவோ மருத்துவர் அழைக்கப் பட்டார்.

மருத்துவர்களும் ஜெபித்தனர்; தந்திர நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

மருத்துவப் பொருட்களின் கூட்டுச் சேர்க்கையிலும் தந்திரப் பண்பாட்டின் கூறுகள் மிகுந்திருந்தன. இதன்படி குறிப்பிட்ட நோயின் தன்மையோடு ஒத்த தாவரம் அல்லது மிருகம் மருத்துவப் பொருளாக் கப்பட்டது. சான்றாக, உடைந்த தலையை ஒட்டவைக்கும் சிகிச்சைக்கு நெருப்புக் கோழியின் முட்டை மருந்து உட்பொருளானது.

இதை 'சிமிலியா சிமிலிபஸ்' (Similiya Similibus) என்றனர் . சங்காலப் பண்பாடு குறித்த ஆய்வுகள் மேற்கொண்ட முனைவர் கா. சுப்பிரமணியன், இத்தகைய தந்திர நடவடிக்கையை **"ஒத்த மந்திரம்"** என்று வரையறுத்துள்ளார்.

சீன மரபு மருத்துவத்திலும் இத்தகைய தந்திர நடவடிக்கைகள் உண்டு.

'இதய வடிவ இலைகள் இதய நோய்க்கு மருந்தாகும் என்பதைச் சான்றாகக் கூறலாம்'.[3]

இவ்வாறாக, எகிப்திய மருத்துவமுறை இயற்கை, தந்திரம் , கடவுள் நம்பிக்கை ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்தே வளர்ந்தது.

எகிப்திய மருத்துவத்தின் தந்தை என்று வழங்கப்படும் **இமோ டெப்** (Imhotep) என்பவரைப் பற்றிய சில குறிப்புகளைக் கண்டால் மேலும் சில விளக்கங்கள் பெறலாம். இமோ டெப் மருத்துவர் மட்டுமல்ல, அவர் கட்டிடக் கலை நிபுணர், தலைமைத் தச்சர், அரண்மனை நிர்வாகி, தலைமைச்சிற்பி மற்றும் மதகுரு.

இமோடெப்பின் பிறதுறை அறிவுகளோடு மருத்துவமும், மதமும் இணைந்தது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. எகிப்திய மருத்துவத்தின் மூலவரான இமோடெப் மதகுருவாகவும் இருந்ததன் வழியே, மருத்துவத்திற்கும் மதத்திற்குமான உட்பிணைப்பை உறுதி செய்தார்.

இமோடெப்பின் மரணத்திற்குப் பிறகு புராதன எகிப்தியர்கள் அவரையும் கடவுளாக வழிபட்டனர்.

இமோடெப் குறித்து பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் பின்வருமாறு கூறுகிறது.

*'புராதன காலத்தில் இமோடெப்பின் புகழ் பேரளவில் மதிக்கப்பட்டது என்பதற்கு எகிப்திய மற்றும் கிரேக்கப் பிரதிகள் சான்றளிக்கின்றன. நூற்றாண்டுகள் கடந்த பிறகும் அவரது பெருமை அதிகரித்துக்கொண்டு தானிருந்தது. கிரேக்க நாகரிகக் காலத்தில் அவருடைய கோயில்களே மருத்துவப் பயிற்சியளிக்கும் பள்ளிகளாயின'*.

இமோடெப்பையும் எகிப்திய மருத்துவத்தையும் வெறும் பகுத்தறிவின் கண்கொண்டு நோக்கினால், 'மருத்துவம் எனும் அறிவியலுக்குப் புறம்பான மூட நம்பிக்கைகளே' முன்னுக்கு நிற்கும்.

மத குருவாக வாழ்ந்த மருத்துவர்; மரணத்திற்கு பிறகு கடவுளாக மாறிய மருத்துவர்; எல்லாவற்றிக்கும் மேலாக, அவரது கோயில்களில் மருத்துவம் கற்பிக்கப் பட்டது. இத்தகைய சேர்க்கையைப் பகுத்தறிவு ஏற்பதில்லை.

ஆனால் இமோடெப் மருத்துவர் அறிஞர்தான். எகிப்திய மருத்துவம் உலகின் சிறந்த மருத்துவ முறைகளில் ஒன்றுதான்.

எகிப்திய மருத்துவம் பற்றிய தரவுகளைத் தாங்கி நிற்பவை. இரண்டு நாணல் சுவடிகள் ( பாப்பிரஸ் -Papyrus) ஒன்று - 'ஸ்மித்' சுவடி, மற்றொன்று 'எபர்ஸ்' சுவடி. இவையிரண்டும் முறையே கி.மு. 17 மற்றும் கி.மு.16 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை.

எபர்ஸ் சுவடி ( Ebers Papyrus) யின் உள்ளடக்க வரிசை இது.

1. மருத்துவச் சிகிச்சைக்கு முன்பான பிரார்த்தனைப் பாடல்.

2. அக மருத்துவ நோய்கள். கண் நோய்கள்.

3. தோல் நோய்கள் ( பலவித தோல் நோய்ப்பட்டியலுடன்)

4. தீவிர நோய்கள் (சிறப்பாக, தலையில் உருவாகும் நோய்கள்)

5. பெண்களுக்கான நோய்கள்.

6. உடற்கூறியல், உடலியல் மற்றும் நோயியல் இயல்புகள் தொடர்பான தகவல்கள் மற்றும் சொற்களுக்கான விளக்கங்கள்.

7. அறுவை சிகிச்சை நோய்கள்.

இந்த வரிசையின் மீது யாரும் ஆட்சேபணை தெரிவிக்கலாம். ஆயினும், இதை எழுதியவரின் நோக்கம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. தமக்குக் கிடைத்த அனைத்துத் தகவல்களையும் ஒருங்கிணைத்துத் தர அவர் முயன்றுள் ளார். இத்தகவல்களைக் கொண்டுதான் அவர் நோய்க்கான சிகிச்சையை மேற்கொண்டார். (முப்பத்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்!) [4]

ஸ்மித் சுவடியின் பல்வேறு உள்ளடக்கங்களில் முக்கியமான பகுதி ஒன்றைக் காண்போம்.

ஒவ்வொரு நோயாளியுடனும் மருத்துவர் உரையாடும் முறைமை பின்வருமாறு அமைந்திருந்தது;

1. தலைப்பு,2. விசாரணை, 3. பரிசோதனை, 4. சிகிச்சை (மரணமடைந்தவர், குணமளிக்க இயலாத நிலையிலுள்ளவர் தவிர)

5.அகராதி (நோயாளியுட னான உரையாடலின் போது வெளியிட்ட குழப்பமான சொற்களின் பொருட்களைக் கொண்ட சிறுபட்டியல்).

இப்பட்டியலில் பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆகிய நடவடிக்கைகள் தனித்தனியே மூன்று விதமான சொற்றொடர்களுடன் முடிந்தன.

பரிசோதனை முடிவில், 1. இது

என்னால் குணமளிக்க முடிந்தநோய்.

2.இந்த நோயுடன் நான் போராடுவேன்.

3. இந்நோயைக் குணப்படுத்த முடியாது.

சிகிச்சையின் முடிவில்.

1. நோயாளி குணமடையும் வரை, 2. நோயின் செயல்படுகாலம் முடியும் வரை, 3. நோயாளி தனது தீர்மான கரமான நிலையை அடையும் வரை'[4] மேற்கண்ட தரவுகளினின்று எகிப்திய மருத்துவமுறையின் நேர்மையையும் இயற்கையின் ஆற்றல் மீது அம்முறை கொண்டிருந்த நம்பிக் கையையும் காண முடிகிறது.

பரிசோதனை, சிகிச்சை ஆகியவற்றின் இறுதி மூன்று சொற் றொடர்களையும் இப்படி இணைத்துப் பார்க்க வேண்டும்.

1. என்னால் குணப்படுத்த முடியும். - நோயாளி குணமாகும் வரை சிகிச்சையளிப்பேன். 2. நோயுடன் போராடுவேன்.- நோயின் செயல் படுகாலம் முடியும் வரை. 3. இந்நோயைக் குணப்படுத்த முடியாது.- நோயாளி தனது தீர்மானகரமான நிலையை அடையும் வரை இம் மூன்றில் கடைசிவரிதான் மிக முக்கியமான கருத்தைத் தாங்கியுள்ளது. இதன்படி, 'மருத்துவரால் குணப்படுத்த முடியாத நோய்க்கு சிசிச்சையளிக்க வியலாது' என்று கைவிரிப்பு இல்லை.

அதேவேளை, 'நோயாளி மரணமடைவார் என்ற முடிவும் இல்லை.

'தீர்மானகரமான நிலை' என்பது மரணமாகவும் இருக்கலாம், உயிர் பிழைத்தலாகவும் இருக்கலாம். அது மருத்துவரின் எல்லைக்கு மேற்பட்டது. அதை மருத்துவர் தீர்மானிப்பதில்லை என்பதே இதன் பொருள்.

இயற்கையின் அங்கமான மனித உடலில் ஏற்படும் நோய்களை இயற்கையே குணமாக்கும் என்ற அறிவும், கடவுள் நம்பிக்கையும் இணைந்த நிலை இது. (தொடரும்)

சான்றுகள் :-


1. Pain Stephanie (2007) ' The Pharaons' Pharmacists "New Scientist. 15 Dec, 2007, PP, 41-43.

2. www.passmoves school.com /history/ mrmodqa.2.htm,theory of blocked channels.

3. www.wiki pedia.com

4.Medicine In old Egypt,

(Transcribed from the History of Science by George Sarton Edited and prepared by prof. Hamed A.Ead at Heidelberg, Germany, 10th, Sep, 1998) -


# சிங்கள அரசுக்கு படை உதவி செய்யாதே எழுத்தாளர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கைக்குப் படைக் கருவிகளும் படையாட்களும் அனுப்பியுள்ள இந்திய அரசைக் கண்டித்து சென்னை சேப்பாக்கத்தில் தமிழ்ப்படைப்பாளிகள் முன்னணி சார்பில் ஒரு நாள் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் 22.09.2008 அன்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்குத் தமிழ்படைப்பாளிகள் முன்னணி செயலாளர் பா.செயப்பிரகாசம் தலைமையேற்றார். தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் திரு.பழநெடுமாறன், கவிஞர்கள் கவிக்கோ அப்துல் ரகுமான், மு.மேத்தா, நடிகர் சத்தியராஜ், இயக்குநர் சீமான், ஓவியர் புகழேந்தி, தமிழறிஞர் கி.த. பச்சையப்பன் உள்ளிட்ட பல எழுத்தாளர்களும் கவிஞர்களும் ஓவியர்களும் உரையாற்றினர்.

பேராசிரியர் யோகீசுவரன், கவிஞர் பொன்.செல்வகணபதி, இயக்குநர் புகழேந்திதங்கராஜ், நா.அரணமுறுவல், முனைவர் தமிழப்பன், நாடக ஆசிரியர் ந.முத்துசாமி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் பேராசிரியர் மே.து.இரா.சுகுமார், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் தோழர் நா.வைகறை, பேராசிரியை சரஸ்வதி இராசேந்திரன், தமிழ் முழக்கம் சாகுல் ஹமீது உலகத் தமிழ் இளைஞர் பேரவை த் தலைவர் இரா.ஜனார்த்தனம், ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இரண்டு கண்டனத் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு கலந்துகொண்ட படைப்பாளிகளின் கையெழுத்து பெறப்பட்டது. இத் தீர்மானங்கள் அரசுக்கு அனுப்பிவைக்கப்படஉள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் தோழர்கள் உதயன், கவிபாஸ்கர், முழுநிலவன், தமிழடியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# அமெரிக்க வங்கிகள் மூடல்
# சந்தை நாயகத்தின் தோல்வி

**கி.வெங்கட்ராமன்**

அமெரிக்கப் பொருளியல் உலகம் நிலநடுக்கத்தில் குலைந்து வருகிறது. அசைக்க முடியாத நிதித்துறைப் பேரரசாக நேற்றுவரை தோற்றம் காட்டி வந்த - பல இலட்சம் கோடி டாலர் புழங்கிய வங்கிகள் அடிப்படை தகர்ந்து வீழ்ந்து நொறுங்கிவிட்டன. இதன் அதிர்வுகள் கனடா, பிரிட்டன், பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஜப்பான் என்று முதலாளிய உலகம் எங்கும் உணரப்படுகின்றன. இந்தியாவிலும் இதன் தாக்கம் பொருளியல் குலைவை ஏற்படுத்தி உள்ளது.

*"நமது பொருளாதாரம் ஆபத்தான கட்டத்தில் உள்ளது. பல்லாயிரம் நிறுவனங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இலட்சக் கணக்கானவர் வேலை இழக்கும் அபாயம் சூழ்ந்துள்ளது. கல்விக் கடன் கிடைக்காமல் நம் நாட்டுப் பிள்ளைகள், மேற்படிப்பைத் தொடர முடியாதநிலை ஏற்படும்"* என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ் புலம்புகிறார். (தொலைக்காட்சி வழியாக அமெரிக்க மக்களுக்கு புஷ் ஆற்றிய உரை - 25.09.08)

உலகெங்கும் கிளை பரப்பி நின்று நிதி உலகை ஆட்டிப் படைத்து வந்த அமெரிக்க நாட்டின் முதலீட்டு வங்கி லேமன் பிரதர்ஸ் திடீரென்று 2008, செப்டம்பர் 14 அன்று ஓட்டாண்டி அறிவிக்கை (திவால் நோட்டீஸ்) அளித்தது. அதே நாளில் மெரில் லிஞ்ச் என்ற இன்னொரு பகாசுர வங்கி அடியற்ற மரம்போல் விழுந்தது. அந்த வங்கியை அடிமாட்டு விலைக்கு பாங்க் ஆப் அமெரிக்கா வாங்கி விட்டது.

அதற்கு முதல்வாரம் தான் சரிந்து கொண்டிருந்த ஃபான்னி மே, ஃப்ரெட்டி மேக் ஆகிய பெரும் வங்கிகளை அமெரிக்க அரசு விலைக்கு வாங்கி அரசுடைமை ஆக்கியது இவற்றையெல்லாம் விட பன்மடங்கு பலம் வாய்ந்த மார்கன் ஸ்டான்லி, கோல்ட்மேன் சாக்ஸ் ஆகிய பெருவங்கிகள் இறுதி மூச்சு விட்டு இழுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்திய அரசுக்கு இணையான பொருளியல் வலுவுள்ள வாகோவியா வங்கி, (Wachovia) வாசிங்டன் பரஸ்பர நிதியம் (WaMu) ஆகியவை விழுந்து விடும் நிலையை எட்டியுள்ளன.

வெற்றிகரமான தனியார் காப்பீட்டு நிறுவனமாக உலக நாடுகளிலெல்லாம் உதாரணம் காட்டி புகழப்பட்ட முதல்வரிசை நிறுவனமான அமெரிக்கன் இண்டர் நேசனல் குரூப் ( AIG) நொறுங்கிக் கொண்டிருக்கும் செய்தி கேட்டு உலகமே அதிர்ந்தது.




ஏ.ஐ.ஜியை திவாலாக விட்டு விட்டால் அமெரிக்கப் பொருளியலுக்குப் பேரழிவு ஏற்படுவது உறுதி என்று அறிந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ் அவசர அவசரமாக 8500 கோடி டாலர் அதாவது 3 இலட்சத்து 82 ஆயிரத்து , 500 கோடி ரூபாய் அரசு நிதியைக் கொடுத்து அந்நிறுவனத்தை அரசுடைமையாக்கினார்.

கொள்ளை இலாபத்தில் கொழிக்கும் வரை தனியாரிடம் இருந்த , இந்நிறுவனங்கள் இழப்பு ஏற்பட்டு நொடிந்து வீழும்போது மக்களின் வரிப்பணத்தில் அரசுடைமையாக்கப்பட்டன.

கடந்த ஓராண்டில் மட்டும் இதுபோல்90 ஆயிரம் கோடி டாலர் அரசு நிதியை இறக்கிவிட்டு நோயில் நொடித்த நிதி நிறுவனங்களை புஷ் அரசு காப்பாற்றி வைத்திருக்கிறது.

"இவையெல்லாம் நோயின் அறிகுறிகள் தாம் நோயின் உண்மையான தாக்கம் இனி மேல்தான் தெரியப்போகிறது" என்று பன்னாட்டு நிதியத்தின் (IMF) தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்சரிவுகளை எதிர்கொள்ள மேலும் 70000 கோடி டாலர் அதாவது 31 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அரசு நிதியை விடுவிக்க வேண்டும் என்று ஜார்ஜ் புஷ் ஆணையிட்டுள்ளார். அமெரிக்க நாட்டுக் குடிமக்களில் ஒவ்வொருவர் தலையிலும் 2500 கோடி டாலர் அதாவது 1

இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய் புதிய சுமை சுமத்தப்படுகிறது என்று பொருள் .

மிகப் பெரிய அமெரிக்க நிதி நிறுவனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சரிந்து வருவதற்கு உடனடிக் காரணம் என்ன?

இப்போதைய சங்கிலித் தொடரின் உடனடித் தொடக்கம் 2001 லேயே நிகழத் துவங்கியது. மிகப் பெரிய எதிர்பார்ப்போடு தொடங்கப்பட்ட டாட் காம் நிறுவனங்கள் திடீரென திவாலாயின. அதே ஆண்டில் செப்டம்பர் 11 அன்று நியூயார்க் இரட்டைக் கோபுரத் தகர்வு அமெரிக்கப் பொருளியலிலும் பெரும் சரிவை ஏற்படுத்தியது. அமெரிக்கா பாதுகாப்பான நாடா என்ற கேள்வி முதன் முறையாக அனைவர் மனதிலும் எழுந்ததே இதற்குக் காரணம்.

பொருளாதாரம் சீர்குலைந்து போவதைத் தடுக்க வங்கிக் கடன் வட்டி விகிதத்தை 3.5% என்பதிலிருந்து 1% ஆக அமெரிக்க அரசு குறைத்தது.

கடன் நிதி ஆறாகப் பாய்ந்ததால் வங்கித் தொழில் கொழித்தது.

அதே நேரம் வங்கி சேமிப்பு என்பது ஈர்ப்பான வழியாக இல்லாமல் வீடுகளிலும், மனைகளிலும் முதலீடு செய்வது தீவிரமடைந்தது, அந்நாட்டு வங்கி விதிகளின்படி, கொடுக்கும் கடனுக்கு ஈடாக அந்தந்த வீடுகளே பெறப்பட்டன.

தாராளமயத்தில் வங்கிகள் போட்டியில் வெல்வதற்காக ஏராளமான வீட்டுமனைக் கடன்களைஅள்ளித் தந்தன. பணம் பெறுபவர் கடனைக் கட்டுவதற்கு ஏற்ற வருமானம் உள்ளவரா என்று கூட பார்க்காமல், ஈடாக வீடுதான்இருக்கிறதே என்றகணக்கில் வாரி வழங்கின.

தொடக்கத்தில் இந்தப் போக்கின் காரணமாக வீட்டுமனை விலைகள் தாறுமாறாக ஏறின. ஈடாகப் பெறப்படும் வீடுகளின் மதிப்பு உயர்கிறதே என்ற மிகை நம்பிக்கை வங்கிகளுக்கு ஏற்பட்டன.

ஆயினும் ஒரு கட்டத்தில் கண்மண் தெரியாத விலை கொடுத்து மனை வாங்க மக்கள் விரும்பவில்லை. இன்னொரு புறம் தங்கம், எரி எண்ணெய் ஆகியவை உடனுக்குடன் விலை ஏறி கூடுதல் வருமானம் கிடைத்ததால் முதலீட்டாளர்களை அத்துறைகள் ஈர்த்தன.

இதனால் மனை, வீடு ஆகியவற்றின் விலைகள் சரியத் தொடங்கின. இதுபோல் 40% வரை விலை சரியத் தொடங்கியபோது மனைத் தொழிலில் இருந்த நிறுவனங்கள் வீட்டு சாவியை வங்கிகளிடம் கொடுத்துவிட்டு நடையைக் கட்டின.

வீடுகளை ஏலத்தில் விற்றாலும் வாங்க ஆளில்லை. அப்படியே விற்றாலும் கிடைத்த தொகை கடனாளியின் அசலுக்கே தேறவில்லை.

சமாளிக்க முடியாத நிலையில் இந்நிறுவனங்கள் நடுக்கம் காணத் தொடங்கின. இவ்வீட்டு மனைகள் மீதும், மனைக்கடன் வழங்கிய வங்கிகளின் கணக்குகள் மீதும் காப்பீடு வழங்கிய ஏ.ஐ.ஜி. காப்பீட்டு நிறுவனத்தையும் இக்கொடுநோய் தொற்றிக் கொண்டது. 2005-ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் இந்நிறுவனங்களின் நட்டம் கூடிக் கொண்டே போனது. இறுதியில் இப்போது மூழ்கி விட்டன.

உலகமயப் பொருளியலில் நிதிமூலதனம் உலகு தழுவியதாக எளிதில் பாய்வதால், ஓரிடத்தில் ஏற்படும் நோய் மற்ற நாடுகளையும் வேகமாகத் தொற்றிவருகிறது.

அமெரிக்காவின் லேமன் பிரதர்ஸ் ஓட்டாண்டி அறிவிக்கைக் கொடுத்த அதே நாளில் பிரிட்டனின் முதல் பெரிய வங்கியான ஹாலிபாக்ஸ் பாங்க் ஆப் ஸ்காட்லாந்து (HBOS) நொறுங்கி விழும் நிலையை எட்டியது. அவசர அவசரமாக பிரித்தானிய அரசு தலையிட்டு ஹாலிபாக்ஸ் வங்கியை லாயிட்ஸ் டி.எஸ்.பி. (Loyds TSB) வங்கி வாங்குமாறு செய்தது.

நொடித்து வரும் வங்கிகளும், காப்பீட்டு நிறுவனங்களும் தற்காப்பு நடவடிக்கையாக இந்தியா உள்ளிட்டு உலகம் முழுவதும் தாம் செலுத்தியிருந்த முதலீடுகளை வேகவேகமாகத் திரும்பப் பெற்றன.

எடுத்துக்காட்டாக, மார்கன் ஸ்டான்லி வங்கியானது என்.டி.டி.வி., நாகர்ஜுனா உர ஆலை, வோல்டாஸ், பீனிக்ஸ்மில், என்.ஐ.டி., சுஸ்லான் மின்சாரம் போன்ற நிறுவனங்களில் தனது பங்குகளை அவசர அவசரமாக வந்த விலைக்கு விற்றது. அதேபோல் கோல்ட்மேன் சாக்ஸ் வங்கி மெட்ராஸ் சிமெண்ட்ஸ், எஸ்.ஆர்.எப். தாம்பூர் சுகர்ஸ் போன்றவற்றில் தனது பங்குகளை விற்றுத் தீர்த்தது. மெரில் லிஞ்சும் இதேபோல் இந்திய நிறுவனங்களில் தனது பங்குகளை விற்றது.

இந்தப் போக்கு 2008 சனவரியிலிருந்தே தீவிரம் பெற்றது. இந்தியப் பங்குச் சந்தைக் குறியீட்டு எண்.21 ஆயிரம் புள்ளியிலிருந்து 14 ஆயிரம் புள்ளிக்கும் கீழே சரிந்ததற்கு இதுவும் முக்கிய காரணமாக அமைந்தது.

இந்த வங்கிகளே மூழ்கிக் கொண்டிருந்ததால் இவற்றில் கடன் பெற முடியாத நிலை இந்திய பெரு நிறுவனங்களுக்கு ஏற்பட்டது. இந்தப் பெருமுதலாளி நிறுவனங்களைக் காப்பாற்ற இந்திய சேம வங்கி (ரிசர்வ் வங்கி) 84000 கோடி ரூபாயைப் புழக்கத்தில் விடத் தீர்மானித்திருக்கிறது.

இது பணவீக்கத்தை அதிகரித்து விலை உயர்வை தீவிரப்படுத்தும் அபாயம் உள்ளது.

இன்னொருபுறம், காப்பீட்டுத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களோடு கூட்டு சேர்ந்துள்ள இந்தியப் பெருமுதலாளிகளின் நிறுவனங்களும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளன.

ஏ.ஐ.ஜி.யுடன் இணைந்துள்ள டாடா காப்பீட்டு நிறுவனம் நிலை தடுமாறிக் கொண்டிருக்கிறது. பஜாஜ் இணைந்துள்ள அலையன்ஸ் (Allianz)லேமன் பிரதர்ஸ்ஸில் போட்ட 30 கோடி பவுண்ட் அதாவது 3200 கோடி ரூபாய் போய்விட்டது. அதேபோல் புரூடென்சியல், சன்லைஃப், அவிவா போன்ற வெளிநாட்டுக் காப்பீட்டு நிறுவனங்களும் இந்தத் தொற்றுநோயில் பாதிக்கப்பட்டுள்ளதால் அவற்றோடு கூட்டு சேர்ந்துள்ள இந்திய நிறுவனங்களும் சிக்கலை எதிர்நோக்கி உள்ளன.

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உலகின் பல நாடுகளிலும் லேமன் பிரதர்ஸ், மெரில் லிஞ்ச் , எச்.பி.ஓ.எஸ்.

வங்கிகளிலும், ஏ.ஐ.ஜி.யிலும் பணியாற்றிய பல்லாயிரம் பணியாளர்கள் வேலை இழந்துள்ளனர். அமெரிக்காவில் லேமன் பிரதர்ஸ் வங்கியில் பணிபுரிந்த 60 ஆயிரம் பேரும், இதே வங்கியில் இலண்டன் கிளையில் இருந்த 4000 பேரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மெரில் லிஞ்சில் பணிபுரிந்த 26000 பேர் வேலை இழந்துள்ளனர். எச்.பி.ஓ.எஸ். வங்கியில் பணிபுரிந்து வந்த பல்லாயிரம் பேருக்கு வேலை நீக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

இவர்களெல்லாம் பல இலட்சம் டாலர் ஊதியம் பெற்றுவந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜார்ஜ் புஷ் சொன்னதைப் போல, இந்த நிதி நிறுவனங்களைச் சார்ந்து நின்ற பல்லாயிரம் தொழில் நிறுவனங்கள் மூடப்பட உள்ளன.

இந்தியாவில் இயங்கும் கணிப்பொறி நிறுவனங்களின் பணிகளில் 40% பணிகள் வெளிநாட்டு வங்கிகள், நிதிச் சேவைகள், காப்பீட்டுத்தொழில் (BFSI) சார்ந்தவை ஆகும். எனவே இன்ஃபோசிஸ், டாடா கன்சல்டன்சி , விப்ரோ , சத்யம் போன்றவற்றில் அக்டோபர் 2008 தொடங்கி மார்ச் 2009 வரையிலான வரும் ஆறுமாதத்தில் 25000 பேருக்கு வேலை இழப்பு ஏற்பட உள்ளது என இந்நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அமெரிக்காவில் ஏற்பட்ட வீழ்ச்சி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிகழ்ந்தால் மிகப் பெரிய சரிவு இங்கு ஏற்படும். ஏற்கெனவே இந்திய மேலாண்மைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் வளாக நேர்காணலில் தேர்வு செய்யப்பட்டு, 30 இலட்ச ரூபாய் ஆண்டு ஊதியத்தில் வேலை, நியமன உத்தரவு அளிக்கப்பட்ட பல நூறுபேர் திகைத்துப் போய் நிற்கின்றனர். மெரில் லிஞ்ச், ஏ.ஐ.ஜி. போன்ற நிறுவனங்கள் தாம் இவ்வாறு அவர்களைத் தேர்வு செய்தவை.

இந்த நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிக்கு உடனடிக் காரணம் வீட்டுமனைக் கடன் பிரச்சினையாக இருப்பது உண்மையே.

ஆனால் ரீகனாமிக்ஸ் , தாட்சரிசம் என்று முதலாளிய உலகத்தால் புகழப்பட்ட தாராளமயம் தான் அடிப்படைக் காரணம் ஆகும்.

இந்த நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும், அலுவலர்களும் உலகிலேயே அதிகப் படிப்பறிவுள்ள , திறமையாளர்கள் என்று அறியப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இவர்கள் தாம் தமது பணிக்காலத்திற்குப் பிறகு உலக வங்கியிலும் ஐ.எம்.எப்.பிலும் உயர்பதவிக்குப் போகிறவர்கள். இவர்கள் தாம் பல நாடுகளில் அரசுக்கு நிதி ஆலோசகர்களாக உலா வருபவர்கள்.

மன்மோகன்சிங், அலுவாலியா, போன்றவர்கள் இந்த வகையினர் தாம்.

இவ்வளவு திறமைசாலிகளாலும் இந்நிறுவனங் களைக் காப்பாற்ற முடியாமல் போனதற்கு அடிப்படையாய் அமைவது முதலாளிய தாராளமயம்தான்.

இலாபம், மேலும் இலாபம், கொள்ளை இலாபம் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படும் முதலாளியம் இதன் இயக்க விதி காரணமாகவே இவ்வாறான முட்டுச் சந்தில்தான் நிற்கும்.

திட்டமிட்ட பொருளாதாரம், அரசுத்துறை மேலாண்மை என்பது திறமையைக் கொன்றுவிடும், ஊழலை ஏற்படுத்தும் என்று வித்தாரம் பேசிய முதலாளிய உலகம் இன்று தலை குனிந்து நிற்க வேண்டிய நிலையில் உள்ளது.

இப்போது குடைசாய்ந்துள்ள லேமன்பிரதர்ஸ், மெரில் லிஞ்ச், ஏ.ஐ.ஜி. நிறுவனங்களின் மேலாளர்கள் ஊழலில் ஈடுபட்டு இந்தச் சரிவை ஏற்படுத்தினார்களா என்பது அமெரிக்காவின் கூட்டரசுப்புலனாய்வுக் கழக (FBI) விசாரணையில் உள்ளது. இது தொடர்பாக 26 வழக்குகள் பதிவில் உள்ளன.

இதற்கு முன்னர் நியூயார்க் பங்குச் சந்தை (NYSE) யில் அதன் தலைவர் 900 கோடி ரூபாய்மோசடி செய்தது, என்ரான் நிறுவனம் மோசடி வழிகளில் தமது நிறுவன நிதிகளை வேறுஇடத்திற்குத் திருப்பிவிட்டு திவால் அறிவிப்பு கொடுத்தது, தேவூ கார் தொழில் நிறுவனத் தலைவர் நிதி முறைகேடு செய்து மூடுவிழா நாடகம் நடத்தியது. ரன்பாக்சி மருந்து நிறுவனத்தின் உயர் மேலாளர்கள், நிதி மோசடி செய்து நாடகமாடியது போன்றவை தாராளமய முதலாளியத்தின் மோசடி வேலைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும் (விரிவிற்கு. *தமிழர்கண்ணோட்டம்*, சனவரி 2004)

இப்போது மூழ்கியுள்ள நிதி நிறுவனங்களோடு கூட்டு வணிகம் செய்த இந்தியாவின் ஐ.சி.ஐ.சி. ஐ. வங்கி 400 கோடி ரூபாய் இழப்பையும்,ஸ்டேட் வங்கி 200 கோடி ரூபாய் இழப்பையும் பாங்க் ஆப் இந்தியா 150 கோடி ரூபாய் இழப்பையும் சந்தித்துள்ளன.

“இந்திய நாட்டு வங்கிகள் உலக நிதி நிறுவனங்களோடு பெருமளவு கூட்டுவைக்காமல் தனித்து இயங்குவதால் இந்த அதிர்விலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளன” என்று கூறும் நிதியமைச்சர் ப.சிதம்பரம் “இருந்தபோதிலும் தாராளமயம் தொடரும்” என்று பிடிவாதம் பிடிக்கிறார்.

ஒரு வேளை மன்மோகன் அரசு திட்டமிட்ட வகையில் வங்கிகளிலும் காப்பீட்டிலும் பன்னாட்டு முதலீடுகள் 51%க்கு மேலாக அனுமதிக்கப்பட்டிருந்தால், அமெரிக்கா சந்தித்த சரிவை இந்தியா சந்தித்திருக்க வேண்டும்.

அமெரிக்கா ஊரைக் கொள்ளையிட்டு உப்பியிருக்கிற பெரிய வல்லரசுப் பொருளாதாரம். ஆனால் அந்த சரிவு இந்தியாவில் நிகழ்ந்தால் பேரழிவாக முடிந்திருக்கும். ஆயினும் உலகமயத்தில் இணைந்துள்ளதால் பாதாளத்தை நோக்கி இந்தியப் பொருளியல் இழுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

அரசு ஓய்வூதியர், தொழிலாளர் ஓய்வூதிய நிதியைத் தனியார் மயமாக்கிப் பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபடுத்துவதில் ப.சிதம்பரம் முனைப்பாக உள்ளார்.

பங்குச் சந்தை முதலாளிகளின் காலடியில் உழைப்பாளிகளின் எதிர் காலத்தை வைக்கிற கொடுமை இது.

கண்முன்னால் இவ்வளவு அழிவு நேர்ந்தபின்னும் தாராளமயக் கொள்கையை இனியும்தொடர்வது அப்பட்டமான மக்கள் விரோதப் போக்காகும்.

அரசுடைமை ஆக்கித்தான் இந்நிதிநிறுவனங்களை நிலைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதானது சந்தை நாயகத்தின் தோல்வியைத் தோலுரித்துக் காட்டுகிறது.

விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில பகாசுர முதலாளிகளுக்கு அரசுப் பணத்தை பல்லாயிரம் கோடி வாரிக் கொடுத்து இழப்பை ஈடுகட்டும் ஆட்சியாளர்கள் உழவர்களுக்கும், சிறுதொழில் முனைவோருக்கும் கடனாக பணம் தருவதற்குக் கூட நிதியில்லை என்று கை விரிப்பார்கள்.

சில மாதங்களுக்கு முன்னால் பங்குச்சந்தையில் திடீர்ச் சரிவு ஏற்பட்டபோது இநதிய ரிசர்வ் வங்கி ஒரே நாளில் 7500 கோடி ரூபாய் ஈடுபடுத்தி முட்டுக்கொடுத்தது. இப்போது 84000 கோடி ரூபாயை நிதிச் சந்தையில் இறக்கிவிட முனைந்துள்ளது.

“அமெரிக்க அரசு இப்போது நிதி நிறுவனங்களுக்கு இழப்பீடாக அளிக்கிற70000 கோடி டாலரை ஏழ்மை ஒழிப்பில் ஈடுபடுத்தினால் உலகில் உள்ள வறுமைப்பட்ட 200 கோடி மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை மீட்டுக் கொள்வார்கள். பட்டினி என்பது உலகப் பந்திலிருந்து நிரந்தரமாகத் துடைக்கப் படும் என்று” பொருளியலாளர் தேவீந்தர் சர்மா கூறுவது கவனிக்கத் தக்கது. (hunger 55 @ gmail.com)

அமெரிக்க நிதி நிறுவனங்களின் வீழ்ச்சி தாராளமயத்தின் தோல்வியை, முதலாளியத்தின் தோல்வியைத் தெளிவாக்குகிறது.

படித்த இளைஞர்கள் இதனை உணர்ந்து, மாற்றுப் பாதையைச் சிந்திக்க வேண்டும். நிகரமைப் பாதைக்குத் திரும்பவேண்டும். ■

# தமிழ்நாட்டுரிமைக் காப்புக்கு விதி 355 வராதா?

ஒரிசாவிலும் கர்நாடகத்திலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பெற்றெடுத்த பல்வேறு இந்துமத வெறி அமைப்புகள் கிறித்துவ தேவாலயங்களைத் தாக்கி அழிவு வேலை செய்கின்றன. கிறித்தவ மக்களையும் தாக்குகின்றன. இதுவரை 26 பேர் கொல்லப் பட்டனர். இவ்வாறு அப்பாவிக் கிறித்துவ மக்களைத் தாக்குவதில் பஜ்ரங் தளம் என்ற இந்துத்துவா வெறி அமைப்பு முன்னணியில் உள்ளது.

இந்த இந்துத்துவா வெறிச்செயலைத் தடுத்து நிறுத்த வில்லையானால் அரசமைப்புச் சட்ட முறிவு ஏற்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தில்லி அரசு, அரசமைப்புச்சட்ட விதி 355 இன் கீழ் ஒரிசா அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் எச்சரிக்கை அறிக்கை அனுப்பியுள்ளது. விதி 355 இன் கீழ் அறிவிப்பு அனுப்பிய பின்னரும், அமைதியை நிலை நாட்டவில்லை எனில் அந்த மாநில ஆட்சிகளை விதி 356 இன் கீழ் கலைத்து விடலாம் என்பது இந்த எச்சரிக்கையின் சாரமாகும்.

ஒரிசாவில் பா.ச.க. கூட்டணியில் உள்ள பிஜு ஜனதா தளத் தலைவர் நவீன் பட்நாயக் முதல்வராக இருக்கிறார். கர்நாடகத்தில் பா.ச.க.வின் ஆட்சி நடக்கிறது. எடி யூரப்பா முதல்வராக இருக்கிறார்.

கிறித்தவ மக்கள் பாதுகாப்பில் உண்மையில் கவனம் செலுத்தி 355 இன் எச்சரிக்கை அனுப்பப்பட்டதா அல்லது எதிர்க்கட்சி ஆட்சிகள் நடப்பதால் இவ்வெச்சரிக்கை அனுப்பப்பட்டதா என்பது விவாதத்திற்குரியது.

கர்நாடகம் காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஏற்க மறுத்து தமிழகத்திற்குரிய தண்ணீரை விடாமல் தடுத்தது. நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு செல்லத்தக்கது என்று உச்சநீதிமன்றம் 1991 நவம்பரில் தீர்ப்பளித்தது.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்த மறுப்பது அரசமைப்புச்சட்ட முறிவைக் குறிக்கும். விதி 355 இன் கீழ் கர்நாடகத்திற்கு எச்சரிக்கை அனுப்பி அத்தீர்ப்பைச் செயல்படுத்த ஏன் இந்திய ஆட்சியாளர்கள் முன்வர வில்லை?

அதேபோல், முல்லைப் பெரியாறு அணையில் 145 அடி தண்ணீர் தேக்கலாம் என்று 2006 பிப்ரவரி 27- இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை நிறைவேற்ற விடாமல் கேரள அரசு தடுத்து வருகிறது.

இதுவும் அரசமைப்புச்சட்ட முறிவுதான். இதில் ஏன் விதி 355 இன் எச்சரிக்கை அறிவிப்பை கேரள அரசுக்கு இந்திய அரசு அனுப்ப வில்லை?

காவிரி மற்றும் முல்லைப் பெரியாறு தொடர்பான தீர்ப்புகளை நிறைவேற்ற மறுக்கும் கர்நாடக , கேரள அரசுகளுக்கு விதி 355 இன் கீழ் எச்சரிக்கை அறிவிப்பு அனுப்புமாறு த.தே.பொ.க. தொடர்ந்து கோரிவருகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி பாதுகாக்க வேண்டிய தமிழ் மக்களின் உரிமைகளை யார் பறித்தாலும் அப்போது அரசமைப்புச் சட்ட முறிவு ஏற்படாது என்பது இந்திய ஆட்சியாளர்களின் கணக்கு என்பது தெளிவாகத் தெரிகிறது.

**— தெள்ளியன்**

# தமிழா உனக்கேன் சாதி

தமிழா உனக்கேன் சாதி
தமிழன் என்பதே நீதி
அமிழ்தெனும் தமிழில்
அனைவரும் ஒன்றே
அறிவாய் அந்தச் சேதி!

ஊரும் சேரியும் என்று
உன்னால் பிரிந்தவை இரண்டு
யாரும் உறவென
இருப்பதைத் தகர்ப்பாய்
இதுவா தமிழினத் தொண்டு...?

இமயம் வென்ற வீரம்
இருந்தது முன்பொரு காலம்
சமயம் பார்த்தே
சாதிகள் வளர்ப்பாய்
சரிதான் உன்செயல் சோரம்!

முன்னவர் வாழ்ந்த நாடு
முத்தமிழ் வளர்த்த ஏடு
பின்னரும் பேச்சினில்
பிரிப்பாய் மனிதரை
பெரிதும் உனக்குக் கேடு!

பாட்டன் பூட்டன் என்பாய்
பஞ்சமன் வாழ்வைத் தின்பாய்
வாட்டும் வறுமையில்
வதைபடும் அவனை
வஞ்சகம் செய்தே கொல்வாய்!

உணர்வாய் தமிழா உடனே
உன்னுடன் இருப்பவன் அவனே
உன்மொழி உன் இனம்
உடன்வரும் தோழன்
உயர்த்துதல் உன்றன் கடனே!

இதுதான் தமிழன் மேன்மை
இதுவே தமிழனின் நேர்மை
இனியும் வேற்றுமை
ஏனடா தமிழா ?
இதை நீ ஏற்றால் ஓர்மை!

— பாரதிவசந்தன்

# அறிவொளியால்

— செம்பரிதி

சரிந்து பரந்து
பசுமையாய் விரிந்திருக்கும்
தேயிலைக்குன்றின் அழகை
லயித்து பேசுகிறாய்.

இவை
விண்ணை முட்டும் மரங்களின்
கல்லறைச் செடிகள் என்றேன்.

இறைவனின் சந்நிதியில்
அலைக்கழியும் மனமும்
அமைதியாகி விடுகிறது என்றாய்.

இனத்தின் மானத்தை
நூலாய் தரித்திருக்கும்
பார்ப்பனரின் கருவறை - அது
நச்சரவத்தின் நிலவறை என்றேன்.

டை கட்டி ஷூ மாட்டி
ஆங்கிலம் சுமக்கும் மழலையை
அழகென ஆராதித்தாய்.
அவன் உடை சூழலுக்கு பகை
அவன் கல்வி வளர்ச்சிக்கு கொள்ளி
என்றேன்.

ஆறு வழிச்சாலை
அற்புதப் பயணம் என்றாய்.
வீடுகள், வயல்கள் காடுகளை
அழித்து
ஆலை அரசர்களுக்காய்
அரசு விரிக்கும் இராஜபாட்டை
என்றேன்.

பயணத்தின் இடையில்
வறண்ட தொண்டையை
கோக்கில் நனைத்தாய்
குடித்தது பானமல்ல
விளை நிலத்தின் குருதி என்றேன்.

எதுவுமே சரியாய் படவில்லையா
உனக்கு என்றாய்.

மல்லிகை மணந்த கூந்தலில்
ஞெகிழிப் பூக்கள்
வண்ணம் தரலாம்... வாசம் தருமா?
சிந்தை மறைக்கும் கருத்திருட்டை
அறிவொளியால்
ஆய்வு செய் அன்பே !

# இசுரேல் - இந்திய இராணுவக் கூட்டு

— செவ்வேள்

எப்போதுமே ஒரு அரசின் உள்நாட்டுக் கொள்கைதான் அதன் அயலுறவுக் கொள்கைக்கு அடிப்படையாக அமைகிறது. சாரத்தில் உள்நாட்டுக் கொள்கையின் நீட்சிதான் வெளிநாட்டுக் கொள்கை.

இந்தியாவின் முக்கிய ஆளும் சக்திகளாகப் பெரு முதலாளிகளும், பார்ப்பனர்களும் இருந்தபோதிலும், சுதந்திர இந்தியாவின் தொடக்க காலங்களில் தங்கள் சுரண்டல் கொள்கைகளை அப்பட்டமாக செயல்படுத்த முடியாமல் இருந்தனர். ஏனெனில் அவர்களது வலு வரம்புக்குட்பட்டதாக இருந்தது. நிலைமைகளும் ஆதிக்க சக்திகளுக்கு சவால் விடுவதாக இருந்தன.

ரயில்வே, தகவல் தொடர்பு உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்புத் துறைகளை நடத்தும் அளவுக்கு இந்தியப் பெருமுதலாளிகளுக்கு மூலதன வலு இல்லாத நிலை இருந்தது. அவை அரசுத்துறையில் நடத்தப்பட்டன. அரசுத்துறையின் துணையோடு பெருமுதலாளிகளின் தொழில் நிறுவனங்கள் வளர்ந்தன. இந்த உள்நாட்டுக் கொள்கைக்கு ஏற்பவே வெளியுறவுக் கொள்கையும் அமைந்தது.

சோவியத் ஒன்றியத்தையும் , வட அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளையும் ஒன்றைக் காட்டி இன்னொன்றிடம் பேரம் பேசி, சமரசம் காணும் உத்தியை இந்திய அரசு கடைபிடித்தது. காலனி நாடுகளின் விடுதலைக்குப் பரிந்து பேசிய அதே நேரத்தில் இந்தியா பிரிட்டனின் காமன்வெல்த்திலும் நீடித்தது. அமெரிக்க வல்லரசுடனும், அதன் தலைமையிலான உலக வங்கியுடனும் தனது பொருளியல் பிணைப்பை வலுப்படுத்துவதைத் தொடர்ந்தது. இந்த இரட்டை நிலைக்கு வாய்ப்பாக தன்னை ‘அணி சேரா நாடு’ என அறிவித்துக்கொண்டது.

இந்திய ஆளும் சக்திகளின் இந்த வளர்ச்சி நிலைக்கு ஏற்ற அரசியல் முகமாக நேருவும், இந்திராகாந்தியும் இருந்தனர்.

இந்தியப் பெருமுதலாளிகள் 1980கள் வாக்கில் முன்னெப்போதுமில்லாத அளவில் வலுப்பெற்று விட்டனர். இந்தியச் சந்தையில் தலைமை ஏற்றது மட்டுமின்றி, உலகச் சந்தையிலும் வலுப்பெறத் தொடங்கினர். அதற்கேற்ப பல்வேறு அரசுத்துறைகளில் தனியார் மயம் தலை தூக்கியது.

இன்னொருபுறம் இசுலாமிய எதிர்ப்பை மையப்படுத்தி பார்ப்பனிய - இந்துத்துவ சக்திகள் தீவிரமாக வளரத் தொடங்கின.

உலகமயப் பொருளியலின் நுழைவு, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி, தகவல் தொழில் நுட்பப் புரட்சி ஆகியவை சேர்ந்து 1980 களின் இறுதியிலும் 1990 களின் தொடக்கத்திலும் உலகையே புரட்டிப் போட்டன.

உலகச் சந்தை வேட்டையில் பங்குபெறும் அளவுக்கு வளர்ந்துவிட்ட இந்திய முற்றுரிமை முதலாளிகளுக்கு உலகமயப் பொருளியியல் உவப்பானதாக இருந்தது. அதே காலத்தில் வளர்ந்த தகவல் தொழில் நுட்பப் புரட்சியால் உருப்பெற்ற புதிய நடுத்தர வர்க்கத்தில் முதன்மை



சக்தியாகப் பார்ப்பனர்களே இருந்தனர். அமெரிக்கா உள்ளிட்டமேற்கத்திய நாடுகளில் உயர் உத்தியோகங்களில் இவர்களே (இந்தியர்களில்) கணிசமான வாய்ப்பைப் பெற்றனர். இந்தியாவில் தனியார் நிறுவன உயர் பதவிகளிலும் இவர்களே அதிக இடம் பிடித்தனர். பார்ப்பனிய - இந்துத்துவ வெறியைப் பரப்புவதில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை நுட்பமாக இவர்கள் பயன்படுத்தினர்.

ஆளும் சக்திகளின் இந்த வளர்ச்சி நிலைக்கு ஏற்ப இந்திய அரசின் உள்நாட்டுக்கொள்கை மட்டுமின்றி, அயலுறவுக் கொள்கையும் மாற்றம் பெற்றது.

இசுரேல் - பாலஸ்தீன சிக்கலில் இந்திய அரசின் அணுகுமுறையே இதற்கொரு சான்று.

தொடக்கத்திலிருந்தே பாலஸ்தீன விடுதலையை இந்திய அரசு ஆதரித்தது. உலக அரங்குகளில் இசுரேலையும், அதன் ஜியோனிய இனவெறியையும் கண்டித்த முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்கியது. இசுரேலோடு தூதரக உறவுகூட வைத்துக்கொள்ளாமல் ஒதுக்கிவைத்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

ஆனால் 1990 களில் உலகமயப் பொருளியியலில் பங்காளியாக நுழைந்ததிலிருந்து வட அமெரிக்க வல்லரசின் இளைய பங்காளியாகவும் இந்திய அரசு தன்னை இணைத்துக் கொண்டது. திறந்த உலகமயச் சந்தையின்பயனாளிகளான இந்திய ஆளும் சக்திகளின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு ஏற்ற ஆதிக்கக் கொள்கையாகும் இது.

அமெரிக்க வல்லாதிக்க அரசின் முதன்மைப் பங்காளியான இசுரேலுடனும் இந்திய அரசு உறவை ஏற்படுத்திக்கொண்டது. 1992-ல் முதன் முதலாக தூதரக உறவைத் தொடங்கியது. அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பாலஸ்தீன சிக்கலில் தனது நிலையை இந்திய அரசு மாற்றிக்கொள்ளத் தொடங்கியது.

மேற்கு ஆசியாவில் அமைதி ஏற்படுவது பாலஸ்தீன சிக்கலின் தீர்வைப் பொருத்தே உள்ளது என்பது உலகறிந்த ஒன்று. ஆனால் அங்கு அமெரிக்க - இசுரேல் அச்சு நடத்துகிற வல்லடித் தாக்குதல்களைக் கண்டு கொள்ளாத போக்கு இந்திய அயலுறவுக் கொள்கையில் தலைதூக்கியது.

நியூயார்க் இரட்டைக் கோபுரத் தகர்ப்பு 2001, செப்டம்பர் 11-ல் நடந்த பிறகு தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை "உலக இசுலாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என அறிவித்து அமெரிக்க வல்லரசு தீவிரப்படுத்தியது. இப்போரில் இயல்பான கூட்டாளியாக இசுரேல் அமெரிக்காவுடன் இருந்தது.

இந்த அச்சில் விருப்பக் கூட்டாளியாக இந்திய அரசு இணைந்து கொண்டது.

'இசுலாமிய பயங்கரவாத எதிர்ப்பு' என்ற பெயரில் இதற்கு ஞாயம் கற்பிக்கப்பட்டது. பா.ஜ.க. ஆட்சியில் இது தீவிரம் பெற்றது. ஜியோனிய யூத வெறியும், பார்ப்பனிய - இந்துத்துவ வெறியும் ஒத்தத் தன்மை கொண்டவை ஆகும்.

வாஜ்பாய் ஆட்சியின் போது இசுரேல் இந்திய உறவு புதிய தன்மை பெற்றது. அது இராணுவக்கூட்டாக மாறியது. 2002-ஆம் ஆண்டுக்குப்பிறகு இசுரேலிடமிருந்து இந்தியா போர்க் கருவிகள் வாங்கத் தொடங்கியது. துணைப் பிரதமராக இருந்த அத்வானி இசுரேலுடன் படைவகைக் கூட்டு வைப்பதில் தனி அக்கறை செலுத்தினார்.

இசுரேலுடனான இந்த இராணுவ உறவு மன்மோகன் சிங் ஆட்சியில் இன்னும் வலுப்பட்டுள்ளது.

இசுரேலின் பொருளியலானது அடிப்படையில் போர்ப்பொருளியல் ஆகும். அமெரிக்க முகாமுக்கும் சோவியத் முகாமுக்கும் இடையே இழுபறிப்போர் இருந்த வரை, அந்தப் பதட்ட நிலையைப் பயன்படுத்தி உலக நாடுகள் பலவற்றுக்குப் படைக் கருவிகளை ஏற்றுமதி செய்து கொழித்தது இசுரேல் . ஆனால் 1991-ல் சோவியத் ஒன்றியம் வீழ்ந்து, இழுபறிப்போர் நின்றுபோனதால் இந்த மரண வியாபாரத்தைத் தொடர முடியாமல் இசுரேல் விழிபிதுங்கி நின்றது.

இந்த நெருக் கடியிலிருந்து மீள்வதற்கு வாய்ப்பாக இந்தியாவுடனான படைக்கருவி வணிக ஒப்பந்தம் இசுரேலுக்குக் கிடைத்தது. 2002 தொடங்கி 2006 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளில் சுமார் 22000 கோடி ரூபாய் பெறுமதியான சுடுகருவிகள் இசுரேலிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகி உள்ளன.

எம்.கே.II வகை அதிவேக டோரா போர்ப்படகு, ஆளில்லா வான்கலம், ஆற்றல் வாய்ந்த ராடார்கள், ஏவுகணைகள், இரவில் பார்க்க உதவும் நவீனக் கண்ணாடிகள் உள்ளிட்ட வன்கலன்கள் மட்டும் ஏறத்தாழ 20000கோடி ரூபாய்க்கு 2006-ம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன.

இசுரேலிலிருந்து அதிகம் ஆயுதம் வாங்கும் முதன்மை நாடாக இந்தியா உள்ளது. இசுரேலில் உற்பத்தி ஆகும் . படைக்கருவிகள் இசுரேலைவிட இந்தியாவில்தான் அதிகம் பயன்படுகிறதாம்!

இசுரேலின் உளவு செயற்கைக் கோளை விண்ணில் ஏவும் பணிக்கு இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்துடன் (இஸ்ரோ) ஒப்பந்தம் ஆகி உள்ளது. டெக்சார் என்ற முதல் உளவு செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டு விட்டது. இது ஈரானை வேவு பார்க்க அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இதுபோல் வெவ்வேறு நாடுகளை உளவு பார்க்க இன்னும் நான்கு செயற்கைக் கோள்களை இந்தியாவின் இஸ்ரோ மூலம் அனுப்ப ஒப்பந்தமாகி உள்ளது. இத்தனைக்கும் ஈரானுடன் நல்லுறவு பேணுவதாக இன்னும் இந்திய அரசு சொல்லிக்கொண்டு வருகிறது.

இந்தியாவில் 'பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை' என்ற பெயரில் இசுரேலுடன் கூட்டுப்படை நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது. இதற்கென தரையிலிருந்து ஏவப்படும் நவீன ஏவுகணைகள், ஏவுகணை எதிர்ப்பு பீரங்கி வாகனங்கள் முதலியவை இசுரேலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, துணை இராணுவப் படைகளுக்கும் வழங்கப் பட்டுள்ளன.

இசுரேல் - இந்திய உயர்மட்ட இராணுவக் கூட்டுக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய முப்படைத் தளபதிகளும், உயர் அதிகாரிகளும் இசுரேலுக்கு அவ்வப்போது சென்று ஆலோசனைகள் நடத்துவது வழமையாகி விட்டது. 2008, சனவரியில் இந்தியக் கப்பற்படைத் தலைமைத் தளபதி சுரேஷ்மேத்தா இசுரேலில் ஐந்து நாள் பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் 2006 -ம் ஆண்டில் வான்படை தலைமைத் தளபதி எஸ்.பி.தியாகி மற்றும் கப்பற்படை துணைத்தலைமைத் தளபதி வெங்கட்பரதன் ஆகியோர் இசுரேல் சென்று உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டனர்.

இதேபோல் இசுரேல் இராணுவ உயர் அதிகாரிகளும் அடிக்கடி இந்தியாவிற்கு வந்து நெருக்கமான கூட்டுச் செயல்பாட்டிற்குத் திட்டமிடுகின்றனர்.

இசுரேல் பாசறைகளில் அணி அணியாக இந்தியாவின் அதிரடிப் படைகளுக்கு நவீனப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த அதிரடிப்படைகள் காசுமீரிலும், அசாம், மணிப்பூர் போன்ற பகுதிகளிலும் களமிறக்கப்படுகின்றன.

இசுரேலின் தரைப்படைத் துணைத் தலைமைத் தளபதி

மோஷே கப்ளென்ஸ்கி அண்மையில் ஜம்மு காசுமீர் வந்து களநிலைமைகளை நேரில் பார்வையிட்டு, இந்தியப் படையினருக்கு 'வழிகாட்டுதல்' வழங்கிச் சென்றிருக்கிறார்.

"பயங்கரவாத எதிர்ப்பு கூட்டு நடவடிக்கை" 2008 சனவரியில் இசுரேல் படைத்துறை தலைமை அதிகாரி பிங்காஸ் புக்ரிஸ் இந்தியா வந்து இந்தியப்பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன், பாதுகாப்புத்துறை செயலாளர் விஜய் சிங், தரைப்படைத் தலைமைத் தளபதி தீபக்கபூர், கடற்படைத் தலைமைத் தளபதி சுரேஷ்மேத்தா ஆகியோரைச் சந்தித்தார். இசுரேல் இந்திய கூட்டு உளவு அமைப்பு உருவாக்க இதில் முடிவு செய்யப்பட்டது.

இதற்கு முன்னரே இசுரேலின் உளவுப்படையான மொசாத்துடன் இந்திய உளவு அமைப்புகள் கூட்டுச் செயல்பாட்டில் உள்ளன. நட்பு நாட்டு உளவு அமைப்புகளுக் குள்ளேயே ஊடுருவும் பணியை வழமையாகக் கொண்டது "மொசாத்" என்பது உலகறிந்த செய்தி.

மிசோரம் மாநிலம் வைரங்த்தே என்ற இடத்தில் இந்திய அரசு நிறுவியுள்ள பயங்கரவாத எதிர்ப்பு வனப்போர்ப் பயிற்சிப் பள்ளியில் நிரந்தரமாக பயிற்சி நடத்தப்படுகிறது. உளவு பார்ப்பது, தாக்குதல் நடத்துவது உள்ளிட்ட பயிற்சிகள் அங்கு அளிக்கப்படுகின்றன. அமெரிக்க அதிரடிப்படையினர் கூட அங்கு பயிற்சி பெற்றுச்செல்கின்றனர். அண்மையில் கிரிக் ஆடம் என்ற தளபதியின் தலைமையில் அமெரிக்க அதிரடிப்படையினர் அங்கு பயிற்சி பெற்றனர் என்று செய்திகள் கூறுகின்றன.(*தி இந்து* 12.02.2008) இந்தப் பயிற்சிப் பள்ளியில் இசுரேலிலிருந்து பெறப்பட்ட ஆயுதங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

இசுரேலுடன் நெருக்கமான பிணைப்பு ஏற்பட ஏற்பட, பாலஸ்தீன விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை பயங்கரவாதச் செயல்கள் என்று இந்திய அரசு சித்தரிக்கத் தொடங்கி இருக்கிறது. மேற்குக் கரையையும் காஜா பகுதியையும் பாலஸ்தீனர்களின் திறந்தவெளிச் சிறைச் சாலையாக இசுரேல் மாற்றியுள்ளது. மனித நேய உலகமே கண்டிக்கிற இச்செயலை இந்திய அரசு காணவே மறுக்கிறது.

இந்திய அரசின் கூட்டணியால் பொருளியல் வகையிலும், அரசியல் வகையிலும் இசுரேல் ஊக்கம் பெற்றது. மூர்க்கமான ஆக்கிரமிப்பைத் தொடர்கிறது.

சட்டவிரோதமாக பாலஸ்தீன தேசத்தையும் அரபு நாடுகளையும் ஆக்கிரமித்துள்ள இசுரேலுக்கு இந்திய அரசு 'ஆக்கிரமிப்பு மானியம்' வழங்குவதாக உள்ளது என பாலஸ்தீன மனித உரிமை அமைப்புகள் வருத்தம் தெரிவித் துள்ளன.

பாலஸ்தீனம் குறித்த இந்தியாவின் கொள்கை முற்றிலும் மாறிவிட்டது.

உலகமயப் பங்காளிகளாக, இளைய ஏகாதி பத்தியமாக இந்திய ஆளும் சக்திகள் "வளர்ந்துள்ளதன்" விளைவு இது. அதனால்தான் கட்சிகள், கூட்டணிகள், வெளி ஆதரவு, உள் ஆதரவு என்று எது மாறினாலும் தில்லி அரசின் இசுரேல் இராணுவக் கூட்டு தொடர்கிறது.

குறிப்பு

இசுரேல் - இந்திய இராணுவக்கூட்டு குறித்த செய்திகளுக்கு ஆதாரம்:

AIPSO Bulltetin ஏப்ரல் 2008- அனைத்திந்திய அமைதி மற்றும் தோழமைக் கழகம் (All India Peace and Solidarity organisation) வெளியீடு.

## தமிழக மின்சாரம் தமிழகத்திற்கே
## த.தே.பொ.க. தெருமுனைக்கூட்டம்

**வல்லம்**

தமிழக மின்வெட்டை நீக்க நெய்வேலி கல்பாக்கம் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே திருப்ப வலியுறுத்தி த.தே.பொ.க. சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் வல்லத்தில் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டச்செயற்குழு உறுப்பினர் தோழர் பி.முருகையன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் பழ.இராசேந்திரன் (மாவட்டச் செயலாளர்), குழ.பால்ராசு, (மாவட்டத் துணைச்செயலாளர்) வே.தனசேகர், ஆகியோர் உரையாற்ற தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் நா.வைகறை சிறப்புரையாற்றினார்.

**செங்கிப்பட்டி**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், செங்கிப்பட்டியில் 12.09.2008 அன்று தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ரெ.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் குழ.பால்ராசு, பழ. இராசேந்திரன் , க.காமராசு ஆகியோர் உரையாற்ற தோழர் நா.வைகறை (தலைமைச்செயற்குழு) சிறப்புரையாற்றினார்.

**தஞ்சை நகரம்**

16.09.2008 அன்று தஞ்சை நகரில் பனகல்கட்டிடம் எதிரில் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. த.தே.பொ.க. நகரச்செயலாளர் , தோழர் இராசு. முனியாண்டி தலைமை தாங்கினார். தோழர்கள் நா.வைகறை , பழ.இராசேந்திரன் , குழ.பால்ராசு ஆகியோர் உரையாற்றினார்கள்.

**ஒரத்தநாடு**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் 19.09.2008 அன்று பேருந்து நிலையம் அருகில் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் க. அர்ச்சுணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் பழ.இராசேந்திரன் , வெ.கதிரவன், வீ.கலியபெருமாள் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக தலைமைச்செயற்குழு உறுப்பினர் தோழர் நா.வைகறை சிறப்புரையாற்றினார்.



*செங்கிப்பட்டி*

# ஆயிரத்தில் ஒருவர்

சென்ற இதழ் தொடர்ச்சி

### வாழ்நாள் ரூ.1200

25. திரு ப.க.வெள்ளய்யன் , தஞ்சாவூர் .
26. திரு. அ.அகஸ்டின் ஃப்ரான்சுவா , திருப்பூர்

### மூன்றாண்டுக் கட்டணம் - ரூ.300

50 திரு லீ.கு.பாவலன், கோவை -1
51 திரு. சி.பிரபு, கோவை - 1
52 திரு.க. வெங்கடேசுப் பிரபு,கோவை - 1
53 திரு. இராஜேஷ், கோவை - 1
54 இரா.சுகுமாரன் , புதுச்சேரி
55 திரு.கோ. பாவேந்தன், மேலக்காவிரி
56 திரு. அ.ச. இராசேந்திரன், திருவலஞ்சுழி
57 திரு. சா.தமிழன்பன், ஆதனூர்
58 திரு. ப.தியாகராசன், தஞ்சாவூர்
59 திரு. க.இராசேந்திரன், ஒசூர்
60 திரு. மு.மனோகர், காஞ்சி
61 திரு. ஏ.ஜி.மனோகரன், சிதம்பரம்.
62 திரு. ப.கில்பர்ட் , கோபி
63 திரு. செம்பரிதி, ஒசூர்
64 திரு. செல்வம், ஓசூர்

### ஆண்டுக்கட்டணம் - ரூ.120

411. திரு எஸ். சந்திரமோகன், திருத்துறைப்பூண்டி
412 திரு த.விஜயகுமார்,ஆழ்காட்டிவெளி,பின்னத்தூர் ,
413 திரு மா.மோகன்தாஸ்,கீழபாண்டி ,
414 திரு த.எழிலரசன்,குன்னலூர்
415 திரு எஸ்.நடராஜன் எம்.எஸ்.சி.,மேல வாடிய காடு,
416 திரு ச.பாண்டியன், திருத்துறைப்பூண்டி,
417 திரு இரா.இராசா,கோவிலம் பாக்கம், சென்னை.
418 திரு சோ.வீரமணி ஆசிரியர்,ஆலத்தம்பாடி,
419 திரு சு.த.சந்தான கிருட்டிணன், பருத்திச்சேரி,
420 திரு எஸ்.ராமசாமி கோவில்பாளையம்
421 திரு வி.எஸ்.கணேசன்,அருந்தவன்புலம்
422 திரு கி.சிவக்குமார், பாமணி, நாகை
423 திரு பி.தங்கையன்,ஓடாச்சேரி,திருவாரூர்.
424 திரு சி.லெனின்,மேலக் கொருக்கை,
425 திரு ந.அறிவழகன், ஆசிரியர்,தென்னம்புலம்
426 திரு ப.சிவவடிவேலு,ஆயக்காரன்புலம் .
427 திரு. சித.திருவேங்கடம், பேராவூரணி
428 திரு.சேகர், சானடோரியம், தஞ்சாவூர்.
429 திரு மோ. கனகராஜ், சானூரப்பட்டி,
430 திரு.ப.கணேசன், காதாட்டிப்பட்டி,
431 திரு. கு. பாரி, சிலம்ப வேளாங்காடு
432 திரு. பா.விசயலெட்சுமி , கோவை -1
433 திரு.எஸ்.சம்பத், கோவை - 18
434 திரு.அ.ஜா.முத்துராஜ், கோவை - 3
435 திரு. இர.கதிர், கோவை - 3
436 திரு. பெ. சுரேசு, கோவை - 9
437 திரு. இரவிசங்கர், கோவை - 1
438 திரு. காளிதாஸ், கோவை - 1
439 திரு. பி.பார்த்திபன், புதுச்சேரி - 10
440 திரு. வி.இராசசேகர், சென்னை - 42
441 திரு. எஸ்.ஜி.ராசேந்திரன், வேதாரண்யம்
442 திரு.எம்.தியாகு, திருப்பூர்.
443 திரு. சி.ராஜம், வேதாரண்யம்
444 திரு. வ.செந்தில்குமார், ஆரணி
445 திரு. பெ.சுரேஷ், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி
446 திரு. அ.முருகேசன்,காஞ்சி - 2
447 திரு. சு.திருநீலகண்டன், காஞ்சி - 2
448 திரு. பி.தெட்சிணாமூர்த்தி , கரிக்காடு,
449 திரு. டி.எ.சுப்ரமணியன், காஞ்சி.
450 திரு. கோபால், காஞ்சி.
451 திரு. கா.அழகு, பாபநாசம்
452 திரு. சா.வரதராசன், ஆதனூர்
453 திரு. லோ.மலர்வண்ணன், செய்யாறு
454 திரு.எஸ்.கணேசன் - செல்வி, புதுச்சேரி
455 திரு.விசயக்குமார், சென்னை.
456 திரு.எஸ்.சதீஸ், பள்ளிக்கரணை, சென்னை
457 திரு.பெ.சி. இளந்திரையன், சேலம்
458 திரு.வரத.சண்முக சுந்தர வடிவேலு, சேலம்.
459 திரு. மு.தனபாலன், காஞ்சி.
460 திரு. விருகை. வேந்தன், விருகம்பாக்கம்
461 திரு. ஏ.ஆர்.சபாபதி, மடிப்பாக்கம், சென்னை
462 திரு. மு.விசயகுமார், மணல்மேடு
463 திரு. பு.மு.அகரன், கோடம்பாக்கம்.
464 திரு. து.ரமேஷ் என்ற ஆதவன் சென்னை - 16
465 திரு.பா.பாக்கியராஜ், கோவை -1
466 திரு. க.திருநாவுக்கரசு , செஞ்சி
467 திரு. இரா. சசிக்குமார், விருத்தாசலம்
468 திரு.என்.குணசேகரன், பவானி,
469 திரு. பாலசுப்பிரமணியன்,ஒசூர்
470 திரு. ஞானவேல், ஓசூர்
471 திரு. மு.ராஜரத்தினம், கீழக்கல்லாம்பாறை
472 திரு.கல்லை க.பெருமாள், கீழக்கல்லாம்பாறை,
473 திரு. சீ.கர்ணன், கீழக்கல்லாம்பாறை,
474 திரு.க.முருகேசன், குரும்பூர்,
475 திரு. சு.க.மகாதேவன், திருச்செந்தூர்
476 திரு.உ.ஞானசேகரன், சோனகன் வளை
477 அரசு பொது நூலகம், காயல்பட்டணம்.

478 திரு.ஆ.முத்துப்பாண்டி, நாலுமாவடி.
479 திரு. து.இராமச்சந்திரன், கீழக்கல்லாம்பாறை.
480 திரு.க. உத்திரப்பாண்டி, குரும்பூர்
481 திரு.பெ. பெரியசாமி, குரங்கன் தட்டு.
482 திரு. நா.மதியழகன், தொழுதூர், நாகை
483 திரு. பா.கவியரசன், திருக்குவளை, நாகை
484 திரு. சு.பொன்வைத்தியநாதன், திருக்குவளை
485 திரு.இ.மோகன்தாஸ், நத்தப்பள்ளம் , நாகை.
486 திரு. வீரகுமார், சித்தாய்மூர், நாகை மாவட்டம்.
487 திரு. பிச்சைக்கண்ணு, ஆலத்தம்பாடி , நாகை.
488 திரு. அ.மா.குணசேகரன் அண்ணாபேட்டை.
489 திரு. ப.சிவகுமார், ஆயக்காரன்புலம்.
490 திரு. பா.பாலுசாமி, செங்கிப்பட்டி
491 திரு. ஜான்சன், பாலையப்பட்டி
492 திரு. சின்னத்துரை, நண்டம்பட்டி
493 திரு. தங்கராசு, ஓசூர்
494 திரு. பணி.ஜார்ஜ் ரொசாரியோ, கோவை
495 திரு. ச.மரியசந்தியாகு, கோவை
496 திரு. ஐ.பெலிக்ஸ் இராபர்ட்,சென்னை
497 திரு. ஜெ. ஆரோக்கியசாமி, கரூர்
498 திரு. த.அந்தோனி ராஜ்,கோவை
499 திரு. விக்டர், கோவை
500 திரு. அரசு தாமசு, கோபி
501 திரு. சு.தேவகி, தாளவாடி
502 திரு. ச.இராசேந்திரன், கீழையூர்

## பரிவும் , பகிர்வும்

1. பொறியாளர் சி.பா.அருட்கண்ணனார் ரூ.1000
2. திரு இல.அ.அருட்செல்வன் உடுமலைப்பேட்டை ரூ.100
3. திரு தமிழ் விரும்பி, உடுமலைப்பேட்டை ரூ.100
4. திரு சு.கரிகாலன், மதுரை ரூ.100
5. திரு. வ.வேம்பையன் ரூ.150
6. திரு இரா.முருகன் , கோவை ரூ.150
7. திரு. கு.சந்திரன், சென்னை ரூ.200
8. திரு.தி. முத்துக்குமார் , சென்னை ரூ.1000

# நெய்வேலி மின்சாரம் கோரி சிறுதொழில் முனைவோர் சாலைமறியல்

தொடரும் மின்வெட்டைக் கண்டித்தும், நெய்வேலி மின்சாரம் முழுவதும் தமிழகத்திற்கே வழங்கக்கோரியும் சிதம்பரம் சிறுதொழில் முனைவோர் அமைப்பு சார்பில் 16.09.2008 அன்றுகடைஅடைப்பும், சாலை மறியலும் நடைபெற்றன.

அன்று காலை 10.30 மணியளவில் சிதம்பரம், மேலவீதி, பெரியார் சதுக்கத்தில் கூடிய சிறுதொழில் முனைவோர்கள் கோரிக்கை முழக்கம் எழுப்பிக்கொண்டு சாலையில் அமர்ந்து மறியல் செய்ய முயன்றனர். சாலை மறியல் போராட்டத்திற்கு சிதம்பரம் சிறுதொழில் முனைவோர் அமைப்பின், அமைப்பாளர் திரு.கு.சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார். பால இரவி, மா.கோ.தேவராசன் , எல்.துரைராஜ், கோ.சுப்ராயன், ச.சேகர், பா.பிரபாகரன்,சி.அருண்ராஜ், பொன். சக்திவேல் உள்ளிட்ட 62 பேர் மறியலில் கலந்து கொண்டு கைதாயினர்.

போராட்டக்காரர்களைத் தமிழக உழவர் முன்னணி ஆலோசகர் திரு.கி.வெங்கட்ராமன் சந்தித்து வாழ்த்துரை வழங்கினார். கைதானோர் அனைவரும் அன்று மாலை விடுவிக்கப்பட்டனர்.




## பெரியாரும் பெண்விடுதலையும் மதுரையில் மகளிர் ஆயக்கூட்டம்



தந்தை பெரியார் அவர்களின் 130 ஆவது பிறந்த நாள் விழா, மகளிர் ஆயம் - மதுரை கிளையின் சார்பில் 21.09.2008 அன்று மதுரை,காந்தி அருங்காட்சியகத்தில் உள்ள குமரப்பா குடிலில் சிறப்பாக நடந்தேறியது. ஏறக்குறைய 100 பெண்களும், 30 ஆண்களும் கலந்து கொண்டனர். மகளிர் ஆயதலைவர் தோழர் மேரி தலைமை தாங்கினார். மகளிர் ஆயத்தின் உறுப்பினர் தோழர் காமேசுவரி வரவேற்புரை வழங்க, மகளிர் ஆயத்தின் தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் லெட்சுமி, த.தே.பொ.க.வின் மதுரை கிளைச் செயலர் தோழர் இராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மதுரை தியாகராசர் கலைக்கல்லூரி பேராசிரியை மங்கையர்கரசி "*பெரியாரும் பெண்விடுதலையும்*" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

மகளிர் ஆயத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் அருணா, தமது நிறைவுரையில் தந்தை பெரியார் பற்றியும், இன்றைய அரசியல் சூழலில் பெண்களின் நிலைபற்றியும், பெண்கள் அமைப்புகள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

பெண்களால் அரங் கேற்றப்பட்ட பறையாட்டம், கோலாட்டம் மற்றும் கரகாட்டம் போன்ற தமிழ்க்கலைகள் விழாவிற்குச்சிறப்பு செய்தன. தஞ்சை மாவட்டத் தோழர் மீனா எழுச்சிப் பாடல்கள் பாடினார். நிறைவில் மதுரை மாவட்ட உறுப்பினர் தோழர் ஜீவா நன்றிகூற விழா நிறைவுற்றது.




**கட்டுரைத் தொடர் எழுதுக**

தமிழர்கண்ணோட்டம், செப்டம்பர் இதழ்த் தலையங்கம் படித்தேன். மிக உண்மையான நேர்மையான, மிகத் தேவையான எழுச்சி உரை இது. 'ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகாக்க, தமிழகத் தமிழர்கள் வீதிக்கு வரவேண்டும்'. தங்கள் தலையங்கம், பல்லாயிரக் கணக்கான துண்டுஅறிக்கைகளாக வெளிவந்து, இன்னமும் விழிப் படையாத தமிழ் மக்கள் திரளை, நகரங்களிலும் , கிராமங்களிலும் தட்டி யெழுப்ப வேண்டும், குறிப்பாக, இன்றைய இளைய சமுதாயம் தங்கள் குரலுக்குச் செவி மடுக்க வேண்டும்.

'அண்ணா நினைவுகள் -ஓர் உரையாடல்' எனும் தங்கள் கட்டுரை இந்த இதழின் தனிச் சிறப்பு அம்சம் ; பாராட்டுக்கள் ; உளங்கனிந்த வாழ்த்துக் கள். அண்ணாவின் பாதை யிலிருந்து அத்தனை விரைவில் தாங்கள் எப்படி விடுபட்டு மார்க்சிய - லெனினியத்தின் மேன்மையையும், தமிழ்த் தேசியத்தின் தேவையையும் உணர்ந்தீர்கள்? இதை வாசகர்களுக்கு விளக்கும் முறையில், ஒரு கட்டுரைத் தொடரை எழுதுக . அதை நூலாகவும் வெளியிடுக. இது மிக மிக அவசியம்.

***- தி.க.சி. நெல்லை - 6.***

**யாருக்கு மூலவர் ?**

அண்ணா நினைவுகள் ஓர் உரையாடல் என்ற கட்டுரையைப் படித்தேன். முடிவில் எங்களின் மூலவர் என்ற முறையில் அண்ணா, உங்களுக்கு வணக்கம் செலுத்து கிறோம் என்று உள்ளது. 'எங்களின் மூலவர்' என்ற சொற்றொடரால் யாரையெல்லாம் குறிக்கிறீர்கள் என்பது புரியவில்லை.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தோழர்களுக்கெல்லாம் மூலவர் என்றால் அக்கருத்தை ஏற்பதற்கில்லை. அண்ணாவின் பேச்சும் கொள்கைகளும் தமிழினத்திற்கு ஏற்படுத்தியுள்ள தீங்கு மிகக் கடுமையானது. எளிய மக்கள் தேர்தல் பதவிகளை கைப்பற்ற அவர் வழி ஏற்படுத்தியிருக்கலாம். அவர் வழிவந்த திராவிடக்கட்சிகள் தமிழினத்தின் பண்பாடு மொழி, கல்வி போன்ற துறைகளில் ஏற்படுத்தியுள்ள சீரழிவை குறிக்க சொற்களில்லை. இச்சீரழிவுக் களுக்கான வித்து அண்ணா விடமிருந்தே வருகிறது என்பதற்கு தங்கள் கட்டுரையே சான்று.

தமிழ்த்தேசிய இனத்தின் சீரழிவுக்குக் காரணமாக இருந்தவரை, அவ்வாறான இயக்கங்களின் மூலவரை எங்களின் மூலவர் என்று தாங்கள் எழுதியிருப்பது வேதனை யளிக்கிறது.

***- மா.கோ.தேவராசன், சிதம்பரம்.***

**தமிழையும் தமிழனையும் மீட்டவர் அண்ணா**

கொள்கையும், கூப்பாடும், நடப்பும் ஒருங்கிணைப்புடன் இருந்தால் உலகத்தில் (மக்கள் மத்தியில்) நிலையான இடம் உண்டு. அந்த இடத்தைதக்க வைத்து கொள்ள அரசியல் வாதிகளால் முடியாது.

ஒன்றைப் பெற மற்றொன்றை விட்டு கொடுத்தாக வேண்டும்.ஒன்றை பெற்ற பிறகு மற்றொன்றைத் தேட முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சி பலவற்றை அடைய பாதையாக இருக்கும்.

அண்ணாவின் முயற்சி அத்தகையதே. அதைப்பற்றி அண்ணா வே சொல்லியுள்ளார். என் நாட்டில் உள்ள ஆலைகளை கேட்பேன். அடுத்து வளமான சோலைகளை கேட்பேன். ஒவ்வொன்றாக உரிமை களை கேட்டுக்கொண்டே இருப்பேன். இறுதி யில் இவன் தொல்லை தாங்க முடிய வில்லை என்று கருதி நாட்டையும் என்னிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்றார் அண்ணா.

அண்ணாவின் மொழிக் கொள்கை அண்ணாவின் திராவிடநாடு கொள்கை அண்ணாவின் கடவுள் மறுப்பு கொள்கை : இவற்றில், இன்னபிறவற்றில் வழுவல்கள், நழுவல் கள் இருந்திருக்கலாம். இல்லை யென்று வாதாட விரும்ப வில்லை.

ஆனால் ஆரிய வருகையில் அடிமைப்பட்டு கிடந்த தமிழையும், தமிழனையும் , மீட்டுத் தந்தவர் பேரறிஞர் அண்ணா. தமிழன் வரலாற்றைப் பட்டி தொட்டியெல்லாம் எடுத்து சென்று பாமரனையும் விழிப்படைய செய்தவர் பேரறிஞர் அண்ணா.

நான்கு பேர் மட்டும் அனுபவித்த சனநாயகத்தை நாலுகோடி பேர் அனுபவிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா.

***- புலிகேசி, சென்னை 78.***

**தமிழர் கண்ணோட்டம்**

நான் இப்போதும் எப்போதும் அண்ணா என்ற மூன்று எழுத்தின் வலிமை உணர்ந்திருக்கிறேன். இன்று எத்தனையோ, அரசியல் கட்சிகள் தமிழ்நாட்டில் தமிழனையும், தமிழர்தம் உரிமையையும் காற்றில் பறக்கவிட்டு கட்டுக்கட்டாய் பணம் பார்க்க வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

அண்ணா நீண்ட நாள் உயிரோடு இருந்திருந்தால் ஒரு வேளை நமது கனவுகள் பாதி நனவாகி இருக்குமோ என்ற எண்ணம் என்னுள்ளே மனமெங்கும் அடித்துக் கொள்ளும்.

அண்ணா தேசியத்தை பற்றி சொன்ன கருத்து, துளிகூட பொருந்தாது, அண்ணா நூற்றாண்டில் அண்ணா அமைப்பைவிட்டு வெளியேறியதற்குத் தகுந்த, தலைமை காரணங்களை நீங்கள் இந்த ஏட்டில் குறிப்பிட்டிருப்பது வரவேற்க தக்கது.

உண்மையில் உணர்வு மிக்க தமிழனெல்லாம், உங்கள் தலைமையில் உயர, உளங்கொண்டு ஒடிவர வேண்டும். அந்த நாள் விரைவில் வரும். ஒவ்வொரு மாத புதிய தமிழர் கண்ணோட்டமும், தமிழர் உயர்வுக்காக, அவர்தம் உயிர்காக்க, புறப்பட்டுவரும், தமிழ் வேல் என்றே கருதுகின்றேன்.

புரையோடிப் போன

தமிழர்தாம் வாழ்வைப் புதுக்கி வளம்சேர்க்க கி.வெங்கட்ராமன் புள்ளி விவரங்களுடன் எழுதும் பொருளியல் கட்டுரைகள் என்னைக் கவர்ந்தன.

ம.செந்தமிழன் கட்டுரை தமிழர்தம் இழந்த பெருமைகளை மீட்கும். பார்ப்பனீய செயலாக்க அடிமை தளைகளை அகற்றி தமிழர் தம் தலை குனிவை நிமிர்த்தும்.

ஒவ்வொரு கண்ணோட்டமும் தமிழருக்கு மின்னோட்டம், அவர் தம் வாழ்வு வளம் பெற , புரட்சி செய்ய வேண்டாம் புரிந்து கொண்டாலே போதும், எழுச்சிக்கொண்ட தமிழ்த் தேசியத்தை நாம் காணலாம் .

*- தஞ்சை வாரகி, தஞ்சை - 7.*

**இதையும் வெளியிடுவதா?**

அண்ணாவின் அரசியலைத் திறனாய்வு செய்தவர்கள் அண்ணாவின் சமூகச்சிந்தனையை இலக்கிய நாட்டத்தை எவரும் குறை சொன்னது கிடையாது. ரோமாபுரிராணி நடந்த வரலாறு. கம்பராமாயணத்தின் ஆபாசத்தைத் திறனாய்வு நோக்கில் எழுதினார். இலக்கியத் திறனாய்வுக் கலை என்பது மேல் நாட்டில் தோன்றியது. அதை இங்கே உலவவிட்டது திராவிட இயக்கம்.

அயோத்தி தாசர் பற்றிய திறனாய்வு எவ்வளவு அருமையாக செய்துள்ளார் த.செயராமன்.

அதையும் வெளியிட்டு அண்ணாவைப்பற்றி அநாகரிகமாகச் செய்த திறனாய்வையும் வெளி யிடுவதா?

*- இனியன், திருச்சி - 13.*

**கூடு கவிதை கூடுகட்டிவிட்டது**

தமிழர்களின் இதயங்களில் மகுடமாய் ஜொலிக்கும், செப்டம்பர் மாத புதிய தமிழர்கண்ணோட்டம் இதழ் படித்தேன்.

அண்ணா வளர்த்த தி.மு.க. தற்போது உள்ள தி.மு.க.வென எல்லாவற்றையும் உள்ளதை உள்ளபடி உரத்தகுரலில் சொன்ன ஆசிரியர் பெ.மணியரசனைப் பாராட்டுகிறேன். அடுத்து உழவர்களை வஞ்சிக்கும் கட்டுரை இணை ஆசிரியர் கி.வெங்கட்ராமன் படிப்பவர்க்கு புரியும் விதமாக தெளிவாக சொல்லிவிட்டார் பலே.

காசி ஆனந்தனின் நறுக்குகள் அருமை. அதில் ‘கூடு’ கவிதை என் நெஞ்சில் கூடு கட்டிவிட்டது.

*- தஞ்சை ஹேமலதா,*
*வெண்டயம்பட்டி*

**ரஜினியைக் கிழித்தது அருமை**

செப்டம்பர் மாத புதிய தமிழர் கண்ணோட்டத்தில் அறிஞர் அண்ணாவின் உயரியப் பண்புகள் அவரின் கொள்கை முரண்பாடுகள், வரலாற்றுப் பிழைகள் குறித்து பெ.மணியரசன் அவர்களின் கட்டுரை இதுவரை நான் அறியாத பல சேதிகளை ஆழமாக அறிய வைத்தது.. அவருக்குப் பாராட்டுக்கள்.. மன்னிக்க முடியாத மன்னிப்பு என்ற தலைப்பில் நா.வைகறை எழுதிய கட்டுரையில் தமிழகத்தை வியாபாரத்தலமாக மாற்றி பிழைப்பு நடத்தும் ரஜினி என்ற வியாபாரியின் முகத்திரையை கிழித்த விதம் அருமையிலும், அருமை . தொடரட்டும் உங்கள் பணி.

*- அதியமான் , ஊரப்பாக்கம்.*

**அம்பேத்கர் முன்னோடி அயோத்திதாசர்**

அண்ணாவை நோக்கிய கேள்விகள் அண்ணாவிற்கு மட்டுமல்ல, இலக்கை நோக்கிச் செல்லும் தமிழ்த் தேசியத்தில் இடர்ப்பாடு செய்கிற இரண்டகர்களுக்கும் தான் என்பதைப் புரிந்து கொள்ளட்டும். முனைவர் த.செயராமன் கட்டுரையிலிருந்து அயோத்தி தாசர் அம்பேத்கருக்கு முன்னோடியாக இருந்தமையும் , மொழி வழித் தேசிய அடையாள அரசியலுக்கு முன்னோடியாக இருந்தமையும் அறிய முடிகிறது. நா.வைகறையின் மன்னிக்க முடியாத மன்னிப்பு - ரசினி இயல்பு வாழ்விலும் நடிப்பதை அம்பலப்படுத்துகிறது.

*- த.ரெ.தமிழ்மணி, திருவாரூர்.*

**காசி ஆனந்தனின் கையெறி குண்டுகள்**

அண்ணா நினைவுகள் ஓர் உரையாடல் என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. அண்ணாயிசம் தமிழ்த்தேசிய விடுதலைக்கு சரியான திசைக்காட்டியாக அமையவில்லை என்ற கருத்து திராவிட இயக்கத்திற்குச் சரியான கண்டனமாகும். திராவிட இயக்கத்தின் தள்ளாட்டம், கொள்கைப் பின்வாங்கல், அண்ணாவின் பலம் பலவீனம் ஆகியவற்றைப் புதிய சொல்லாட்சியில் வெளிப்படுத்தி யிருப்பது அருமை.

உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனின் நறுக்குகள் ஒவ்வொன்றும் கையெறி குண்டுகள் போல் இருந்தன. அதில் “பங்கு” “நெருப்பு” என்னும் தலைப்பில் அமைந்த கவிதைகளில் தலித்தியத்தையும் தமிழ் ஈழ விடுதலை யையும் காண முடிந்தது.

*- வெ.மதியரசன்,பாப்பாநாடு.*

**பெரியார் நூல்களை அரசுடை மையாக்குக**

தமது வாழ்நாளில் பெரும்பகுதியை சுய மரியாதைப் பிரச்சாரம் செய்வதற்கும், மூடநம்பிக்கை ஒழிப்பிற்கும் பயன்படுத்திய தந்தை பெரியாரின் குடியரசு இதழ்த் தொகுப்புகளை வெளியிடுவதற்கு, இச்சமூகத்தின் பால் அக்கறையுள்ளோர் ஆதரவு தரவேண்டுமே அன்றி, அதற்கு எதிராகச் செயல்படுவது பெரியாரியத் தை மறுத்துரைப்பதாகும். மேலும் அவரது நூல்களை அரசுடைமை யாக்குவதன் மூலம் இத்தகைய சச்சரவுகளைத் தடுத்துவிடமுடியும். பெரியார் நூல் களை அரசுடைமை யாக்குமாறு த.க. கூறியிருப்பது சரி. தமிழ்த் சமூகத்தின் அறிவொளி பாய்ச்ச வருகின்ற கருத்துப் பெட்டகங்களைத் தடைசெய்ய விழைவது வருத்தத்துக்கு உரியது.

*- கதிர்மதி, திருச்சி*

**விதண்டாவாதம்**

முனைவர் த.செயராமனின் அயோத்திதாசப் பண்டிதரின் ஒரு பைசாத்தமிழன் என்னும் கட்டுரையைக் கண்டேன். நூறாண்டுகளுக்கும் மேலாக மறைக்கப்பட்ட தமிழ் அறிவு மரபின்

மாபெரும் சிந்தனையாளரைப் பற்றி எழுதியிருப்பதும் அதனை வெளி யிட்டமையும் பாராட்டத்தக்கது.

எல்லாமே பௌத் தத்திலிருந்து வந்தது என்றும் ஆங்கிலேய ஆட்சியே பிரச்சனைகளுக்கான தீர்வு என்றும் கருதியதனை அயோத்திதாசரின் பலவீனம் என்று விமர்சித்துள்ளார். கட்டுரையாளர் வரலாற்றில் மறைக் கப்பட்ட போராளியின் கருத்துக்களை எடுத்துப்பேசும்போது சற்று தெளிவான புரிதல்களை ஏற்படுத்தும் விதத்தில் கையாளவேண்டும். ஒரு பேரறிஞர் வாழ்ந்த காலகட்டம். அவரை ஒட்டியச் செயல்பாடுகள், அக்காலச் சமூக நிலைமை, மக்களின் அறிவுச் செயல்பாடு என அனைத்தையும் ஒரு சேர அறிந்திருந்தல் அவசியமான ஒன்றாகவும் தோன்றுகிறது.

அயோத்திதாசர் பௌத்தம் என்பதனை ஒரு அரசியலாக்கமாக பூர்வவகுப்புகளை ஒன்றிணைப் பதற்கு , அணி திரட்டுவதற்கு பயன்படுத்தினார். மேம்பட்ட போக்கில் அயோத்திதாசரைப் பற்றிப்பேசுவதும், இவைகள் அவருடைய பலவீனம் என்பதும் விதண்டா வாதமாகும்.

ஆங்கிலேயர்களை இப்படிப் பேசிய தாசர் அவர்களுடைய பாதங்களில் அடிபணிந்து தூப தீபம் போடுபவராக இல்லை தப்பு நடக்கிற போதெல்லாம் சுட்டிக்காட்டினார்.

***- அ.கௌதமன் பாஸ்கரன் புதுச்சேரி.***

**முன் ஏர் போன வழி**

கொள்கை,கோட்பாடின்றி சமயசந்தர்ப்ப அடிப்படையில் அண்ணா நடையிட்டு வந்துள்ளார். அதனால் அவர் வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்ட அவர் தம்பிமார்கள் அவருக்குச் சற்றும் சோடைப் போகாதவர்களாக நடந்து கொள்கின்றனர். முன் ஏர் போன வழிதானே, பின் ஏர் போகும்.

***-ஆதன் , கொளத்தூர்***

## மதுரையில் தானி ஓட்டுநர்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள சித்திரை வீதிகளில் தானி, மகிழுந்து உள்ளிட்ட இலகுரக வாகனங்கள் செல்ல காவல்துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால் பொதுமக்கள் மிகுந்த தொல்லைக் குள்ளாகிறார்கள். வயதானவர்கள், உடல் ஊனமுற்றவர்கள்,குழந்தைகள், பெண்கள் நீண்டதொலைவு நடந்து செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மதுரை சித்திரை வீதி தானி ஓட்டுநர் நலச்சங்கத்தின் சார்பில் 18.09.2008 அன்று வடக்கு மாலை மாசி வீதி, மேலமாசி வீதி சந்திப்பில் 'சித்திரை வீதிகளில் இலகுரக வாகனங்கள் செல்ல அனுமதி கோரி' ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

தோழர் பா.இராசேந்திரன் (செயலாளர்) தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வழக்குரைஞர்கள் து.ஞா. பகத்சிங், நா.கதிர்வேல், தோழர் இரெ.இராசு (செயலாளர், த.தே.பொ.க.) ஆகியோர் விளக்க உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து தோழர் கி.வெங்கட்ராமன் (தமிழக அமைப்பாளர், தமிழகத் தொழிற்சங்க முன்னணி) சிறப்புரையாற்றினார். ஆட்டோ ஓட்டுனர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.



# த.க.இ.பே. செய்திகள்

**சென்னையில் 'தசாவதாரம்' படத்திறனாய்வு**

தமிழ்க் கலை இலக்கியப் பேரவையின் சென்னை தியாகராயர் நகர் கிளையின் மாதக் கலந்துரையாடல் கூட்டம் 20.09.2008 அன்று மாலை புதிய தமிழர் கண்ணோட்டம் அலுவலகத்தில் **தசாவதாரம்** திரைப்படம் திறனாய்வு செய்யப்பட்டது.

தோழர் க. அருணபாரதி வரவேற்றார். இன்று ஒரு தகவல் என்ற தலைப்பில் கல்வெட்டுகள் பற்றியபல அரிய செய்திகளை கல்வெட்டு ஆய்வாளர் புலவர் முத்து எத்திராசன் அவர்கள் வழங்கினார். முனைவர் க.செயபாலன் ( நந்தனம் அரசுக்கல்லூரி பேராசிரியர்) 'தசாவதாரம்' திரைப்படம் பற்றிய ஆய்வுரை நிகழ்த்தினார். பின்னர் அத்திரைப்படத்தில் அமைந்துள்ள பார்ப்பனியக் கருத்துகள் குறித்து விவாதம் எழுப்பி கண்டனம் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வுக்கு பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், திரைத்துறையினர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் தோழர் கவிபாஸ்கர் நன்றி நவின்றார் .கலந்தாய்வுக்கூட்டம் சிறப்பாக நடந்தேறியது.

**தஞ்சையில் 'என் பெயர் பாலாறு' திரையிடல் - திறனாய்வு**

தமிழ்க்கலை இலக்கியப்பேரவை , தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்த்துறை சார்பில் 30.08.2008 அன்று தஞ்சையில் என் பெயர் பாலாறு - ஆவணப்படம் திரையிடல் திறனாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது.


முனைவர் பெ.கோவிந்தசாமி தலைமைதாங்க புலவர் கோ. நாகேந்திரன் தொடக்கவுரை யாற்றினார். தொடக்கத்தில் திரு அ. தனபால் வரவேற்க முடிவில் க. செந்தில்குமார் நன்றி கூறினார்.

**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை சார்பில் வெளியீட்டாளர் : பெ.மணியரசன் 20/7, முத்துரங்கன் சாலை, தியாகராயர் நகர், சென்னை- 17 என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர் பெ.மணியரசன்**

நூல் அறிமுகம்

## சான்றோர் பட்டுணர்ந்த திருக்குறள்

**ஆசிரியர் : அற்புதம் குயில்தாசன்**



மனிதனை மனிதனாக ஆக்குகின்ற திருக்குறள், ஒரு வாழ்வியல் நூல். பல சான்றோர் பெருமக்கள் கற்றுணர்ந்த செய்திகளை அறத்தைப் போதிக்கின்ற திருக்குறளோடு ஒப்பிட்டு ; எழுதியதையும், பேசியதையும் , வாழ்வதையும் இந்நூல் சேகரித்துக் தொகுத்திருக்கிறார் நூலாசிரியர். திருக்குறள் என்பது ஒரு கடல் அதில் பலர் மூழ்கி முத்தெடுக்கலாம். சான்றோர் பட்டுணர்ந்த திருக்குறள் என்ற பாற்கடலில் மூழ்கி மனித வாழ்வியலை வரையறுத்திருப்பது சிறப்புக் குறியதாகும் .

ஒன்றே முக்கால் அடிகளில் இவ்வுலகை அடைகாத்து வைத்த பேராசான் வள்ளுவனின் அறநெறியை இந்நூலில் சமூகவியலோடு ஒப்பிட்டு தொகுக்கப்பட்டிருக்கிறது.

வெளியீடு :
அற்புதம் குயில்தாசன்
பேரறிவாளன் இல்லம் ,
11, கோ.க.தங்கவேல்தெரு,
சோலையார் பேட்டை, வேலூர் மாவட்டம்.

பக்கம் : 232
விலை : ரூ.100/-

## நமது உரிமைகள் நமது கைகளில்

**ஆசிரியர் : வழக்குரைஞர் அஜிதா**



இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் பிரிவு மூன்றில் இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை சமத்துவ உரிமை, கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, வாழ்வுரிமை சுரண்டலுக்கு எதிரான உரிமை, இன, மொழிக் கூறுகளுக்கான உரிமை, சிறுபான்மை மற்றும் மத, பண்பாட்டுரிமை என வரையறுக் கப்பட்டுள்ளன.

மனிதனின் அடிப்படை மனித மாண்பு மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை அங்கீகரிப்பது மட்டுமே மனிதகுலத்தின் விடுதலையையும், நீதியையும் அமைதியையும் நிலைநாட்டும். சட்டத்தின் துணையோடு மனித உரிமைகளை நிலை நிறுத்தி கள ஆய்வு நூலாகிய இது உரிமை இழந்தவர்கள் கைகளில் இருக்கவேண்டிய உண்மை உரைகல்.


வெளியீடு :
செம்பண்ணையுடன் இணைந்து
**பாரதி புத்தகாலயம்**
421, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 18.

பக்கம் : 48
விலை : ரூ.10/-

## அணு உலை ஒரு சதிவலை

**ஆசிரியர் : மு.செந்திலதிபன்**

இந்திய - அமெரிக்க அணுசக்திஒப்பந்தம் குறித்த, புள்ளிவிவரங்களோடு இந்நூல் ஆராய்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் நம்மைச் சுற்றிப் படரவிடும், சதிவலையைப் பட்டவர்த் தனமாகத் தெளிவுப்படுத்துகின்றன. இந்திய ஆளுமையை எப்படிகாயப்படுத்தும் இந்த அணுசக்தி ஒப்பந்தம் என்பதை நூலாசிரியர் பல ஆவணங்களுடன் தந்திருக் கிறார்.




ஏற்றுக்கொள்ள முடியாத இந்த ஒப்பந்தத்தினால் பெரும் பள்ளத்தில் மக்களை தள்ளுவதற்கு அமெரிக்காவும் - இந்தியாவும் முனைப்போடு செயல்படுவதை இந்நூல் ஆணித் தரமாய் ஆராய்கிறது.

**பக்கம் : 108**
**விலை : ரூ.40/-**

வெளியீடு :
**ஆனந்தி பதிப்பகம்**
எண்.26, 3-ஆவது
முதன்மைச்சாலை, கிருஷ்ணா நகர்,
அஸ்தினாபுரம், குரோம்பேட்டை,
சென்னை - 44.

## சயாம் மரண ரயில்

**ஆசிரியர் : சண்முகம்**

இரண்டாம் உலகப்போரில் தனது ஆக்கிரமிப்புப் போர்த் தேவைக்காக பாசிச ஜப்பான் சயாம் (தாய்லாந்து) தொடங்கி பர்மா வரை இருப்புப் பாதை போட்டது. அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு சிக்கி உயிரிழந்த இலட்சக் கணக்கான தமிழர்களின் சோக வரலாறு இந்நூலில் உணர்ச்சிப் பொங்க ஆதாரங்களோடு வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் இவ்வரலாற்றுக் கொடுமை சரிவர அறியப்படாத சூழலில் இந்நூல் அதனை விரிவாக விளக்குகிறது.

வெளியீடு :
தமிழோசை பதிப்பகம்
1050, சத்தி சாலை,
காந்திபுரம், கோவை - 12.

பக்கம் : 304
விலை : ரூ.150/-

**பிழைத்திருத்தம்**

செப்டம்பர் 2008 இதழில் 'சிங்கள அரசுக்கு ஆய்தம் கொடுக்காதே சென்னையில் ஆர்ப்பாட்டம்' என்ற செய்தியில் அந்நிகழ்வு திரு பழ.நெடுமாறன் தலைமையில் நடந்தது என்பதும், திரு தொல்.திருமா வளவன் உரையாற்றினார் என்பதும் விடுபட்டுள்ளது தவற்றுக்கு வருந்துகிறோம்.